# பகவானும் பக்தனும்

கர்மயோகி

மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி
5, புதுவை சிவம் தெரு
வெங்கட்ட நகர் விரிவு
பாண்டிச்சேரி - 605 011

பதிப்புரிமை : கர்மயோகி ©

முதற் பதிப்பு : மே 2003

ஒளி அச்சுக்கோர்வை : அகம்
128, முதல் தளம்
டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை
மயிலாப்பூர், சென்னை - 600 004.

அச்சு : அகரம்
மனை எண் 1
நிர்மலா நகர்
தஞ்சாவூர்

விலை : ரூ. 100/-

# பகவானும் பக்தனும்

# The Life Divine

*__The Life Divine__ நூலைப் பல ஆண்டுகளாகப் படித்தவர், பல முறை படித்தவர், பெரும்பாலும் புரிந்து கொண்டவர் பகவானை மானஸீகமாகச் சந்தித்துத் தமக்குப் புரிந்தவற்றையும், புரியாதவற்றையும் கூறினால், பகவான் என்ன பதில் கூறியிருப்பார் என்பதைக் கற்பனையாக எழுதுவது கீழ்க்கண்ட கேள்வி-பதில். பகவானை சூட்சும லோகத்தில் தரிசித்தால் அவர் மனம் நமக்குப் புரியும் என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டு இதை எழுதுகிறேன்.*

பக்தன் - நூலில் நீங்கள் முக்கியமாகக் கூறுவது பிரம்மத்தின் முழுமை என நான் புரிந்து கொண்டேன்.

## காலம்

**பகவான் - அது அறிவுக்குப் புரியாது, தெரியாது என்பது முக்கியம்.**

பக்தன் - காலத்துள் காலத்தைக் கடந்த நிலைக்குப் புரியும், தெரியும் என நான் புரிந்து கொண்டது சரியா, தவறா?

**பகவான் - அதுவே ரூபம், மௌனம், சலனம், சிருஷ்டியிலும் உள்ளது.**

பக்தன் - நூல் முழுவதும் இந்த நிலையை - காலத்தின் மூன்றும் நிலையை - ஒவ்வோர் அத்தியாயத்திலும் அதற்கேற்றபடி கூறுகிறீர்கள் என நினைக்கிறேன்.

**பகவான் - அது ஒரு வகையில் சரி. நான் அதை நேரடியாக, வெளிப்படையாக அங்கெல்லாம் எழுதவில்லை. அப்படிப் புரிவதால் உள்ளே ஏதாவது மாற்றம் தெரிகிறதா?**

பக்தன் - அமைதி, ஜோதி தவிர வேறெதுவும் தெரியவில்லை.

பகவான் - அது என்ன அமைதி, என்ன ஜோதி எனப் புரிகிறதா?

பக்தன் - புரியவில்லை.

பகவான் - அவை இந்த மூன்றாம் நிலைக்குரிய அமைதி, ஜோதியாகும்.

பக்தன் - இதுவரை அப்படிப் புரியவில்லை. பிரார்த்தனை பலிக்கும் பொழுது பலன் பெறுவதன் பின் **process, essence** முறையும், மூலமும் உண்டு என்று நினைத்தேன். பலனே மூன்றாம் நிலைக்குரியது எனத் தோன்றவில்லை.

பகவான் - முறையும், மூலமும் எந்நிலைக்குரியதோ, அதே நிலைக்கே பலனும் உரியது என்று மனம் அறியாது. மனம் அவற்றைப் பிரித்துவிடும்.

பக்தன் - சர்வம் பிரம்மம், ஏகம் ஏகதுவித்தியம் என்று ரிஷிகள் அவற்றைக் கண்டபின், ஜீவாத்மா அழியக் கூடியது என்றது மனம் செய்ததா?

பகவான் - பலன் வரும்பொழுது சத்தியஜீவியமும் வருகிறது. மனம் பலனை அதனின்று பிரித்துத் தனியே பெற முயல்கிறது.

பக்தன் - மனம் குறுக்கே நிற்கிறது என்பதே உண்மையானால் மனத்தை விலக்கிப் படித்தால், **The Life Divine** தெளிவாகப் புரியும் என்பது உண்மையா?

பகவான் - உண்மை.

பக்தன் - ஆங்கிலம் சரிவரப் படிக்க முடியாத பெண் சாவித்திரியைப் படித்தபொழுது பல பக்கங்கள் தொடர்ந்து புரிந்ததாக எழுதியது உண்மை என்று கொள்ளலாமா?

பகவான் - அது மொழியறிவில்லாமல் நேரடியாகப் புரிந்து கொண்டது.

பக்தன் - இரண்டாம் புத்தகத்தின் முதல் அத்தியாயம் 'பிரபஞ்ச சிருஷ்டி, பிரம்ம சிருஷ்டி' சத்திய ஜீவியம் சிருஷ்டிப்பதாகக் கூறுகிறது. அது புரியும். அந்த அத்தியாயம் அங்கு வரும் முக்கியத்துவம் என்ன?





பகவான் - 56ஆம் அத்தியாயத்தில் மனிதன் என்பவன் மனமில்லை, சத்திய ஜீவியம் என்று ஆரம்பித்து இனிப் பரிணாமம் ஞானத்திற்குடையது என்று முடிகிறது. உலகம் மனத்தை மனிதனுக்கெனக் கருதுவதால் நமக்கு எதிரியுண்டு. கடவுள் இல்லை, மோட்சம் வேண்டும், கர்மம் உண்டு, எதற்கும் எந்த நேரமும் பஞ்சம் வரும், துன்பமும், மரணமும் தவிர்க்க முடியாதவை எனப் பல கருத்துகள் உலகில் நிலவுகின்றன. அவற்றுள் ஒன்று உலகம் மனத்தால் சிருஷ்டிக்கப்பட்டது. அடுத்தது அகந்தையால் சிருஷ்டிக்கப்பட்டது. இக்கருத்துகள் மனதில் உள்ளவரை, கடைசி அத்தியாயம் - முக்கியமானது - புரியாது. அதை மாற்ற எழுதப்பட்டது முதல் அத்தியாயம்.

பக்தன் - கடைசி அத்தியாயத்தின் கடைசிப் பகுதியில் ஆன்மீக வாழ்வு எளிமையாக இருக்க வேண்டும் என்பதில்லை, எளிமையாகவோ, வளம் நிறைந்ததாகவோ இருக்கலாம் என்ற கருத்து மனம் நம்பும் மூடநம்பிக்கையை மாற்றக் கூறியதன்றோ!

பகவான் - அதற்குமுன் திருவுருமாற்றம் தவிர்க்க முடியாதது என்பதும் அப்படிப்பட்ட கருத்தாகும்.

பக்தன் - எப்படி?

பகவான் - செல்வமானாலும், சந்தோஷமானாலும், ராஜ்யமானாலும் நம் கருத்து என்ன? நம் கருத்து மனத்தின் கருத்து. மனம் செல்வம் அதிகப்படப் பிரியப்படும். எதுவும் வளர வேண்டும் என்பது மனம். திருவுருமாற்றம் என்பதே மனம் அறியாதது. *அதனால் இந்த யோகம் பூர்த்தியாகத் திருவுருமாற்றம் அவசியம், வளர்ச்சி போதாது என்பது வலியுறுத்தப் படுகிறது.*

பக்தன் - அதற்குமுன் சரணாகதியைப் பற்றிக் கூறுகிறீர்கள்.

பகவான் - திருவுருமாற்றத்தை சரணாகதியின்றி அடைய முடியாது.

பக்தன் - சரணாகதியைப் புரிந்துகொள்ள முடிவேயில்லை. சரணாகதியே யோகம் எனத் தோன்றுகிறது. புத்தகக் கருத்துகளை முடித்த பிறகு அதை விவரமாகப் பேச வேண்டும். இந்தக் கடைசி

அத்தியாயத்தில் சரணாகதிக்கு முன் கூறும் எல்லாக் கருத்துகளும் இதுபோலவே நூலுக்கு முக்கியமா?

பகவான் - அதற்குமுன் கூறும் கருத்து யோகம் அகத்திற்குரியது.

பக்தன் - அது முன் அத்தியாயத்திலும் முக்கியமாக வருகிறது.

பகவான் - எந்தக் கருத்திற்கும் பல அம்சங்களுண்டு. நூலில் இதர சம்பந்தப்பட்ட அம்சங்கள் எழும்பொழுது அவை சுட்டிக் காட்டப்படும். முடிவாக வலியுறுத்துவது வழக்கம்.

பக்தன் - யோகம் அகத்திற்குரியது என்பதின் சிறப்பென்ன?

பகவான் - இரண்டாம் புத்தகம் 3ஆம் அத்தியாயத்தில் ஜீவாத்மாவே பரமாத்மா எனக் கூறும்பொழுது, பரமாத்மா பிரபஞ்சத்தின் மையமாக அகத்துள் தோன்றுகிறான் என்று கூறப்பட்டபொழுது இக்கருத்தை முதலில் காண்கிறோம்.

பக்தன் - இது இறைவனின் யோகம், மனிதனுக்குரியதன்று என்பது வெளிவருகிறது.

பகவான் - ஆம்.

பக்தன் - முன் அத்தியாயத்தில் - 26. சத்தியஜீவன் - புறம் அகமானால் யுகம் க்ஷணமாகும் என்று வருகிறது.

பகவான் - இந்த யோகத்தைப் புறத்தால் செய்ய முடியாது, மெதுவாகச் செய்ய முடியாது, முக்கால்வாசி செய்ய இயலாது. அதனால் அகம் முக்கியம் என உபநிஷதம் கூறுவதைச் சொல்லி முடிக்கிறோம்.

பக்தன் - அதற்குமுன் **conscious, universal, full, powerful** முழுமை, பிரபஞ்சம், சக்தி, விழிப்பு என்று வருகிறது.

பகவான் - புத்தகத்தின் முதல் அத்தியாயத்தில் முரண்பாட்டைப் பற்றிப் படிக்கிறோம். மனம் சத்திய ஜீவியமாக வேண்டும் என்று முடிவான அத்தியாயத்தில் கூறுவதை மனத்தின் முரண்பாடு, சத்திய ஜீவியத்தின் உடன்பாடாக வேண்டும் என்று முதல் அத்தியாயம் சொல்கிறது.

பக்தன் - காலத்திற்கு 3 நிலைகள் உள்ளதுபோல் அனைத்திற்கும் உள்ள 3 நிலைகளை எல்லா அத்தியாயங்களிலும் புரிந்து கொள்வது





நூலைப் புரிந்துகொள்ள உதவும் என்பதே என் மனத்தில் ஆழமாக உள்ளது.

பகவான் - ஒருவகையில் அது சரி. அதுவே நூலைப் புரியப் போதும்.

பக்தன் - அதுபோன்று முக்கியமானது வேறு ஏதாவது உண்டா?

பகவான் - உண்டு. அவையும் இதனுள் வரும். அகம், புறம் என்பது புறம் வாழ்வு, அகம் தவம் என்பதுடன் எல்லா யோகங்களும் முடிந்து விடுகின்றன. *மூன்றாம் நிலை புறத்தைத் தன்னுட் கொண்ட அகம். அது நமக்குரியது.* பெரியது, கட்டுக்கடங்காதது. கடைசி அத்தியாயத்தில் அகம் வருவதைப் பார்த்தோம். அது தவசிகட்குரிய அகமன்று. பிரம்ம ஜனனத்திற்குரிய அகம். இதுவரை அறிந்த அகம் பிரம்மத்திற்குரியது, இது ஆன்மீகப்புரட்சி.

பக்தன் - உதாரணம்.

பகவான் - கார் கிராக்கியாக இருந்தபொழுது முன்பணம் கட்டிக் காத்திருந்தோம். சுலபமாகக் கிடைக்கும்பொழுது கார் வியாபாரி லோன் ஏற்பாட்டுடன் வீட்டிற்கு வருகிறார். இவையிரண்டும் நாம் அறிந்தது. கார் கிராக்கியாக இருக்கும்பொழுது மலிவாகக் கிடைக்கும் நேரம்போல் கார் கம்பனி நடந்தால், அந்தக் கம்பனி மிக மிகப் பெரிய கம்பனியாகும். இன்று அது உலகில் இல்லை. இதை அம்மூன்றாம் நிலையாகக் கொள்ளலாம்.

பக்தன் - மருமகளிடம் மாமியார் அன்பால் தானே மருமகளாக நடப்பது.

பகவான் - நாம் குழந்தைகளிடம் அதுபோல் நடப்பதுண்டு.

பக்தன் - மூன்று திருவுருமாற்றம் என்ற அத்தியாயத்திற்குப்பின் தெய்வீக வாழ்வு வரும் என நினைத்தேன். இடையில் இரண்டு வேறு அத்தியாயங்கள் உள. ஏன்?

பகவான் - கடைசி அத்தியாயத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள இந்த இரண்டு அத்தியாயங்களும் அவசியம்.

1. அகத்தில் யோகம் க்ஷணத்தில் முடியும்,
2. பாதாளம் பரமாத்மாவால் திருவுரு மாறும்,

- என்ற இரண்டும் பெரிய கருத்துகள். அவை 56 அத்தியாயத்தில் வருவதால் முன்கூட்டி இவை விளக்கப்படுகின்றன.

பக்தன் - அகம் அவ்வளவு பெரியதா?

பகவான் - பிரபஞ்சத்தை உட்கொள்ளும் அகம் பெரியதன்றோ?

பக்தன் - இந்த யோகத்தில் புறத்தில் செய்வது ஒன்றுமில்லையா?

பகவான் - உலகத்தையும், பிரபஞ்சத்தையும் அகத்துள் கொண்டுபோனால், ஜடத்தை ஆன்மா ஆளும். யோகம் க்ஷணத்தில் முடியும். *அசையாது உள்ளேயுள்ள பிரம்மம் அசைந்து வெளியில் உலகமாக ஜனிக்கும்.* எல்லாம் உள்ளேயிருக்கும்பொழுது வெளியில் என்ன இருக்கிறது? புறம் என்பதே அகமாயிற்றே.

பக்தன் - பிரம்மத்தைப் பற்றிச் சொல்லுங்கள்.

பகவான் - எல்லாம் ஒரே மாதிரியான அணுவால் செய்யப்பட்டவை என விஞ்ஞானம் கூறுகிறது. எல்லாம் சக்திமயமானவை எனவும் கூறுகிறது. எல்லாம் பிரம்மம் என்பது ஒருபடி தாண்டியது தானே.

பக்தன் - அதற்கும் அடுத்த கட்டம் பிரம்ம ஜனனமாயிற்றே.

பகவான் - பிரம்மத்தை மேலேயும், உள்ளேயும் அசைவற்ற அனந்தமாகக் காண்பது முடிவான சித்தி. அதற்கடுத்த இரண்டு கட்டங்கள்,

1. அப்பிரம்மத்தை முழுமையான பிரம்மமாகவும்,
2. அது சிருஷ்டியாக ஜனிப்பதுவும் அவை.

பக்தன் - எதைத் தெரிந்தால் எல்லாம் தெரியும் என்பது பிரம்மத்தை உள்ளே அசைவற்றுக் காண்பது என்று கூறலாமா?

பகவான் - அது சரி. அசைவற்ற பிரம்மத்திற்கு அதைக் கடந்த சில நிலைகள் உள்ளன. இது அக்ஷரப்பிரம்மம்.

பக்தன் - அக்ஷரப்பிரம்மம், புருஷோத்தமன், ஈஸ்வரன், **supreme** கடந்த நிலை என்பனவெல்லாம் தெரிகின்றன. மேலும் விளக்கம் தேவை.





பகவான் - விளக்கம் மட்டும் புரியாது. அனுபவம் வருமுன் பெறும் விளக்கம் தெளிவு தாராது. இதுவரை ரிஷிகள் பரப்பிரம்மம், பராபுருஷா, பராத்பரா என்று கூறியவை முடிவான கட்டங்கள். *முடிவானவை என்றாலும் அவை மனத்தின் சித்திக்கு முடிவானவை.*

(**MLA**, மந்திரி பதவி, முதல்வர் என்பவை அரசியல் பதவிகளில் முடிவானவை என்றாலும், மாநிலத்தைப் பொருத்தவரை முடிவானவை. மாநிலம் பகுதி. அகில இந்தியாவில் அதே போன்ற பகுதிகள் முழுமையானவை. அச்சொற்களைப் பயன்படுத்தினால் பழைய பொருளை நினைப்பார்கள் என்பதால் பகவான் **Supreme, Supracosmic, Transcendent** என்ற ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துகிறார்.)

பக்தன் - இதுவரை கேட்டவை முடிவானவை, மனத்திற்கு முடிவானவை. பகவான் கூறுவது முழுமைக்கு முடிவானவை. அகந்தை காலத்தைக் கடந்தது என்றால் அகந்தையை ஜீவாத்மாவாகப் புரிந்து கொண்டது தவறு என்று எப்படிக் கூற முடியும்? வேத ரிஷிகள் சரணாகதியால் அகந்தையை அழித்து மோட்சம் பெற்றனர் என்றால் அவர்கள் சரணாகதியையும், அகந்தையையும் அறிந்தவர்கள்.

பகவான் - அது பெரிய விஷயம். அன்றைக்குப் பெரிய விஷயம். அதில் சந்தேகமில்லை.

பக்தன் - அந்தச் சரணாகதியும் திருவுருமாற்றத்திற்கு இல்லையே. இப்படிச் சொல்லலாமா? இளம் வயதில் எளிதில் தியாகம் செய்யலாம். வயது வந்த பிறகு கடினம். சிறிய சொத்தைத் தானம் தரலாம். பெரிய சொத்தைத் தானம் தருவது சிரமம். நம்மைச் சரணடையலாம், நம்மைச் சார்ந்தவர்கள் சார்பாகச் சரண் அடைவது கடினம் என்று சொல்லலாமா?

பகவான் - சரணாகதியும், அகந்தை அழிவதும் பெரியவை. நீ சொல்வதும் உண்மை. **MLA** பதவியை தம்பிக்கு விட்டுக்கொடுப்பதும், முதல்வர் பதவியை விட்டுக் கொடுப்பதும் ஒன்றாகாது.

பக்தன் - திருவுரு மாற்றம் என்றால் கெட்டது நல்லதாக மாறுவது எனக் கொள்கிறோம்.

பகவான் - கெட்டதோ, நல்லதோ self - existent good அந்த மூன்றாம் நிலையின் முழுமையை அடைவது திருவுருமாற்றம்.

பக்தன் - திருடுபவன், திருட்டை நிறுத்துவது திருவுருமாற்றம் என நினைக்கிறோம். அது மாற்றம். திருடுபவன், திருட்டை நிறுத்தியபின் திருட முடியாத மனநிலை பெற்று, அவன் வீட்டில் வரும் திருடனை ஆண்டவன் அருள் என அறியும் மனநிலை திருவுருமாற்றம் என்கிறீர்கள்.

பகவான் - ஆம். நாம் உள்ள எந்த நிலையும் பகுதி. அவை நல்ல பகுதியாகவோ, கெட்ட பகுதியாகவோ இருக்கும். மூன்றாம் நிலை முழுமை. பகுதி பிரம்மத்தில் முழுமை பெறுவது திருவுருமாற்றம்.

பக்தன் - அதைச் சாதிப்பதால் சரணாகதி பெரியதாகிறது. இலட்சியம் உயர்ந்தால் சரணாகதியின் தரம் உயருமா?

பகவான் - ஆம், வேதகால மோட்சம் ஆத்மா பெற்றது.

பக்தன் - அதையே உடல் பெறுவது திருவுருமாற்றம். அதுவும் நாம் பெறுவதுபோல் நம்முடன் உள்ளவர் அனைவரும், நம் உலகம் முழுவதும் பெற வேண்டும் என்பதா?

பகவான் - ஆம்.

பக்தன் - அமெரிக்காவுக்கு visa வாங்கிப் போவது, green card பெறுவது, citizenship பெறுவதுபோல் பல நிலைகள் உள்ளன. மோட்சம் என்றால் அமெரிக்காவுக்குப் போய் அங்கேயே தங்குவதுபோல. நாம் திரும்பி வந்து நம் வீட்டில் உள்ளவர், நம் ஊர், உலகம் அமெரிக்க செல்வத்தை இங்கு இப்பொழுது பெறுவது திருவுருமாற்றம்போல எனக் கூறலாம் போலிருக்கிறது.

பகவான் - பொருத்தமானது.

பக்தன் - பள்ளிக்கூடம், கல்லூரிகள் பலதரத்தவை. உயர்ந்தவை என்றால் உயர்ந்த பட்டம் தரும். நாம் கூறும் புதிய கல்வி பட்டத்தைக் கடந்தது, அறிவைக் கடந்தது, ஞானத்தையும் கடந்தது. அப்படி ஒரு பள்ளியை மனிதன் கற்பனை செய்ய முடியுமா?

பகவான் - நாம் புதியதைப் பழையதன் மூலம் புரிந்து கொள்கிறோம்.

பக்தன் - அது ஒன்றுதான் நாங்கள் அறிந்தது. பணிவு, அடக்கம் புரியும். சுதந்திரத்தில் அடக்கம் என்றால் அன்பால் ஆள்வது என்பது





நம் வாழ்விலோ, இலக்கியத்திலோ, தவத்திலோ கேள்விப்படாதது. புதியதையும் தாண்டிய புதுமையுடையது. இந்த நோக்கம் The Life Divine புரிய உதவும்.

பகவான் - முரண்பாடு, உடன்பாடு இரண்டையும் அறிவோம். முதல் அத்தியாயம் கூறுகிறது. முதல் அத்தியாயக் கருத்துகளை - உடன்பாடு, ஆர்வம், சுமுகம், பரிணாமம், பகுத்தறிவு - கடைசி அத்தியாய முடிவுகளைக் கொண்டு ஆராய்ச்சி செய்யலாம்.

பக்தன் - அப்படி என்றால் ஆர்வம் பக்தியாகாது. மனம் சத்திய ஜீவியமாகும் ஆர்வம், பகுதி முழுமை பெறும் ஆர்வம், நம் நிலை திருவுருமாறும் ஆர்வம் என்றாகும்.

பகவான் - இது மனம் பரந்து விரிவதாகாது. இது மனம் உயர்ந்து, உயர்வதால் பரந்து விரிந்து, பரந்து விரிவதால் உயர்ந்து, மாறி, திருவுரு மாறி சத்தியஜீவிய நிறைவு பெற்று மனிதன் பிரம்மமாகி, பிரம்மம் பிரகிருதியில் ஜனிப்பதாகும்.

பக்தன் - இந்த விளக்கம் யோகச் சுருக்கம், The Life Divine முழுவதை யும் கூறுகிறது. கேட்க நன்றாக இருக்கிறது. மனம் நிறைகிறது. இப்படி ஓர் இடம் இருப்பதாக நாங்கள் அறிய முடியாது. சரணாகதி இதைச் சாதிப்பதால் பிரம்ம முத்திரை பெறுகிறது.

பகவான் - இவ்வளவும் முடிந்த பிறகு மனம் இந்த சித்தி எளிமையாக இருக்க வேண்டும் என விழையும். எளிமை உயர்ந்தது என்பது மனம் ஏற்றது.

பக்தன் - அரச பதவி வந்த பிறகு மரத்தடியில் மர உரியுடனிருப்பது அவசியம் என மனம் வலியுறுத்தும். அமெரிக்கச் செல்வம் பெற்ற பின் நகரமெல்லாம் கிராமப்புறமாக இருந்தால் இலட்சியமாக இருக்கும் என ஏங்கும். ஆன்மீகம் ஆடம்பரமாகவும், வளமாகவுமிருக்கும் என மனம் ஏற்காது.

பகவான் - எளிமை, விஸ்வாசம், கற்பு, நாணயம், தர்மம் ஆகியவற்றை விட்டு வெளிவருவது மனத்திற்கு முடியாதது. தர்ம புத்திரர் சூதாடுகிறார். அதுவே நாம் ஏற்க முடியாதது. சொத்தை இழக்கிறார். தம்பிகளை இழக்கிறார். திரௌபதியை இழக்கிறார். அவளை மானபங்கப்படுத்துவதையும் ஏற்கிறார்.

பக்தன் - இதெல்லாம் வாழ்வில் இருக்கின்றன என்பதை பாரதம் படித்தாலும் நாம் ஏற்பதில்லை.

பகவான் - ஏற்று மகிழ்ந்து திருவுரு மாற்றுவது யோகம்.

பக்தன் - பகவான் குரலானாலும், மனம் கேட்கக் கூசுகிறது.

பகவான் - மனிதனுக்கு பகவான் வேண்டாம், அவனே வேண்டும்.

பக்தன் - அந்த நிலையை மனிதன் கடக்க முடியுமா?

பகவான் - தானே முடியாது.

பக்தன் - சரணாகதி செய்யுமா?

பகவான் - ஊம்.

பக்தன் - அது வேண்டாம்.

பகவான் - சரி, எழுந்து போகலாம்.

பக்தன் - ஏன், அதற்குள் போகின்றீர்கள்?

பகவான் - அந்தச் சரணாகதி வேண்டும் என்று சொன்னால், செய்ய முடியாது, வேண்டாம் என்றால் நூல் புரியாது. பேசுவது பலன் தாராது.

⌘ ⌘ ⌘

*பல ஆண்டுகள் கழித்து பக்தன் பகவானைத் தேடி வருகிறான்.*

பக்தன் - அன்று வேண்டாம் என்றதை இன்று வேண்டும் என்று வந்திருக்கிறேன்.

பகவான் - ஆயிரம் முறை ஒரு விஷயத்தை நாடினாலும் அது கிடைப்பதில்லை. அது தானே வருவது அருள். ஒரு முறை வாயால் வேண்டாம் என்றாலும் உடனே போய்விடும். இந்த ஜென்மத்தில் திரும்பி வாராது.

பக்தன் - ஏன் அப்படி?

பகவான் - அது புரிய அந்தச் சரணாகதியை மனம் ஏற்க வேண்டும்.





பக்தன் - அன்னையிடம் போனது, பலமுறை திரும்ப வருவதைக் கண்டிருக்கிறேன்.

பகவான் - முதலில் சொல்லியது அதிர்ஷ்டம். அடுத்த கட்டம் அருள். நீ பார்த்தது அன்னை அருள்.

பக்தன் - உதாரணம் மூலம் சொன்னால் தேவலை.

பகவான் - எவரும் தானே சம்பாதிப்பார்கள், பெற்றோர் சொத்தைப் பெறுவார்கள். அடுத்தவர் அவர் சம்பாதித்ததை மற்றவர்க்குத் தருவது வழக்கமில்லை.

பக்தன் - அது சுவீகாரம்.

பகவான் - சுவீகாரம் பிள்ளையில்லாத சொத்து. சிலர் அதையும் பெறப் பிரியப்பட மாட்டார்கள்.

பக்தன் - பிள்ளையிருக்கும்பொழுது ஏன் மற்றவர்க்குத் தருவான்?

பகவான் - அது உலக வழக்கன்று. அப்படி வந்தால் "வேண்டாம்" என்றால்,

பக்தன் - அது திரும்ப வாராது.

பகவான் - அதைத்தான் அதிர்ஷ்டம் மறுமுறை வாராது என்றேன்.

பக்தன் - பெறத் தகுதியில்லை என்று பொருளா?

பகவான் - ஊரில் ஒரு கம்பனி ஆரம்பித்து நாணயமானவரைத் தலைவராக்கினால் அது அருள் போன்றது.

பக்தன் - அவை 100 ஆண்டுகட்கு முன் இல்லாதவை.

பகவான் - அன்னை தருவது 1000 ஆண்டில் நடக்காதது.

பக்தன் - அதற்கு நம்மைப் பாத்திரமாக்கினால் “வேண்டாம்” என்றால் விலகுவது நியாயம். அப்படி விலகாமல் மீண்டும் மீண்டும் வருகிறதே.

பகவான் - அது பேரருள். அது வேண்டாம் என்றாலும் வரும். வருவதை நிறுத்தினால், மனிதன் அதன் பின்னே போய் அதைப் பெற 1000 ஆண்டாகும்.

பக்தன் - கவர்னர் நம் கிராமத்திற்கு வந்தபொழுது தருவதைப் பெற மறுத்தால், மீண்டும் நம்மால் கவர்னரை வரச் சொல்ல முடியுமா?

பகவான் - இனிமையைக் கசப்பாக வழங்குவது வாழ்வு.

பக்தன் - கசப்பை இனிமையாக நாட வேண்டுமா?

பகவான் - கசப்பை இனிமையாக நாடினால் அன்னை கசப்பை இனிமையாக்குவார்.

பக்தன் - மகன் தகப்பனாரை அன்னையைத் தரிசிக்கச் சொன்னால், தகப்பனாருக்கு மகன் தன் வழிக்குத் தம்மை இழுப்பதாகக் கசப்படைகிறார். ஏற்றால் தரிசனம் ஆனந்தப் பெரு வெள்ளமாகிறது.

பகவான் - நீ வேண்டாம் என்றது அப்படித்தான்.

பக்தன் - இப்பொழுது வேண்டும் என்றாலும் மனம் கசங்குகிறது.

பகவான் - கசப்பு அறியாமை என அறிவது அறிவு.

பக்தன் - *கசப்பை இனிமையாக அறிவது பிரம்ம ஞானமா?*

பகவான் - அப்படி அறிவது கசப்பை இனிமையாக மாற்றும்.

பக்தன் - அந்த ஞானம் முரண்பாட்டை உடன்பாடாக்குமா?

பகவான் - நாம் உடன்பாடு என்பது முரண்பாடு நீங்குவதாகும். **Contradiction, conflict, compromise, reconciliation, harmony, union, unity** முரண்பாடு, பிணக்கு, ஒத்துப் போவது, உடன்பாடு, சுமுகம், ஒருமை, ஒற்றுமை என ஜடத்திலிருந்து சத்வரை நிலைமை மாறும்பொழுது, முரண்பாடு மூன்றாம் நிலை உடன்பாடாகிறது. மூன்றாம் நிலை உடன்பாடு ஐக்கியமாகும். உதாரணம் தேவையில்லை.

பக்தன் - தினசரி வீட்டில், ஊரில், அரசியலில் நடப்பதுதானே. தத்துவம் நன்றாக இருக்கிறது. மனம் அமிர்தமாக வேண்டும். ஜடமும், ஆன்மாவும் இரு நிலைகளை உயர்ந்து அடைந்து ஒன்றாவதை இப்படிப் புரிந்து கொள்ள வேண்டும்.

பகவான் - தத்துவமாகச் சுலபமாகச் சொல்லலாம். மனத்தில் உணர்ச்சியாக எழுவது அனுபவம். எந்த மாமியாரைக் கட்டையால் அடிக்க அடிக்கடித் தோன்றுமோ, மனம் இருவருக்கும் மாறிய நிலையில் அவர்களைக் கட்டிப் பிடித்துக் கொள்ள ஆசையாக இருக்கும். அரசியலில் கட்சி





மாறுபவர்களைக் காணலாம். மேடையில் ஏறி எதிர்க்கட்சித் தலைவரைத் திட்டும்பொழுது உணர்ச்சி வசப்பட்டு பேச்சு காவியமாகும். அவனே கட்சி மாறிய பிறகு தலைவர் துதிபாட துடிப்பதைக் காணலாம். அந்தக் கட்சியில் இதுவரை எவரும் அவரைப் பாராட்டாதவாறு ஆர்வமாகப் பேசுவான். திட்டியபொழுது காவியம் எழுந்தது. பாராட்டும் பொழுது இலக்கிய நயம் இசையாக எழும். அன்று வசைமாரி பொழியத் துடித்த மனம், இன்று சொல்லை மாலையாக்கிச் சூட விரும்பும். *இது மாறிய உள்ளத்தின் மகிமை.* அன்றும் பொய்யில்லை, இன்றும் உணர்ச்சி உண்மையானது. மனிதன் எதிரியாக இருந்து நண்பனாக மாறும் நிலை இது. *மனிதச் சுபாவம் தெய்வக் கருணையாக மாறுவது முரண்பாடு உடன்பாடாவது.* ஜடம், ஜடமாகத் தெரிகிறது. ஆன்மா தியானத்தில் ஜோதியாகத் தெரிகிறது. ஜீவன் அறிவு மையத்தை விட்டு ஜீவியத்திற்குப் போனால் ஜடமான ஜடம் சக்திமயமான அலைகளாகவும், ஜோதியான ஆன்மா அதே போன்ற சக்தி அலைகளாகவும் தோன்றி இரண்டும் ஒன்றே என அறிவுக்கு உணர்த்தும்.

பக்தன் - இந்த அனுபவம் ரிஷிகள் பெற்றதா? பெறாததா?

பகவான் - அவர்கள் பெற்றார்களா, பெறவில்லையா என்பது தெரியாது. பெற்றதாக எங்கும் சொல்லவில்லை. *இது **Cosmic Consciousness** பிரபஞ்ச ஜீவியம்.*

பக்தன் - ரிஷிகள் பெறாததை அன்னை நமக்குத் தருவார் என்பது இதுதானா?

பகவான் - தியானத்தில் பலருக்கு இந்த அனுபவம் ஏற்படும். தியானம் **unconscious** ஆக இருப்பதால் அவர்கள் இதை அறிவதில்லை. நாம் உலகைக் கடந்து பிரபஞ்சத்தைப் பார்க்கும் நேரம் பலமுறை வந்தாலும், நாம் அதை அறிவதில்லை. அது பிரார்த்தனையின் பலனாக வருவதை நாம் பலன் என நினைக்கிறோம்.

பக்தன் - ஒருவர் காலின் மீது குழந்தை ஏறிக் குதித்தபொழுது கால் வலித்து டாக்டரிடம் காண்பித்தார். தசை (**ligament**) அறுந்து

விட்டது, அது ஒன்றும் செய்யாது. அதிகமாக நடந்தால் வலிக்கும். வலிக்கு மாத்திரை தரலாம். *அறுந்த தசை கூட வைத்தியமில்லை என்றார்.* அவர் அன்னையை நினைத்து வலிக்கும் இடத்தை வருடிக்கொடுக்க ஆரம்பித்தார். நாளடைவில் வலி நின்றுவிட்டது.

பகவான் - உலகில் இன்றில்லாத பலனை அன்பர்கள் இதுபோல் பெறும் நேரம் அவர்கள் ஆத்மா பிரபஞ்ச ஜீவியத்தைத் தொடுகிறது. அது தெரிவதில்லை. அதன் பலன் தெரிகிறது.

பக்தன் - அடுத்த கட்டத்தில் Transcendent Consciousness ஜடமும், ஆன்மாவும் இணைவதும் இதுபோல் என்றால், சைனாகாரனை கல்கத்தாவில் சூட்சுமத்தில் கண்ட அன்னை திரும்ப அனுப்பியது அதுபோல் எனக் கூறலாமா?

பகவான் - Transcendent என்றால் கடந்தது, கடந்து உயர்ந்தது எனப் பொருள். காலத்தைக் கடந்தது, அகம் - புறம் என்ற நிலைகளைக் கடந்தது, பிரபஞ்சத்தைக் கடந்தது, சச்சிதானந்தத்தைக் கடந்தது எனப் பொருள்.

பக்தன் - சிருஷ்டியில் சத்புருஷன் வெளிப்பட்டபின், வேறெதுவும் எழாத நிலையா?

பகவான் - நமக்குக் காலத்தில் இல்லாதது, பிரபஞ்சத்திலில்லாதது, அகத்திலில்லாதது, சச்சிதானந்தத்திலுமில்லாததது நடந்தால் அது கடந்தது எனப் பொருள். எதிரி படையெடுத்து வந்தவன் தானே திரும்பப் போனான் என்பது அது போன்றது. USSR தலைவர் தன் ராஜ்யத்தையும், தன் கட்சியையும் தானே கலைத்தார் என்பது இக்கடந்த நிலைக்குரியது. இந்நிலையில் சத்தும், அசத்தும் பிரம்மமாகத் தெரியும். *அது தெரிவதில்லை. பலன் வரும்.*

பக்தன் - 3½ லட்சம் முதல் போட்ட கம்பனியின் இரு பங்குதாரர்கள் கம்பனியின் மார்க்கட் விலை 20 லட்சம் உயர்ந்தபொழுது பணம் போட்டவர் அடுத்தவர் கூட்டாளியில்லை, வேலைக்கு வந்தவர், விலக வேண்டும் எனக் கேஸ் போட்டார். மார்க்கட் விலை 20 லட்சம் பெறும் என்றாலும் சிக்கலிருப்பதால் எவரும் 10 லட்சத்திற்கு மேல் தரமாட்டார்கள். பணம் போட்டவர் 5 லட்சத்திற்கு விலை கூறினார். விலை போகவில்லை. கேஸ் போட்டார். பிராதில் வக்கீல், என் கட்சிக்காரர் போட்ட பணத்தைத் திருப்பித் தருவேன் என்ற பங்குதாரர் தரவில்லை எனக் குற்றம் சாட்டினார். பங்குதாரர் 10 லட்சம் கொடுத்து விடுதலை பெறத் தயாராக இருக்கும்பொழுது எதிரி வக்கீல் 3½ லட்சம் கேட்பது வழக்கு அறியாதது. *பக்தர் மனம் கடந்த நிலையை எட்டியதை பிராது கூறுகிறது* என்று அறிய வேண்டுமா? நம் அன்றாட அனுபவங்களின் ஆன்மீக அர்த்தம் புரியுமானால், தியானத்தில் அந்த அனுபவம் ஏற்படும் என்று கூறலாமா?





பகவான் - ஆமாம். புத்தகம் புரியும். மனம் தடையில்லாவிட்டால் *முழுமையாகப் புரியும். புரிகிறது என்பதும் புரியும்.*

பக்தன் - பல அத்தியாயங்கள் தொடர்புள்ளன என்பதற்கு 5ஆம் அத்தியாயத்தையும் 17, 18 அத்தியாயங்களையும் கூறலாமா?

பகவான் - 5 உம் 6 உம் முதல் புத்தகத்தில் கூறுபவை எளியவை, அவற்றை 17, 18இல் விவரமாகக் கூறுகிறேன். 5இலும், 6இலும் பிரம்மம், பிரபஞ்சம், மனிதன் மூன்றும் ஒவ்வொன்றும் மற்ற இரண்டிலும் இருக்கிறது. பிரபஞ்சமும், மனிதனும் ஒருவரை ஒருவர் பூர்த்தி செய்கின்றனர் என்கிறேன். 17, 18 அத்தியாயங்களில் முன் கூறியவற்றை விவரமாக எப்படிச் சாதிப்பது என்பது பற்றியது. 5ஆம் அத்தியாயத்தில் வாழ்வு என்பது பிரம்மம், பிரபஞ்சம், மனிதன் ஆகிய மூன்றிற்கும் உரிய பொது மையம் எனவும் மூன்றையும் தன் வாழ்வில் இணைப்பது மனிதனுடைய கடமை என்றும், 17ஆம் அத்தியாயத்தில் எதை அறிந்தால் எல்லாவற்றையும் அறியலாமோ அது மேலேயுள்ளது. அதன் மூலம் கீழேயுள்ளதை அறிய வேண்டும் எனவும் கூறுகிறேன். 18ஆம் அத்தியாயத்தில் அதைச் சாதிக்க புறம் அகமாகவும், நாம் மேல் நோக்கியும் செல்ல வேண்டும். மனிதன் இறைவனையும், இயற்கையையும் தன்னுள் இணைத்து மேலே எழுவதைப் பரிணாமக் கோணத்தில் பார்க்க வேண்டும், இப்பரிணாமம் மேலும், கீழும் செல்லக் கூடியது. அதுவே அதன் பரிணாம இரகஸ்யம் ஆகும் எனவும் கூறுகிறேன்.

பக்தன் - ஏன் மேலும், கீழும் போக வேண்டும்?

பகவான் - உயர்வது போதும் எனில் மேலே போனால் போதும். முழுமை வேண்டுமெனில் மேலும், கீழும் போக வேண்டும். அத்துடன் பரிணாமம் எனில் புது ரூபங்களை ஏற்படுத்தி, உயர்த்தி, மேலே போய் அங்குள்ளவற்றுடன் இணைய வேண்டும்.

பக்தன் - புதிய செல்வம், பதவி வந்தால் மேலே உயருகிறோம். அதற்குரிய வீடு, வாகனம், பழக்கம் பெற வேண்டும். ஏற்கனவே அங்குள்ளவர் நம்மைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதனால் தலைப்பு இந்த அத்தியாயத்திற்கு **Ascent and Integration** என்பது.

பகவான் - அஞ்ஞானத்தைப் பற்றி அறிவது முக்கியம்.

பக்தன் - பரிணாமம் என்பது ஞானம், அஞ்ஞானத்திலிருந்து வெளிவருவது என்றால் ஞானமும் அஞ்ஞானமும் முக்கியமாகின்றது. அவை முதல் புத்தகத்தில் வரவில்லை. 28ஆம் அத்தியாயத்தில் வரும்பொழுது பிறகு பார்க்கலாம் என வருகிறது.

பகவான் - இந்த சிருஷ்டிக்கு அஞ்ஞானம் முக்கியம். ஆனால் சிருஷ்டிக்கன்று. அஞ்ஞானமில்லாமல் சிருஷ்டியிருக் கலாம், இந்த சிருஷ்டி இருக்க முடியாது.

பக்தன் - வேதம், உபநிஷதம், ஸ்ரீ அரவிந்தம் இதுப்பற்றி எப்படி வேறுபடுகின்றன?

பகவான் - ஆண்டவனை அறிவது ஞானம் (சித்தி), அறியாதது அஞ்ஞானம் (அசித்தி) என்பது வேதம். ஞானமும் அஞ்ஞானமும் ஆண்டவனோடு முடிந்து விடுகின்றன. உலகம் புறக்கணிக்கப்படுவதால், முழுமையில்லை. ஆண்டவனை அறிவது ஞானம் (வித்யா), உலகத்தை அறிவது அஞ்ஞானம் (அவித்யா) என்பது உபநிஷதம். ஆண்டவன், உலகம் இரண்டையும் குறிப்பிடுவதால் வேதத்தை ஒருபடி கடந்து வருகிறது. ஆனால் ஆண்டவனையும், உலகையும் இணைக்கும் இடமில்லை என்பதால் முழுமையில்லை. ஸ்ரீ அரவிந்தம் ஞானம் (knowledge) தன்னுள் தானே மறந்து அஞ்ஞானமாயிற்று (ignorance) என்பதால் ஞானத்தையும் அஞ்ஞானத்தையும் இணைத்து முழுமையை ஏற்படுத்துகிறது. *ஞானமே அஞ்ஞானம், அஞ்ஞானமே ஞானம் என்பது ஸ்ரீ அரவிந்தம்.*





பக்தன் - ஏன் ஞானம் அஞ்ஞானமாக மாற வேண்டும்?

பகவான் - பிரம்மம் ஆனந்தம் பெற மறைந்து கண்டுபிடிக்க முடிவு செய்ததால் ஞானம் அஞ்ஞானமாகிறது.

பக்தன் - சத், சித், ஆனந்தம், சத்திய ஜீவியம், அவற்றின் 12 அம்சங்களும் அப்படி மறையும்பொழுது, ஏன் ஞானத்தைப் பற்றி மட்டும் பேச வேண்டும்?

பகவான் - சத், சித், ஆனந்தம், சத்திய ஜீவியம், ஆன்மாவின் 12 அம்சங்களும் தன்னுள் தானே மறைகின்றன. ஞானத்தைப் பற்றிக் கூறியதுபோல் இந்த 16 அம்சங்களையும் விளக்கிக் கூறலாம். வேதமும், உபநிஷதமும் ஞானத்தைப் பற்றிப் பேசியதால், நாமும் அதன் மூலமே பேச வேண்டியிருக்கிறது.

பக்தன் - ஞானம் எப்படி அஞ்ஞானமாகிறது?

பகவான் - மறதி மூலம் மறைந்து அஞ்ஞானமாகிறது. பிரம்மத்தை - ஆதியை - அறிவது பூரண ஞானம், அதை மறப்பது ஆதியின் அறியாமை.

பக்தன் - பிரம்மம் முயன்று தன்னை மறக்கின்றதா?

பகவான் - அதுவே சிருஷ்டி.

பக்தன் - மறதி சிருஷ்டியென்றால், நினைவு பரிணாமம் என்று கூறலாமா?

பகவான் - தான் மறைந்து மறந்ததை பிரம்மம் நினைவுபடுத்துவது பரிணாமம். கடவுளை மறப்பது பிரபஞ்ச அஞ்ஞானம். பிரபஞ்சத்தை மறப்பது அகந்தையின் அஞ்ஞானம். தான் காலத்தைக் கடந்தவன் என்பதை மறப்பது காலத்தின் அஞ்ஞானம். சிருஷ்டிக்குப் பல்வேறு லோகங்களுண்டு என்பதை மறப்பது மனத்தின் அஞ்ஞானம். நம் மனமும், உணர்வும், உடலும் ஒன்று என்பதை மறப்பது நம்

நிலையின் அஞ்ஞானம். அடுத்து எதைச் செய்வது என்றறியாதது நடைமுறை அஞ்ஞானம்.

பக்தன் - இந்த அஞ்ஞானங்களைக் கடந்து ஞானம் பெறுவதெப்படி?

பகவான் - இவற்றின் சிக்கல் நம் நிலையிலிருப்பதால், (constitution) நாம் நம் நிலையை உணர்வது சிக்கலை முதலில் அறுக்க உதவும். *உணர்வு அறிவை ஏற்க வேண்டும்.*

பக்தன் - அது சுலபத்தில் முடியாதே. குறை கூறாதே என அறிவு கூறுகிறது. அறிவு சொல்வதால் குறை கூறாமலிருப்பது உணர்வு அறிவை ஏற்பதாகும்.

பகவான் - அறிவு ஏற்பதை உணர்வு ஏற்பதானால் குறையை உணரக்கூடாது.

பக்தன் - கூறாமலிருக்கலாம். உணராமலும் இருக்க முடியுமா?

பகவான் - இதைச் செய்த பிறகு மற்றவற்றிற்கு வழி பிறக்கும்.

பக்தன் - மற்ற நிலைகளைப் பற்றியும் கூறலாமா?

பகவான் - கூறலாம். ஒரு நிலையைக் கடந்தால் அதைப் பற்றிச் சொல்வது புரியும். *உணர்ச்சி அறிவை ஏற்றால் மற்ற லோகங்களிருப்பது புரியும்.*

பக்தன் - அது பெரிய விஷயமாயிற்றே.

பகவான் - அந்த லோகங்களில் சஞ்சாரம் செய்பவர் காலத்தைக் கடக்கலாம்.

பக்தன் - காலத்தைக் கடப்பது முடிவானதாயிற்றே.

பகவான் - அதற்கடுத்த 3 படிகள் உள்ளன.

பக்தன் - அது இருக்கட்டும், ஜீவாத்மா, பரமாத்மாவைப் பற்றி சொல்லுங்கள்.

பகவான் - ஜீவாத்மா விடுதலை பெற்று பரமாத்மாவை அடைவது மோட்சம், என்று இதுவரை கேள்விப்பட்டோம். இது ஆண்டவன் திருவுள்ளத்தைப் பூர்த்தி செய்யாது. பையன் வளர்ந்தபின் படித்து பட்டம் பெற்று வேலைக்குப் போனால் அவன் காரியம் பூர்த்தியாகும். பையனே குடும்பம். பையன் தானே படிக்கவில்லை. குடும்பம் அவனைப் படிக்க





வைக்கிறது. படித்துப் பட்டம் பெற்று திரும்ப குடும்பத்திற்கு வந்து மற்ற பிள்ளைகளையும் தன்னைப்போல் படிக்க வைப்பது அவன் கடமையைப் பூர்த்தி செய்யும்.

பக்தன் - சரி, மோட்சம் வேண்டியதில்லை என்று ஏற்றுக் கொள்வோம். நீங்கள் சொல்வதை எப்படிச் செய்வது?

பகவான் - வீட்டில் எவரும் படிக்காமல், ஒருவனைப் படிக்கவைத்தால் அது மேலே சொன்னதுபோலப் போகும். எல்லாப் பிள்ளைகளும் படிக்க வேண்டும் என்றால் வீடு படிப்பை ஏற்கும். அனைவரும் படிக்க வேண்டும் என்று ஆரம்பத்திலிருந்து முயல்வது அனைவரும் படிக்க உதவும்.

பக்தன் - ஒருவன் படித்து சம்பாதித்துக் குடும்பத்தைக் காக்க வேண்டும் என்றால், ஒருவன் படிப்பான், சம்பாதிப்பான், குடும்பத்தை விட்டுப் போய் விடலாம். எல்லோரும் படிக்க வேண்டும் என்றால் நிலைமை மாறுகிறது. மனமே மாறும், வீட்டைவிட்டுப் போக முடியாது. *படிப்பால் சம்பாதிக்கும் பணம் முக்கியமானால், அது வாராது. முக்கியத்துவத்தை பணத்திலிருந்து படிப்புக்கு மாற்றினால் படிப்பு அனைவருக்கும் வரும்.*

பகவான் - படிப்பவன் சுயநலத்தை விட்டால்தான் அது முடியும்.

பக்தன் - அதுபோல் மோட்சம் முக்கியமில்லை, எல்லாக் கரணங்களும் திருவுருமாற வேண்டும் என்றால் அது முடியுமா?

பகவான் - ஜீவாத்மாவால் அதைச் செய்ய முடியாது. சைத்தியப் புருஷனே செய்யும். சைத்தியப் புருஷன் சுயநலமற்றது.

பக்தன் - ஏன் சைத்தியப் புருஷனுக்குள்ள பரநலம் ஜீவாத்மாவிற்கில்லை.

பகவான் - சைத்தியப் புருஷன் முழுமையை நாடுபவன். முழுமையை நாடினால் சுயநலம் வாராது. ஜீவாத்மாவுக்கு அம்முழுமையில்லை.

பக்தன் - சைத்தியப் புருஷனுக்கு முழுமை எப்படி வந்தது?

பகவான் - எல்லாக் கரணங்களின் அனுபவச் சாரத்தை ஆத்மாவில் சேர்ப்பது சைத்தியப் புருஷன். எல்லாவற்றையும் தழுவுவதால், அதற்கு முழுமையுண்டு.

பக்தன் - ஜீவாத்மாவே பரமாத்மா என்ற அத்தியாயத்தைக் கூறுங்கள்.

பகவான் - நாம் அகந்தையை அழித்தவுடன்

புருஷன் வெளிவருகிறான்.

இவன் உலகத்து ஜீவன் (world being).

அகந்தை அழிந்தவுடன் நாம் அழிவதில்லை.

அகந்தை செய்த வேலையைப் புருஷன் செய்கிறான்.

உலகம் பெற்ற அனுபவத்தை ஒருவனுக்கு அளிக்கிறான்.

பக்தன் - மனிதன் என்றால் உலகத்தை அறிய வேண்டும் என்பதால் புருஷன் மனிதனுக்கு உலகத்தை அறிவிக்கின்றானா?

பகவான் - மனிதன் உலகத்தை மட்டுமன்று, பிரம்மத்தையும் அறிய வேண்டும்.

பக்தன் - அதை எப்படிச் செய்வது?

பகவான் - சுயநலம் போனவுடன் அகந்தை போய் விடுகிறது. மனிதனால் உலகத்தை அறிய முடிகிறது. அதேபோல் புறத்திலிருந்து அகத்திற்கு வந்தால் உலகம் உள்ளே தெரியும். அதன் மையமாகப் பிரம்மம் தெரியும். *அந்தப் பிரம்மம் பரமாத்மா.*

பக்தன் - ஜீவாத்மாவே பரமாத்மா என்று அறிய அகந்தை அழிந்து, உலக அனுபவத்தை உள்ளே பெற்று, புறத்திலுள்ள உலகை அகத்தில் கண்டால் ஜீவாத்மாவே பரமாத்மா எனத் தெரியும்.

பகவான் - இந்த வழியில் மோட்சமில்லை. ஜீவாத்மா திருவுருமாறி பரமாத்மா ஆகிறது.

பக்தன் - நாம் செய்ய வேண்டியது சுயநலத்தை அழிக்க வேண்டியது.

பகவான் - நம் சுயநலம் போனால் அகந்தை புருஷனாகும். உலகின் சுயநலம் போனால், பிரபஞ்ச ஆத்மா (world being) பரமாத்மாவாகும்.

பக்தன் - இவ்வளவும் நூலில் 1 பக்கத்தில் அடங்குகிறது. 40 பக்கமாயிற்றே அந்த அத்தியாயம்.





பகவான் - எப்படி ரிஷிகளும், விஞ்ஞானிகளும் இதைத் தவற விட்டு விட்டார்கள் என்பதை விளக்க அத்தனைப் பக்கங்களை எழுத வேண்டியுள்ளது.

பக்தன் - பிரம்மம், எத்தனை ரூபங்களெடுத்தாலும், பிரம்மமாகவே இருக்கிறது, மாறவில்லை என்பது நீண்ட விளக்கம். கட்டித் தங்கத்தால் நகை செய்தால் அதுவும் தங்கம் என்பதை மக்கள் மனத்தில் உள்ள கேள்விகளை எழுப்பி, பதில் சொல்ல பல பக்கம் விளக்கம் எழுத வேண்டியிருக்கிறது. எதிர்ப்பு என்பதை அதிகமாகப் பாராட்டக் கூடாது என்பது அடுத்தது. காலம் உலகை சிருஷ்டிக்கவில்லை என்பது மூன்றாவது.

பகவான் - 7 அஞ்ஞானங்களில் பிரபஞ்ச அஞ்ஞானத்திற்கடுத்தது காலத்தைப் பற்றிய அஞ்ஞானம். பிரபஞ்சம் முதலில் சிருஷ்டிக்கப்பட்டது. அதைத் தாங்க காலம் ஏற்பட்டது. காலம் உலகை சிருஷ்டித்தது என்ற கொள்கை நிலவுவதால், அது முரணானது என்பதால் சிக்கல் எழுகிறது, அறவில்லை.

பக்தன் - எதிர்ப்பு... ...

பகவான் - பிரம்மத்தின் அடிப்படை unity ஒற்றுமை. மனம் அதைப் பிரித்துப் பார்க்கும்பொழுது எதிர்ப்பு ஏற்படுகிறது. மனமே முடிவன்று, சத்திய ஜீவியம் முடிவு, எதிர்ப்பைப் பாராட்டினால், மனமே முடிவாகும்.

பக்தன் - உதாரணம் தர முடியுமா?

பகவான் - 100 குடிசை வீடுகள் ஒன்றாக வரிசையாக இருந்தால் ஒருவர் அடுத்தவர் மீது பகைமை கொள்ளலாம். வீடு பற்றிக்கொண்டால் பகைமை போய்விடும்.

பக்தன் - நல்ல உதாரணம் இல்லையா?

பகவான் - பங்காளிக் காய்ச்சல் எலக்ஷன் வந்தபொழுது ஊரே ஒரு கட்சியாக ஓட்டுப் போடும்பொழுது பங்காளிகள் சேர்ந்து கொள்வார்கள்.

பக்தன் - குடும்பத்தில் எப்படி இதைக் கடைப்பிடிப்பது?

பகவான் - எவன் தன்னைக் குடும்பத்திற்கு, ஊருக்கு அர்ப்பணிக்கின்றானோ, அவன் பக்தனானால், நாட்டிற்கு, மாநிலத்திற்குத் தலைவனாவான்.

பக்தன் - அது என்ன சக்தி, எப்படி நடக்கிறது?

பகவான் - குடும்பத்தை ஏற்பது பரநலம், ஊரை ஏற்பது சேவை. அவை நம்மை அகந்தையினின்று விலக்கும். அன்பராதலால் அன்னைச் சூழல் அகந்தையற்றவரை பிரபஞ்சத்தையும், பரமாத்மாவையும் உணரச் செய்யும். அந்த சக்திகள் நம் வாழ்வில் செயல்படுகின்றன.

பக்தன் - மறுபிறவியைப் பற்றி நம் பரம்பரை என்ன கூறுகிறது?

பகவான் - மறுபிறவியுண்டு என்பதை அனைவரும் அறிவர். ஆத்மா மோட்சத்தை நாடுவதால் மறுபிறவி அதற்குப் பொருட்டன்று. மாயாவாதிக்கு மறுபிறவியும் மாயை. முழுமையாக விடுதலை பெற்ற ஆத்மா பரிணாம வளர்ச்சி பெற மறுபிறவி அவசியம்.

பக்தன் - நூலின் மறுபிறப்பைப் பற்றிய 3 அத்தியாயங்கட்குப் பின்னால் **Evolution of man, Spiritual man** என்ற அத்தியாயங்கள் வருவதால் மறுபிறப்பு அனுபவத்திற்குப் பின்னால்தான் மனிதன் பூரணம் பெற முடியும் எனக் கொள்ளலாமா?

பகவான் - அது நூலில் இரண்டாம் புத்தகத்தின் இரண்டாம் பகுதிக்குரியவை. அப்பகுதியில் முதல் அத்தியாயம் ஜீவாத்மாவோ, பரமாத்மாவோ முடிவல்ல, இரண்டும் சேர்ந்த பிரம்மமே முடிவு என்பது. அடுத்த அத்தியாயம் வாழ்வு என்பது முழுமையானது, பரமாத்மாவை விலக்காதது, கடந்ததையும் தன்னுட் கொண்டது என்பது. *முடிவான பிரம்மத்தை மையமாகக் கொண்ட முழுமையான வாழ்வில்,* பரமாத்மாவையும், பாதாளத்தையும் மனிதன் தன்னில் இணைக்க வேண்டும் என்று மூன்றாம் அத்தியாயம் கூறுகிறது. இணைந்தபின் மேலே செல்வது அடுத்தது. ஐந்தாம் அத்தியாயம் 7 அஞ்ஞானங்களை விலக்குவது. பிரம்மத்தை அறிந்தாலும் வாழ்வில் ஏற்பது குறையாக இருக்கும். பரமாத்மாவும், பாதாளமும் இணைந்து உயர்ந்த பின்னும் அஞ்ஞானங்கள் மிஞ்சும் என்றாகிறது. புனர்ஜென்மம் என்பது ஆன்மா வளர்வது, பரிணாம வளர்ச்சி பெறுவது. பிரம்மத்தை வாழ்விலறிந்து முழுமைபெற்று அஞ்ஞானத்திலிருந்து விலகிய பின் பரிணாம வளர்ச்சி. இத்தனையும் முடிந்தும், மனிதன் முழு மனிதனாவதில்லை. ஒரு பிறவியில் இவ்வுடலின் திறமை தீர்ந்தபின் ஆத்மா புதிய அனுபவம் பெற புதிய உடலை நாடுகிறது. அப்படியின்றி ஆன்மா வளரும்பொழுது *உடலின் ஜீவியமும் வளர்ந்தால்* உடலை மாற்ற வேண்டிய அவசியமில்லை என்பது அடுத்தது.

பக்தன் - இவ்வளவும் முடிந்த பின் மனிதன் ஆன்மீக மனிதனாவதில்லையா?

பகவான் - தான் பெற்றதைப் பிறருக்கு அளிக்க முடிவது ஆன்மீக மனிதனாக்கும்.

பக்தன் - அதையும் சாதித்த பிறகுதான் திருவுருமாற்றமா?

பகவான் - அப்படித்தான் என்றாலும், அத்தியாயங்கள் வரிசைப்படி மாற்றம் எழுவதாகக் கொள்ள முடியாது. சொல்வதை ஒரே சமயத்தில் சொல்ல முடியாது என்பதால் அத்தியாயங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வருகின்றன. அவற்றுள் நீ கூறுவதும் உண்மை. முதல் புத்தகத்தில் 26, 27 அத்தியாயங்கள் கூறுவது ஜடம் உற்பத்தியான பிறகு எழுவது எனக் கொள்வது தவறாகாது. அதையே சட்டமாக எல்லா இடங்களிலும் சொல்ல முடியாது.

பக்தன் - முதல் புத்தகம் சிருஷ்டி ஏற்பட்ட வகை. இரண்டாம் புத்தகம் அஞ்ஞானம் ஞானமானதும், ஞானம் ஆன்மாவாவதும் என்று புரிகிறது.

பகவான் - ஞானம் ஆன்மாவாவதன் மூலம் திருவுரு மாறி சத்திய ஜீவியமாகிறது.

பக்தன் - பரிணாமம் அத்துடன் முடிகிறது.

பகவான் - **Supramental being**க்கு அடுத்த **species** நிலை ஆனந்தமயப் புருஷன்.

பக்தன் - அதைப்பற்றி **The Life Divine**இல் எழுதவில்லையா?

பகவான் - ஆம், எழுதவில்லை.

பக்தன் - ஆனந்தமயப் புருஷன் என்ன செய்து அவனுடைய பரிணாமத்தைப் பூர்த்தி செய்கிறான்?

பகவான் - ஆனந்தம் ஜீவியமாகி, ஜீவியம் சத்தாகி, சத் பிரம்மமானால் பரிணாமம் முடியும்.

பக்தன் - ஜீவியத்திலிருந்து **Superconscient**க்குப் போவதே பெரிய இரகஸ்யம் என்கிறீர்களே.

பகவான் - அது முடிவான இரகஸ்யம் **(Supreme Discovery).**

பக்தன் - தத்துவம் புரிகிறது. என்றாலும் உதாரணம் உதவும்.

பகவான் - சந்தர்ப்பம் எழும்பொழுது எல்லாவற்றிற்கும் உதாரணம் கூறுகிறேன்.

பக்தன் - மேல்மனம், உள்மனம், அடிமனம் விளக்கம் தேவை.

பகவான் - நாமறிந்தது அவ்வளவும் மேல்மனம்.

பக்தன் - உள்மனத்தில் புருஷனும், நிர்வாணமும், சைத்தியப் புருஷனுக்குரிய கதவும் உண்டு என்பதென்ன?

பகவான் - ரிஷிக்கு நிஷ்டை பலிக்கும்பொழுது சாட்சிப்புருஷன் தெரிவான். அது உள்மனத்திற்குரியது. அதன் மூலம் அவர் மோட்சம் பெறுகிறார்.

பக்தன் - எப்படி?

பகவான் - சாட்சிப் புருஷன் என்பது மனோமயப்புருஷன். ஜீவாத்மாவின் பகுதி மனத்திற்குரியது. அதன் மூலம் ஜீவாத்மாவையும், அதன் மூலம் பரமாத்மாவையும் ரிஷி அடைந்து மோட்சம் பெறுகிறார்.

பக்தன் - உள்மனம் பூரண யோகத்திற்கு உதவாதா?

பகவான் - பூரண யோகத்தில் மனத்திற்கு மேலேயுள்ள ஆன்மீக மனம் - முனி, ரிஷி, யோகி, தெய்வம் - வழியாக சத்தியஜீவியம் போகிறோம். அதற்கு உள்மனம் வழிவிடும்.





பக்தன் - உள்மனம் வந்து மீண்டும் உயர்ந்து ஆன்மீக மனம் செல்கிறோம். அப்படியே சத்தியஜீவியம் போக முடியாதா?

பகவான் - சத்தியஜீவியம் போக உள்மனத்தைத் தாண்டி அடிமனம் எட்ட வேண்டும். சைத்தியப் புருஷன் அங்குள்ளது.

பக்தன் - எது உள்மனம், எது அடிமனம் என்று கூற முடியுமா?

பகவான் - தியானத்தில் நாம் லயிப்பது உள்மனம். அப்பொழுது மௌனமிருப்பது முனிவர் நிலை. காட்சி தெரிவது ரிஷி நிலை. காட்சியுமின்றி நாளைக்கு நடக்கப் போவது யோகிக்குத் தெரியும். அது நமக்குத் தெரிவது யோகியின் நிலை. தடைகளைக் கடந்து தியானத்தால் காரியம் முடிவது தெய்வநிலையை எட்டியதற்கு அர்த்தம்.

பக்தன் - அடிமனம் என்பது?

பகவான் - தியானத்தில் மௌனம் வரும். ஓரிரு மைல் தூரத்தில் நடக்கும் செய்தி காட்சியாகவோ, ஒலியாகவோ தெரிவது அடிமனம்.

பக்தன் - எப்படி அது உண்மை என்று தெரியும்?

பகவான் - 10 மைல் தூரத்தில் பஸ்ஸில் நண்பர் தெரிகிறது. ½ மணிக்குப் பிறகு வருகிறார் என்றால் புரியும். அப்படி புரியாதவையும் தெரியும்பொழுது *உண்மை என உணர்த்தும்.* நிரூபிக்க முடியாது.

பக்தன் - மனம் நிரூபணம் கேட்காது.

பகவான் - நிரூபணம் கேட்பவருக்கு இவையெல்லாம் தெரியாது.

பக்தன் - இதுவரை சொன்ன தத்துவங்களை நடைமுறையில் பயன்படுத்தும் வழியும், அங்கு, தத்துவம் எப்படி வெளிப்படுகிறது என்பதும் எனக்கு முக்கியம்.

பகவான் - ஓர் உதாரணத்தின் மூலம் 10 அல்லது 100 தத்துவங்களை விளக்கலாம். ஏனெனில் ஒன்றில் அடங்குவது பல, அனந்தம். ஒவ்வொரு முறையும் மனம் புதிய உதாரணம் கேட்கிறது. காலம் சுருங்குவது இன்று ஆயிரம் வழிகளில்

நடக்கின்றன. அதை நாம் டெக்னாலஜி எனப் புரிந்து கொள்கிறோம். *டெக்னாலஜியால் பயன்பட மனமும், ஜீவியமும் உயர்ந்திருக்கின்றன என்பதை நாம் காண்பதில்லை.*

பக்தன் - உள்மனத்திற்குத் தியானத்தாலும், அடிமனத்திற்குச் சமர்ப்பணத்தாலும் போகிறோம்.

பகவான் - ஆம்.

பக்தன் - ரிஷிகள் அடிமனத்தைப் பற்றி என்ன சொல்கிறார்கள்?

பகவான் - அடிமனம் அவர்கள் அறியாததில்லை. அவர்கள் யோகமெல்லாமல் மேல்மனத்துடன் நின்று விட்டன.

பக்தன் - கல்லூரி பட்டம் தருகிறது. ஆராய்ச்சி செய்பவர்கட்கு பெரிய ஆராய்ச்சிப் பட்டங்களை அளிக்கிறது. ஐன்ஸ்டீன் போன்ற மேதைகள் கல்லூரிகளில் கற்பித்துள்ளனர். ஆனால் மேதைகளைத் தயார் செய்வதை எந்தக் கல்லூரியும் மேற்கொள்ளவில்லை. ரிஷிகளை சத்தியஜீவியம், அடிமனம் விஷயத்தில் அதுபோல் சொல்லலாமா?

பகவான் - சொல்லலாம். உதாரணத்தை அடிப்படையாகக் கொண்டு மேலும் கேள்விகள் எழுப்பாவிட்டால் இதுவரை உதாரணம் பொருந்தும்.

பக்தன் - இதுவரை மேதைகள் தாமே எழுந்தனர். மேதைகளைத் தயார் செய்வது என்பது இதுவரையில்லை. ரிஷிகள் சத்திய ஜீவியத்தைத் தனிப்பட்ட முறையில் அடைந்துள்ளனர். சத்திய ஜீவியம் உலகில் இறங்கி வந்து அனைவருக்கும் பயன்படும் முறை இதுவரையில்லை என்பதுபோல் கூறலாமா?

பகவான் - கூறலாம். உதாரணம் (analogy) அத்துடன் நிற்க வேண்டும்.

பக்தன் - உலகில் மேதைகள் ஏராளமாகப் பிறக்கும் நேரம் வந்து விட்டது என்பது உண்மையா?

பகவான் - நேரம் வந்து விட்டது என்றால் தானே நடக்கும் என நினைத்துக் கொள்வார்கள். கம்ப்யூட்டர் அதுபோல் பரவுகிறது. எதையும் எடுத்துச் செய்தால் விரைவாகப் பரவும். சத்தியஜீவியசக்தி உலகிலிருப்பதை அறிந்து அத்துடன் தொடர்பு கொள்ள அனைவரும் முயன்றால், அந்த நேரம் வந்து விட்டதாகக் கூறலாம். இல்லாவிட்டால் மேதை இன்றுபோல் 100 ஆண்டுகளில் ஓரிருவர் உதயமாவார்.





பக்தன் - ஐக்கியம், சத்தியம், நன்மை, ஞானம், சக்தி, அன்பு ஆகியவை ஒன்றுபோல் பூரணமாக உலகம் காத்திருக்கிறது என்ற கருத்தை ஆசிய நாடுகளில் வறுமையிருப்பதற்குக் காரணமாகக் கூறி விளக்க முடியுமா?

பகவான் - நம் நாட்டில் 200 ஆண்டுகட்குமுன் கல்வி பரவினாலும், முன்னோடிகளே பலன் பெற்றனர். 1960க்கு மேல்தான் கல்வி தானே பரவுகிறது.

பக்தன் - வசதியில்லை என்பதைக் காரணமாகக் கூறலாமா?

பகவான் - 100 அல்லது 150 ஆண்டுகட்கு முன்னும் வசதியற்ற குடும்பங்கள் பல கல்வியை நாடின. ***Enterprise, leadership, alertness*** விழிப்பு, சுறுசுறுப்பு, ஆர்வம், தலைமை ஆகியவைகட்குப் பங்குண்டு. வசதி வந்தால் அனைவரும் பெறுகின்றனர். வசதி வருமுன் ஆர்வமானவர் பெறுகின்றனர். இன்று சத்தியஜீவிய விஷயத்தில் ஆர்வமிருந்தால், நீ கேட்கும் சட்டத்தை ஆர்வம் தானே பூர்த்தி செய்யும். ஆர்வமில்லாவிட்டால், உன் சட்டப்படி மெதுவாக நடக்கும்.

பக்தன் - இன்று ஆர்வமுள்ளவர், மேதைகளைத் தயார் செய்ய முனைகிறார் என்பதை விட சத்தியஜீவியம் செயல்படும் முன்னோடி என்று கூறலாமா?

பகவான் - ஆமாம். அது சரி.

பக்தன் - இந்த ஆறு அம்சங்களும் சத், சித், ஆனந்தத்தின் அம்சங்களா?

பகவான் - சத் என்பது புறமானால் சத்தியம். சித் என்பது ஞானம், சக்தி. ஆனந்தம், அன்பு. சத்தியமும் ஞானமும் சேர்ந்தால் நல்லது வரும். *சிருஷ்டிக்கு முன் சத் கடந்த நிலையில்* ***transcendent*** ஆக *உள்ளபொழுது அதற்கு ஐக்கியம் உண்டு.*

பக்தன் - நம் வாழ்வில் இந்த அம்சங்கள் செயல்படுவதைக் கேட்கப் பிரியப்படுகிறேன்.

பகவான் - பரம்பரைச் செல்வம் பண்புடன் சேர்ந்த குடும்பங்கள் செழுங்கிளை தாங்கி வாழும் குடும்பங்கள். அங்குத் தலைவருக்கு வயதும் அனுபவமும் நிறைந்த நேரம் இந்த அம்சங்கள் நிறைவு படுவதைக் காணலாம். நேருவின் குடும்பம் அப்படிப்பட்டது என்பதால் 40 ஆண்டு நாட்டை ஆண்டது.

பக்தன் - அப்பண்பு சத்தியஜீவியத்திலிருந்தால்......

பகவான் - அவர்கள் உலகில் முதன்மையான குடும்பமாக இருப்பார்கள். நாட்டை ஆளவும் முன்வரமாட்டார்கள். செல்வத்தைத் தேடமாட்டார்கள். பதவியை நாட மாட்டார்கள். இன்று அதுபோன்ற குடும்பமில்லை.

பக்தன் - பிரபஞ்ச சிருஷ்டியில் நூல் **Determinism** நிர்ணயத்தை முக்கியமாகக் கூறுகிறது. ஆக்ஸிஜன், ஹைடிரஜனிலிருந்து நீர் வருவது எப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்பதறிந்து நான் கூறும் உதாரணம் சரியா என்று கூற வேண்டும். கையில் பணம் இருந்தால் தொழில் ஆரம்பிக்கும்பொழுது எந்தத் தொழில் என்பதை நாமே நிர்ணயிக்கிறோம். அது வேறெந்த காரணத்தாலும் நிர்ணயிக்கப்படவில்லை. அதுபோல் நீர் உற்பத்தியாவதை **self conception** மூலம் **infinite** நிர்ணயிக்கிறது என்று கூறலாமா?

பகவான் - எந்த நிமிஷமும் நாம் எதையாவது முடிவு செய்தபடியிருக்கிறோம். அவையெல்லாம் நமது முடிவுகள். நம்மைக் கட்டுப்படுத்த எவரும் இல்லை. நீர் அது போன்றதே.

பக்தன் - அம் முடிவுகள் சந்தர்ப்பத்தால் நாம் கட்டாயப்படுத்தப்பட்டு எடுத்தவை என்று விஞ்ஞானி கூறுவது எந்த அளவுக்கு உண்மை?

பகவான் - கோட்டிற்கு மேலே முடிவு நம்முடையது. கோட்டிற்குக் கீழே சந்தர்ப்பத்தினுடையது. *சந்தர்ப்பம் நிர்ப்பந்தம் செய்தாலும், முடிவின் முடிவான பாகம் நம்முடையது.*

பக்தன் - இன்று பள்ளிக்குக் குழந்தையை அனுப்பாமலிருக்க முடியாது. அது நிர்ப்பந்தம், ஆனால் எந்தப் பள்ளியில் சேர்ப்பது என்பது நம் முடிவு.

பகவான் - அது சரி. மேலும் சமூகம் செய்யும் நிர்ப்பந்தத்தை 80% மக்கள் ஏற்கிறார்கள். 20% ஏற்கவில்லை. ஏற்பதா, இல்லையா என்பது நம் முடிவு.

பக்தன் - *முடிவு முடிவாக நம்முடையது.*

பகவான் - ரொம்ப சரி. நம்முடையது என்பதை ஆராய்ச்சி செய்தால் முடிவாக பிரம்மத்தின் முடிவு எனவும், சத்தியஜீவிய முடிவு எனவும் தெரியும்.

பக்தன் - அது அகந்தையின் முடிவாக, ஊரார் முடிவாக, காலத்தின் முடிவாக, கர்மத்தின் முடிவாக, ஆத்மாவின் முடிவாக, சைத்தியப் புருஷன் முடிவாக, சத்தியஜீவிய முடிவாக, பிரம்ம முடிவாக இருப்பது. *எந்த முடிவாக இருக்க வேண்டும் என்பது நமது முடிவு.*

பகவான் - நாம் யார் என்பதை நிர்ணயிக்கும் சுதந்திரம் நமக்குண்டு.

பக்தன் - இன்று நான் எளிமையாக இருக்கிறேன். உயர்வாகப் பிரியப் பட்டால்......

பகவான் - உள்ளபடி (sincere) முடிவெடுத்தால் அது பலிக்கும்.

பக்தன் - க்ஷணத்திலும் பலிக்குமா?

பகவான் - **Sincere** ஆனவர் மெய்யான முடிவு எடுத்தால், அது அகத்தின் முடிவானால் அது பலிக்கும்.

பக்தன் - நாம் பொய்யாக முடிவெடுப்பதையே **taste of ignorance** என்பதா?

பகவான் - ஆமாம்.

பக்தன் - பொய்யிலிருந்து நாமே நம்மை விடுதலை செய்தாலன்றி நமக்கு மெய்யை ஆண்டவன் அளிக்கப் போவதில்லை.

பகவான் - அதுவரை உலகம் காத்திருக்கும். அப்படிப்பட்ட நேரம் இறைவன் வரும் தருணம்.

பக்தன் - இந்த நேரம் விழித்தெழாதவர் எந்த நேரமும் விழிக்கப் போவதில்லை.

மக்களாட்சி வந்தது மகாப் பெரிய புரட்சி.

பகவான் - அது ஆன்மீகப் புரட்சி. மார்டின் லூதர் கத்தோலிக்கப் பாதிரிகளை எதிர்த்து நடத்திய புரட்சியின் விளைவாக **Protestantism** உண்டாயிற்று. அந்த ஆன்மீகப் புரட்சியின் அரசியல் வடிவம் மக்களாட்சி.

பக்தன் - இவையிரண்டிற்கும் என்ன தொடர்பு?

பகவான் - பாதிரியார்கள் ஆண்டவனுக்கும் மக்களுக்கும் இடையேயிருந்ததை மார்டின் லூதர் ஏற்க மறுத்தார். நேரடியாக ஆண்டவனுடன் தொடர்பு கொள்ள ஏற்பட்டது புராடஸ்டண்ட் மதம். மன்னராட்சியில் அரசகுலத்தில் பிறந்தவனுக்கே நாட்டை ஆளும் உரிமை. புரட்சி வந்த பொழுது அடுத்த கட்டத்திலுள்ள மந்திரி, சேனாதிபதிக்கு அது வரவில்லை. எவருக்கும் உண்டு என்று மக்களாட்சி ஏற்பட்டது. *எவரும் நாட்டை ஆளலாம் என்பது பாதாளம் பரமாத்மாவைப் பெறுவது.*

பக்தன் - பூரண யோகம் ஆன்மீகத்தில் அதையே செய்கிறது. ரிஷிகள் கடவுளாகலாம் என்று கூறவில்லை. எவரும் பரமாத்மாவை அடையலாம் என்பதில்லை. எவரும் பரமாத்மாவாகலாம் என்பது மக்களாட்சி போலிருக்கிறது.

பகவான் - அறிவுத்துறையில் எவரும் **genius** மேதையாகலாம். அதே போல் எவரும் கோடீஸ்வரனாகலாம். *எவரும் எதுவாகவுமாகலாம்.*

பக்தன் - இன்றைய அறிஞருலகம், மேதைகள், ரிஷிகள், தலைவர்கள் நினைத்தும் பார்க்க முடியாதது.

பகவான் - படிப்பை இம்முறையுடன் கற்பித்தால் 15 அல்லது 20 வயதில் பையன் உலகத் தலைவர்கட்குரிய திறமையை வித்தாகப் பெறுவான். *திறமையின் அனுபவமிருக்காது. திறமைக்குப் பாத்திரமாவான்.*

பக்தன் - குழந்தைகளை, பொய், பயம், நாலுபேர் போன்றதை விலக்கி அன்னையின் கோட்பாடுகளை அவர்களே அறிந்து போற்றுமாறு வளர்த்தால், அவர்கள் அதை விரும்பி ஏற்று மலர்ந்தால் குழந்தைகள் அன்னையாக வளரும் என்று நினைக்கலாமா?





பகவான் - நமக்குள்ள குறைபாடுகள் ஏராளம். நாம் எப்படிக் குழந்தைகளை நம் குறைபாடின்றி வளர்ப்பது?

பக்தன் - படிக்காத தாயாரைக் குழந்தைகள் படிக்காதவள் என்று அறிவது போல், குறைபாடுகளைக் குறைபாடுகளாக அறியும்.

பகவான் - அதற்குப் பெற்றோருக்கு மனம் வருமா? நான் பொய் சொல்வேன். நீங்கள் சொல்லாதீர்கள் எனக் குழந்தைகளிடம் பெற்றோர் சொல்வார்களா?

பக்தன் - அது நடக்காது. அது நடந்தாலும் குழந்தை நாம் செய்வதைத்தான் செய்யும். சொல்வதைச் செய்யாது.

பகவான் - நாம் பொய்யை அறவே விட்டொழிக்க முயன்றால், குழந்தைகள் பொய்யை விட்டுவிடும். நமக்கு எவ்வளவு வெற்றி என்பது வேறு. நமக்குச் சாதனை முழுவதுமாக இல்லாவிட்டாலும் முயற்சி முழுமையாக இருந்தால்,

*குழந்தை அன்னையாக வளரும் வாய்ப்புண்டு.*

நடைமுறையில் மேதையாக, கோடீஸ்வரனாக வளரும்.

பக்தன் - மேதையானாலும் அடக்கமாக இருக்கும். கோடீஸ்வரனானாலும் பணத்தின் கர்வம், பெருமிதம், ஆசையிருக்காது. **The Life Divine**இல் வரும் எல்லாக் கருத்துகளையும் இதுபோல் வாழ்வில் பொருத்திப் பார்த்தால் மனம் உயர்கிறது. இதுவரை இல்லாத நிறைவு, பெருநிறைவு வருகிறது.

பகவான் - வேதரிஷிகள் **immortality** அமரத்துவம் என்றது ஆத்மாவுக்கு. அதைச் சரணாகதியால், அகந்தையை அழித்துப் பெற்றனர். அதை **supreme infinity, divine universality** என்கிறோம். பிரபஞ்சம் கோரமாக இருப்பதை விஸ்வரூபம் காட்டியது. தெய்வீகமாகப் பிரபஞ்சம் உள்ளது. நாம் **finite.** தெய்வம் **infinite.** தெய்வம் அனந்தம் என்றால் அனந்தம் நிலைக்கேற்ப அனந்தமாகும். நம் உலகில் அனந்தம் என்பது முடிவற்றது **boundless finite.** நடக்க நடக்க முடிவில்லை என்பது இடம் அனந்தம். அதேபோல் காலம் அனந்தம். நிலம் ஆயிரமாண்டாக பலன் தருகிறது. அதற்கு முடிவில்லை. இவையெல்லாம் சிறியதன் அனந்தம். சத்புருஷன் சிருஷ்டிக்கும்,

காலத்திற்கும், சத்தியத்திற்கும், சச்சிதானந்தத்திற்கும் முன் கடந்த நிலையில் (transcendent) உள்ளது. அதை Supreme என்கிறேன். அதற்குரிய அனந்தம் Supreme infinity.

பக்தன் - Self - existent infinity சுயமான அனந்தம். Not the opposite of finite சிறியதற்கு எதிரான பெரியதன்று, சுயமான பெரியது என்றோம். Supreme infinity i.e., divine universalityயும் ஆத்மா பெறுவது அமரத்துவம் என்கிறீர்கள்.

பகவான் - சரி. அதையே ஆத்மா பிறப்பில்லாத நிலையையும், பிறப்பில் உள்ள நிலையையும் பெறுவதுமாகும்.

பக்தன் - பிறப்பில்லாத நிலை being, பிறப்பு becoming, இரண்டும் சேர்வது being of the becoming.

பகவான் - சரி. இந்த நிலையை உடல் பெற்றால் மனிதன் பிறக்கிறான் என்பது மறுபிறப்பு பெறும் விளக்கம். இப்பிறப்பிலேயே மறுபிறப்பாகும். இதற்கடுத்த நிலை ஆன்மீக மனிதன். அவனே திருவுரு மாற்றத்திற்குரியவன்.

பக்தன் - வாடகை வீட்டில் குடியிருப்பவர் வசதி வந்தவுடன் பெரிய வீட்டிற்கு மாற்றிக் கொள்வது மறுபிறப்பு.

பகவான் - ஆமாம்.

பக்தன் - பெரும் வசதி வந்தவுடன் இருக்கும் வீட்டையே மாற்றிக் கட்டிக் கொள்வது உடல் அமரத்துவம் பெற்று விலங்கு மனிதனாவது.

பகவான் - இதை வேத ரிஷிகள் சரணாகதியால் பெற்றனர்.

பக்தன் - அந்தச் சரணாகதி திருவுருமாற்றம் தாராதா?

பகவான் - அகந்தையை அழித்த அந்தச் சரணாகதிக்கு மோட்சம் உண்டு. திருவுருமாற்றம் சத்திய ஜீவியத்திற்குத்தான் உண்டு. ரிஷிகள் அங்குப் போகவில்லை.

பக்தன் - சத்தியஜீவியம் போக பிரபஞ்சம் வழிப் போக வேண்டுமன்றோ?

பகவான் - அதற்குரிய வழி ஆன்மீக மனம்.

பக்தன் - ஆன்மீக மனம் முனி, ரிஷியாயிற்றே. ஏராளமான முனிவர்கள், ரிஷிகள் இருந்திருக்கிறார்களே.





பகவான் - ஒருவர் தொழில் நடத்தினால் 100 பேருக்கு வேலை கொடுக்கிறார். 100 பேர் சம்பாதிக்கிறார்கள். வீடு கட்டுகிறார்கள். அது மறைமுகமான சேவை. தான் சம்பாதிக்க ஆரம்பித்த தொழில் மறைமுகமாகப் பிறருக்கு வசதி தருகிறது. 100 பேருக்கு வசதி வேண்டும் என தொழில் ஆரம்பிக்கவில்லை. லாபம் சம்பாதிக்கத் தொழில் ஆரம்பித்தார்.

பக்தன் - இங்கு 100 பேர் சம்பாதிக்க வேண்டும், வீடு கட்ட வேண்டும் என தொழில் ஆரம்பிக்கிறோம். எல்லா இலாபமும் ஊழியர்கட்கு. *அதுவே சத்தியஜீவியம் பூமிக்கு வருவது.*

பகவான் - குழந்தையை பயம், பொய்யின்றி வளர்த்தால் நமக்குள்ள புத்திசாலித்தனம் 3 வயதிலிருப்பது தெரியும்.

பக்தன் - அது சுதந்திரமாக வெளிப்படும்.

பகவான் - குழந்தை புத்திசாலி என்பதை எவரும் விரும்புவார். அந்தப் புத்திசாலித்தனம் தன்னை மிஞ்சுவதை சிலர் விரும்ப மாட்டார்கள். சுதந்திரமாக வளர்ந்தால் 6, 7 வயதில் நமக்குப் பிடிபடாத வீட்டு விஷயம் குழந்தைக்குப் பிடிபடும். அதைப் பெற்றோர் ஏற்க மாட்டார்கள். ஏற்றால் குழந்தை தகப்பன் சுவாமியாகும். ஆயிரத்தில் ஒருவரும் அதை விரும்ப மாட்டார்கள்.

பக்தன் - குழந்தை assert அதிகாரம் செய்யாவிட்டாலும், மனம் குழந்தை தம்மை மிஞ்சுவதைப் பெரும்பாலும் பெரியவர்கள் வெறுப்பார்கள்.

பகவான் - அந்நிலையைக் கடந்தால் தானே குழந்தை மேதையாகும்.

பக்தன் - குருவை மிஞ்சிய சிஷ்யனை அதிகப்பிரசங்கி என்பர்.

பகவான் - அடக்கம், அதிகப்பிரசங்கத்தை விலக்கும். குழந்தை மேதை, தான் வெறும் மனிதன் என்று மனிதன் கண்டுகொண்ட நேரம் குழந்தையின் மலரும் ஆன்மா கருகும்.

பக்தன் - பாதாளம் பரமாத்மாவாகத் தடை மனிதன், அவனது அகந்தை, பொறாமை.

பகவான் - பொறாமைபோல் 30 குணங்களுண்டு.

பக்தன் - இப்படி வாழ்வைப் புரிந்து கொண்டால் **The Life Divine** கதைப் புத்தகம் போலிருக்கும்.

பகவான் - தன் அறிவு, அழகு, செல்வம், திறமை போன்றவற்றைப் பிறருக்கு அளிக்கும் திறமை மனிதனுக்கில்லை.

பக்தன் - என்ன காரணம்? சுயநலமா?

பகவான் - மனிதன் பெறுவான், தரமாட்டான். தரும் திறமை அவனுக்கில்லை.

பக்தன் - ரிஷிபத்தினிக்கும், சிஷ்யனுக்கும் அவர் தவப்பயன் வரும் என்கிறார்களே.

பகவான் - அது அடிமனம் நேரடியாக அடிமனத்திற்குத் தருவது. எந்தக் குருவும், மனிதகுருவும் தான் பெற்றதை சிஷ்யனுக்கோ, மனைவிக்கோ, மகனுக்கோ கொடுக்க முன்வருவதில்லை.

பக்தன் - கொடுக்கும் கருவியில்லை.

பகவான் - அது self - giving, அகந்தையுள்ளவரை கொடுக்க முடியாது. தான் கடவுளானபின் பிறருக்கு அதைக் கொடுத்தால் மனிதன் ஆன்மீக மனிதனாகிறான்.

பக்தன் - அகந்தை அழிய வேண்டும் என்றால் மற்ற லோகங்கள் தெரிய வேண்டும். காலத்தைக் கடக்க வேண்டும். பிரபஞ்சம் முழுவதும் ஆத்மா பரவ வேண்டும். அதைப் போன்ற ரிஷிகள் இல்லையே.

பகவான் - பூரண யோகம் அதை அனைவருக்கும் தருகிறது.

பக்தன் - நீங்கள் சொல்வதை எந்த ஒரு முறையாலும் பெற முடியாது போலிருக்கிறதே.

பகவான் - எல்லா முறைகளும் தேவை. அவற்றையும் கடக்க வேண்டும்.

பக்தன் - அதுதான் சரணாகதியா? அப்படியானால் சரணாகதியை நாங்கள் புரிந்து கொள்ளவில்லையா? ரிஷிகள் சொன்ன சரணாகதி, கீதை சொல்லும் சரணாகதி என்ன?

பகவான் - மோட்சம் என்ற பலன் பெற ஏற்றது அது.

பக்தன் - பலனை நினைத்தால், சரணாகதியில்லையே.





பகவான் - சரணாகதியை அன்னை ஏற்பதே பலன்.

பக்தன் - இது சரணாகதியைவிடச் சிரமமானது.

பகவான் - சிரமம் அகந்தைக்கு.

பக்தன் - அதாவது பொய், சுயநலம். மக்கள் ஆட்சியில் இராணுவம் அரசியல் தலைவர்கட்குக் கட்டுப்பட்டுள்ளது. பல ஆசிய நாடுகளில் இராணுவம் அரசியல் தலைவரை சிறையிலடைத்து ஆட்சிக்கு வருகிறது. இதர நாடுகளில் அரசியல் தலைமைக்குக் கட்டுப்பட்டுள்ளது. இதற்கும் காலத்தின் மூன்றாம் நிலை, **Mind over Matter** ஜடம் மனத்திற்குக் கட்டுப்படும், ஆன்மா ஜடத்தை ஆளும் (**p.**1039 **The Life Divine**) என்றவற்றுடன் பொருத்திக் கூறுங்கள்.

பகவான் - மக்களாட்சி மூலம் The Life Divine முழுவதையும் சொல்லலாம். நீ கேட்பவை அனைத்தும் பொருத்தமான உதாரணம். துப்பாக்கி போன்ற ஆயுதம், பதவியிலிருப்பவர் ஆணை ஆர்ப்பாட்டம் செய்பவனைக் கட்டுப்படுத்தும் என்பதை ஏற்பார்கள். *மனம் அடங்கி எழும் சொல் துஷ்டனைக் கட்டுப்படுத்தும் என்பதை எவரும் கேட்டுக் கொள்ள மாட்டார்கள்.* காலத்திற்கு மூன்றாம் நிலைபோல அதிகாரத்திற்கு இது மூன்றாம் நிலை. அடங்குவது முதல் நிலை, அடக்குவது இரண்டாம் நிலை, மனம் அடங்கி உள்ளே போவது மூன்றாம் நிலை. உலகில் முடிவான அதிகாரம் அதற்குண்டு. இராணுவத் தலைவர் முன் காந்தியும், நேருவும், பெண்ணான இந்திராவும், வயதான வாஜ்பேயும் என்ன செய்ய முடியும்? அவர்கள் தாமே கட்டுப்பட்டு அடங்கியிருப்பது உண்மை.

பக்தன் - சிறப்பான சரித்திர நிகழ்ச்சிகள் உண்டா?

பகவான் - அமெரிக்க ஜனாதிபதி கொரியாவில் உத்தரவை மீறிய சேனாதிபதியை டிஸ்மிஸ் செய்தார். டிஸ்மிஸ் ஆனவர் வீட்டுக்குப் போனார். எதிர்க்கும் நிலையில்லை, திறனில்லை.

பக்தன் - ஆசிய நாடுகள் உதாரணம்.

பகவான் - பர்மாவில் பிரதம மந்திரி தியானம் செய்ய ஓராண்டு வேண்டும் என இராணுவத் தலைவரிடம் பிரதம மந்திரி

பதவியை ஒப்படைத்துவிட்டு மடத்திற்குப் போனார். *ஓராண்டு முடிந்து திரும்பி வந்ததும் சேனைத் தலைவர் பதவியை மீண்டும் கொடுத்துவிட்டார்.* கொஞ்ச நாள் கழித்து அவரே பிரதமரைச் சிறையிட்டார். அது பர்மாவில் நடக்கும், இந்தியாவில் நடக்காது.

பக்தன் - 1975இல் எமர்ஜென்சியிருந்தபொழுது இராணுவம் ஆளப்போகிறது என்று வதந்தி. இந்திரா இராணுவத் தலைவரைக் கூப்பிட்டுக் கேட்டார். அது உண்மையில்லை என்றார். அப்படியே இராணுவம் ஆட்சிக்கு வந்தாலும் மக்கள் அதை அனுமதிக்க மாட்டார்கள் என இந்திரா எடுத்துக் கூறினார். பர்மிய மக்கள் விவரம் அறியாதவர். இந்தியர் விழிப்பானவர். பாக்கிஸ்தானில் நடப்பது இந்தியாவில் நடக்காது. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸில் அதை நினைத்தும் பார்க்க முடியாது. மக்கள் படித்தவர், விஷயம் அறிந்தவர்.

பகவான் - படித்து விழிப்பான மக்கள் தலைவர் சொல்லுக்கு இராணுவம் கட்டுப்படுவது ஆச்சரியம். ஞானம் பெற்று விழிப்பான ஆன்மாவுக்கு உடல் கட்டுப்படுவதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

பக்தன் - குடும்ப உதாரணம்.

பகவான் - தாழ்ந்த குடும்பங்களில் தகப்பனார் கடைசிவரை பெட்டிச் சாவியைப் பையனிடம் தருவதில்லை. தந்தால் தவறாது தகப்பனார் மூலைக்குப் போவார். உயர்ந்த குடும்பங்களில் இளமையிலேயே பையன் நிர்வாகத்தை ஏற்பான். தகப்பனாருக்கு மரியாதை குறையாது.

பக்தன் - இரண்டாங்கெட்டான் குடும்பங்கள் ஏராளம்.

பகவான் - மனத்தில் உண்மையில்லாமல் பையன் மதிக்க வேண்டும் என எதிர்பார்ப்பது வீண். *மனம் உண்மையானால் முழு மரியாதை இருக்கும் என்பது அனுபவம், அரிபொருள்.*

பக்தன் - அதிகாரத்தின் மூன்றாம் நிலையை அனுபவிக்க காலத்தின் மூன்றாம் நிலைக்கு வர வேண்டும்.





பகவான் - ஆமாம். ஓர் அம்சத்தில் மூன்றாம் நிலையை அடைய ஓரளவு எல்லா அம்சங்களிலும் மூன்றாம் நிலைக்கு வர வேண்டும்.

பக்தன் - 30,000 ஆண்டுகட்குப்பின் வரக் கூடியது 30 ஆண்டில் வரும் என்பதன் தத்துவம் என்ன? விளக்கம் என்ன? உதாரணம் உண்டா?

பகவான் - ஒரு மூட்டை மணலை சுருக்க முடியாது. அதுவே gas ஆனால் சுருக்கலாம். அளவு கடந்தும் சுருக்கலாம். காலம் சுருங்கும் என்பதை நாம் விரைவான வாகனங்கள் வந்த பிறகு காண்கிறோம். விஞ்ஞான வளர்ச்சியில் காலம் பலவகையிலும் சுருங்குகிறது. கல்வி காலத்தைச் சுருக்குகிறது. தந்தி, தபால் அதைச் செய்கின்றன.

பக்தன் - சுருங்காதது சுருங்காது. சுருங்குபவை அதிகமாகச் சுருங்கும் என்றால் 1000 மடங்கும் சுருங்குமா?

பகவான் - புறம் அகமானால் சுருக்கம் ஏராளம். உலகம் சுற்றி அறிவதை பூகோளப் புத்தகம் சுருக்கமாகக் கூறும். *கையால் செய்வதை அறிவால் செய்தால் காலம் சுருங்கும்.* சர்ச்சில், நெப்போலியன், சிவாஜி, காந்திஜீ போன்ற தலைவர்களை உற்பத்தி செய்ய ஒரு குடும்பம் பல தலைமுறைகளாகப் பாடுபடுகிறது. இன்று ஒரே தலைமுறையில் உற்பத்தி செய்யலாம். அதற்காகப் பள்ளி வைத்து 15 ஆண்டில் உற்பத்தி செய்யலாம்.

பக்தன் - புறத்தில் உழைப்பால் செய்வதை அகத்தில் அறிவால் செய்வது காலத்தைச் சுருக்கும் என்பது விளங்குகிறது. அதை அடுத்த கட்டத்தில் ஆன்மாவில் ஞானத்தால் செய்வது உடனே முடியும் என்றால் புரியும்.

பகவான் - அதற்கு யோகம் எனப் பெயர்.

பக்தன் - அந்த யோகத்திற்கு உடலுக்குரிய ஆசனம் போன்ற முறைகள் பயன்படா. எந்த முறை பயன்படும்?

பகவான் - மனத்திற்குப் பாராயணம் பயன்படாது. அறிவும் நெடுநாளைக்குப் பயன்படாது. ஞானம் பயன்படும். அடுத்த கட்டம் integral experience பூரண அனுபவம் பயன்படும்.

பக்தன் - படிப்பு, பயிற்சி, அனுபவம் என்பது ஒர்க்ஷாப்பில் உடல் பெறுவது. படிப்பை விடப் பயிற்சியும், பயிற்சியை விட அனுபவமும் காலத்தைச் சுருக்கும். பயன் அதிகம். மனம், ஆன்மாவில் அது எப்படி வெளிவருகிறது?

பகவான் - புத்தகம் எனக் கொடுத்தால் மனப்பாடம் செய்பவனுக்கு அதன் விஷயம் புரியாது என்பதுபோல் அறிவால் புரிந்து கொள்பவனுக்கு மனப்பாடத்தை விட அதிகமாகப் புரிந்தாலும், மூலம் புரியாது.

பக்தன் - மனப்பாடம் செய்பவன் அறிவிருந்தாலும் உபயோகப் படுத்துவதில்லை.

பகவான் - அதேபோல் அறிவால் புரிந்து கொள்பவன் ஆத்மா இருந்தும் பயன்படுத்துவதில்லை.

பக்தன் - எப்படி ஆன்மாவை அனுபவிக்கச் செய்வது?

பகவான் - அறிவைப் பயன்படுத்துவதில்லை என்றால் அறிவு விலகும். விலகினால் ஆன்மா வெளிவரும்.

பக்தன் - அது பெரியது, **integral experience** முழு அனுபவம். கேட்கவே தயக்கமாக இருக்கிறது.

பகவான் - ஆன்மா என்பது சத்தின் அனுபவம். ஆன்மா விலகி சத் முன்வந்தால் அதற்கு முழுமையுண்டு. அதன் அனுபவம் முழுமையானது.

பக்தன் - அறிவு சமர்ப்பணத்தால் விலகி ஆன்மாவை வெளிப்படுத்துமா?

பகவான் - அறிவு சமர்ப்பணத்தால் வளரும் ஆன்மாவை வெளிப்படுத்தும். ஆன்மாவை அறிவு தியானத்தில் எட்டும்.

பக்தன் - தியானம் பலிக்க ஒரு ஜென்மமாகுமே.

பகவான் - சரணாகதியை ஏற்றால் உடனே பலிக்கும்.

பக்தன் - சரணாகதி பலிக்க பல ஜென்மங்களாகும்.

பகவான் - எழுத்துக் கூட்டிப் படிப்பவன் எட்டுப் புத்தகம் படிக்க 10 வருஷமாகும். நாமெல்லாம் எழுத்துக் கூட்டிப் படித்துத்தான் கற்றுக் கொண்டோம். எட்டுப் புத்தகம் படிக்க எட்டு மாதமாகாது. ஏன்?





பக்தன் - பள்ளிப்பயிற்சி.

பகவான் - பெரிய பள்ளிகளில் படித்த 10ஆம் வகுப்பு பையன் ஒரு நாளில் 200 பக்கம் படிக்கிறான். வேறு பள்ளியில் படித்தவன் 200 பக்கம் படிக்க 10 நாளாகிறது.

பக்தன் - பெரிய பள்ளியில் படிப்புக்குரிய சூழல் உள்ளது.

பகவான் - சத்தியஜீவியம் உலகில் இருப்பதால், அன்னைச் சூழலிருப்பதால் சரணாகதி பலிக்க பல ஜென்மமாகாது.

பக்தன் - ஒரே ஜென்மத்தில் பலிக்குமா?

பகவான் - உடனே பலிக்கும்.

பக்தன் - எனக்குப் பலிக்கவில்லையே.

பகவான் - அறியாமை மீதுள்ள ஆசையை விட்டவுடன் பலிக்கும். முடியாது என்ற பொழுது விட்டுவிடுகிறோம். இது **negative surrender**. *முடியும் என்ற பொழுது விட்டு விடுவது* ***conscious surrender.***

பக்தன் - **Silent will**இல் வருகிறது.

பகவான் - **Silent will** என்பது பேசுவதை விட்டுக் கொடுக்கிறது. பேச்சிற்கு அடுத்தது உணர்ச்சி. அதற்கடுத்தது செயல். உணர்ச்சியை விட்டுவிட்டால் உலகம் புரளும். செயலை விட்டுவிட்டால் ஜெகத்தை ஆளலாம்.

பக்தன் - **Silent will**போல உணர்வையும், செயலையும் விட்டுக் கொடுத்தால் காலம் சுருங்கும். சரணாகதி சீக்கிரம் பலிக்கும். என் அனுபவத்தில் 8 வருஷத்தில் முடிந்தது. நான் முயல வில்லை என்ற முடிவுக்கு வந்தவுடன் ஒரு நாள் மாலை 2 மணிக்கு ஆரம்பித்து மறுநாள் மாலை 4 மணிக்கு முடிந்தது. அறிவதைச் சரணம் செய்து, உணர்வதைச் சரணம் செய்து, காரியம் செய்வதைச் சரணம் செய்தால் சரணாகதி பலிக்கும் என்பது தத்துவம்.

பகவான் - இது பலிக்க ஆரம்பித்தால் முதலில் காரியம் பெரியதாகும். மனம் காரியத்தை விட்டகன்றால் முறை புரியும். அதை விட்டகன்றால் ஞானம் வரும். அது பூரண ஞானம்.

பக்தன் - சரணாகதி பலிக்க ஆரம்பிக்கும்வரை பொறுத்திருக்க வேண்டும். இந்தத் தத்துவம் பலிக்கும் முறைப்படி பாடம் சொல்லிக் கொடுத்தால் மேதைகள் உற்பத்தியாவார்கள். உலகத் தலைவர்களை உருவாக்கலாம்.

பகவான் - அது உண்மை. அதற்கு வேண்டிய இரண்டு,

1. பொருத்தமான முறை.
2. அதைத் தம் வாழ்வில் சாதித்த ஆசிரியர்கள்.

பக்தன் - அப்படிப்பட்ட ஆசிரியர்கள் இந்த முறைகளை எல்லாம் - முரண்பாடு உடன்பாடு, ஜடமே ஆன்மா, 3ஆம் நிலை போன்ற 30, 40 முறைகள் - தங்கள் வாழ்விலும், பயிற்சி முறைகளிலும் பின்பற்ற வேண்டும்.

பகவான் - அது அவசியம்.

பக்தன் - **The Life Divine**ஐ வாழ்வுடன் பொருத்தி அங்கு கூறும் தத்துவங்களை எல்லாம் மனதில் வாங்கிக் கொள்வது மேற் கூறியதைச் சாதிக்கும்.

பகவான் - உதவும். சாதிக்கக் கடைப்பிடிக்க வேண்டும்.

பக்தன் - ஒரு தத்துவத்தைப் பல உதாரணங்கள் மூலமும், பல விளக்கங்களை ஒரே நிகழ்ச்சி மூலமும் அறிவது நல்லது.

பகவான் - அது பெரிய விஷயம். எவருக்கும் பிடிக்காது.

பக்தன் - *ஒரே நிகழ்ச்சியில் அத்தனை தத்துவங்களையும் புரிந்து கொள்வது முக்கியம்.* சரணாகதி பலிக்காததற்கு நம் அறியாமையில் நமக்குள்ள **unconscious** நம்பிக்கை என்று கூறலாமா?

பகவான் - அப்படிச் சொல்லலாம். அது ருசியாக இருப்பது உண்மை. பிச்சைக்காரனை விடுதியில் உட்கார வைத்து சாப்பாடு போட்டால், அவன் தப்பித்துப்போய் பிச்சை எடுக்கிறான். பிச்சை எடுப்பது அவனுக்கு இனிய அனுபவம். நமக்கும் படிப்பு, புதியன கற்பது, ஆராய்ச்சி செய்வது, கண்டுபிடிப்பது, சோதனைகள் செய்வது, பாராயணம் செய்வனவெல்லாம் பிடிக்கின்றன.

பக்தன் - ரொம்பப் பிடிக்கும்.





பகவான் - இவை அறியாமையின் முறைகள். அறியாமை பிடிக்கும் வரை அறிவு எப்படி வரும்?

பக்தன் - தியானம் உள்பட எதுவும் **unconscious method** எனப் புரிய வேண்டும்.

பகவான் - நூல் புரியவில்லை என்றால் புரிந்து கொள்ளும் முயற்சியைக் கைவிட்டால் மனம் மௌனமாகும். அடுத்த க்ஷணம் புரியும்.

பக்தன் - அது என் அனுபவம்.

பகவான் - அதைப் பார்த்த பின் புரிய மனம் ஆர்வமாக முயலும்.

பக்தன் - அதையும் பார்த்திருக்கிறேன்.

பகவான் - **Urge** உந்தல் உள்ளிருந்து எழுவனவற்றை வெளிப்படுத்தாமல் சரணம் செய்ய வேண்டும். படிப்படியாக மௌனம் எழும்.

பக்தன் - வாழ்வு உடலின் உணர்ச்சியை மனத்தில் எண்ணமாக மாற்றி உடலை மனத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வருகிறது.

பகவான் - உடல், உணர்வு, மனம், ஆன்மா, சத்தியஜீவியம் என்ற நிலைகள் உள்ளன. கீழுள்ள நிலை மேலே வர வேண்டும். அப்படி ஒரு நிலை உயர்ந்தால் அதன் சிறப்பு முழுவதும் அதன் கீழுள்ள அத்தனை நிலைகட்கும் (saturated) பூரணமாக வேண்டும் என்பது பரிணாமத் தத்துவம்.

பக்தன் - உடலில் உணர்வு எழ வேண்டும், பிறகு மனம் ஜனிக்க வேண்டும்.

பகவான் - 19, 20, 21, 22 அத்தியாயங்கள் சுருக்கம் நீ சொன்னது. உடலுக்கும் மனத்திற்கும் இடைப்பட்டது வாழ்வு (உணர்ச்சி). உடலுக்கு மனத்தைப் பெற்றுத்தரும் முறை இது. உடலுக்குரியது செயல், மனத்திற்குரியது எண்ணம், உணர்வுக்குரியது சக்தி. உடலின் செயலில் எழும் உணர்ச்சியை மனத்திற்குக் கொண்டு சென்றால், மனம் அவ்வுணர்ச்சியை எண்ணமாக மாற்றுகிறது. உடல் அந்த எண்ணத்திற்குக் கீழ்ப்படியும்.

பக்தன் - ஊரில் தினமும் நடப்பது இது. வதந்தி என்கிறோம், கோள் என்கிறோம்.

பகவான் - நாட்டில் உள்ள திறமையைத் தலைமைக்குச் சொல்ல இடையில் இருவருடனும் தொடர்புள்ளவர் தேவை. ஆந்திராவில் ஒரு படித்த விவசாயி World Bankஇல் கடன் பெற்றிருந்தார். பாங்க் அவரை வெகுவாகப் பாராட்டியது. ஒருநாள் DSP அவரைத் தேடிக்கொண்டு வந்து அவசரமாக அவரை விமான நிலையத்திற்கு அழைத்துவந்து டிக்கட் வாங்கிக் கொடுத்து டெல்லியில் இந்திராவைப் பார்க்கும்படி அனுப்பினார். பாங்க் சேர்மன் இந்திராவை சந்தித்தபொழுது ஆந்திர விவசாயியைப் பற்றி விசாரித்தார். உடனே இந்திரா அவரைப் பார்க்க விரும்பினார். கீழேயுள்ள திறமை மேலே போக இடையே மனிதர் வேண்டும். பக்தர்கட்கு ஆன்மீகத் தகுதியுண்டு. அதை அன்னையறிய இடையே ஒரு பாலம் வேண்டும். நாம் செய்யும் செயலில் பலன் ஒன்று நூறானால் அச்செயல் நம்மை அன்னையிடம் சேர்க்கும்.

பக்தன் - காலம் சுருங்கும் என்ற பொழுது ஜீவியம் உயர வேண்டும் என்றோம்.

பகவான் - காந்தி, நேரு, பரமஹம்ஸர் உயர்ந்த ஜீவியம் உள்ளவர்கள். அவர்கள் பிறப்பில் உயர்ந்தவர்கள் என நினைக்கிறோம். அவர்கள் அறிந்தவற்றை (details) இளைஞர்கட்குக் கொடுக்க அதிக நாள் ஆகாது. விபரம் விஷயமாகாது.

பக்தன் - விவரத்தை மனிதன் (personality) விஷயமாக்குகிறது. அதுதானே முக்கியம்.

பகவான் - விவரங்களைக் கொடுக்கும்பொழுது விவரத்திற்குரிய தகுதியுடன் கொடுப்பது அவசியம். அதைச் சில மாதங்களில், ஒரு வருஷத்தில் கொடுத்து விடலாம். 15 வயது பையன் நேருவுக்குத் தெரிந்த விவரங்கள் அனைத்தையும் 2, 3 வருஷங்களில் பெற்றுக் கொண்டான் என்றால், அதற்குரிய சந்தர்ப்பத்தில் *அந்த விவரம் விஷயமாக வெளிப்படும்.* அனுபவம் தரும் சந்தர்ப்பம் விவரத்தை விஷயமாக்கவல்லது.





பக்தன் - சொல்வது புரிகிறது. மேலும் கேட்கப் பிரியப்படுகிறேன்.

பகவான் - விவரமா, விஷயமா எது முக்கியம்? இரண்டும் முக்கியம்.

பக்தன் - விவரத்தை 3 மாதமில்லை, 3 வருஷத்தில் மாணவன் பெற முடியும் என்பது தெளிவு. அது (potential) வித்தாகத் திறமையைத் தரும். மலையும் மடுவாகவுமிருப்பதால் மனம் திகைக்கிறது.

பகவான் - நேருவின் தகுதிக்கு எல்லையில் களேபரம் பெரியது. அவர் தைரியமான முடிவெடுக்கிறார். நாம் ஆச்சரியப்படுகிறோம்.

பக்தன் - அது போன்ற தலைமையை எப்படி உற்பத்தி செய்ய முடியும்?

பகவான் - 15 வயது சிறுவனை ரோட்டில் ரௌடி மிரட்டுவது இந்த வயதிற்கு எல்லைக் களேபரம் போன்றது. சிறுவன் இதை இன்று சமாளித்தால் நாளை அதைச் சமாளிப்பான்.

பக்தன் - பையன் ஓட்டம் பிடிப்பான்.

பகவான் - பெரிய பள்ளிகளில் படிப்பவர், பெரிய குடும்பப் பையன்கள் இதுபோன்ற நேரங்களில் பயப்படாமல் பேசுவார்கள். பெரும்பாலும் தொந்தரவு விலகும். 5 வயது முதல் பயமில்லாமல் பயிற்சியிருந்தால், அன்னைச் சூழலில், அது வாராது. வந்தால் பையன் அச்சந்தர்ப்பத்தைச் சந்திப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். ரௌடியால் பையனுக்குத் தொந்தரவு வாராது.

பக்தன் - இது ஒரு நாள் பயிற்சியில்லை. ஒருவகையான பயிற்சியில்லை. உடலைப் பற்றி விவரம் தெரிந்தால் (physiological details) மனம் மாறும். உலகத்து விவரங்கள் அனைத்தும் தெரிவதால் பையனுக்குப் பயம் என்பதே இருக்காது. பயிற்சி முழுப்பலன் தரும். பெருத் தலைவர்களைப் பள்ளி உற்பத்தி செய்யும்.

பகவான் - முறை முக்கியம். ஆசிரியர் பண்பு முக்கியம். சூழல் முக்கியம். மேதைகள், தலைவர்கள், உயர்ந்தவர்களை உற்பத்தி செய்யலாம். அன்னை தானே உற்பத்தியாகும் முறை என்பதால் அடுத்த கட்டங்களில் பலிப்பது ஏராளம், எளிது.

பக்தன் - முறைக்கு மூலம் உண்டா?

பகவான் - *சரணாகதி.*

பக்தன் - சரணாகதியைப் பள்ளியில் எப்படிப் பயில்வது, பயிற்றுவிப்பது?

பகவான் - விஷயத்திற்குச் சரணாகதி, விவரத்திற்குச் சரணாகதி, முறையைக் கற்பதற்குச் சரணாகதி, கற்பிப்பதற்குச் சரணாகதி.

பக்தன் - கொஞ்சநஞ்சம் புரிந்ததும் சரணாகதியைப் பற்றிப் போய்விட்டது.

பகவான் - விஷயம் பெரியது என நினைத்தால் மனம் சரணாகதியை நாடும். உடனே விஷயம் பலிக்கும். குழந்தை தெய்வம் என நினைத்தால் மனம் சரணாகதியை நாடும். குழந்தை சொல்வதை கிரஹித்துக் கொள்வான்.

பக்தன் - சரணாகதி என்றால் என்ன?

பகவான் - உலகில் விவரம், விஷயம், காலம், குழந்தை, படிப்பு, எல்லாமும் பெரியவை என்றால் மனம் அடங்கும். அது சரணாகதிக்குரிய மனநிலை.

பக்தன் - பிறப்பு, சுபாவம் என்பவையில்லையா?

பகவான் - 100 பிள்ளைகளில் ஒருவன் உயர்ந்து தலைவனானால் அது போதும். நம் முறைப்படி 10, 20 பேர் தேறுவார்கள். பள்ளியில் அனுபவம் அதிகமானால் 60, 70உம் தேறுவார்கள். பயந்தவன், அடம்பிடிப்பவன், கிறுக்கு போன்ற பிள்ளைகளை அவற்றை மீறிப் படிக்க வைக்கலாம். உயர்ந்த திறமைகளைப் பயிற்றுவிக்க பயம், அடம், கிறுக்கு போக வேண்டும். அது அடுத்த கட்டம்.

பக்தன் - பள்ளியில்லாத ஊருக்குப் பள்ளி வருகிறது. சாப்பாட்டிற்கில்லாத குழந்தைக்கும், பள்ளிக்கு அனுப்பமாட்டேன் என்பவருக்கும் அது உதவாது. 100 பிள்ளைகளில் 3, 4 பேர் தொழிலதிபர் களாகவும், நாட்டுத்தலைவர்களாகவும், உலகப் பிரசித்தி பெற்றவராகவும் வந்தால் முறை அற்புதம்.

பகவான் - 3இல் ஆரம்பித்து 30 வரை நிச்சயமாகப் போகலாம். நாம் நடத்தும் சென்டர்களில் இதைப் பயில வேண்டும்.

பக்தன் - சென்டர் பிரார்த்தனைக்குரியது. புஸ்தகம் விற்க, சொற்பொழிவு ஆற்றும் இடம். பயிற்சிக்கு இடம் தரமாட்டார்கள்.





பகவான் - பயிற்றுவிக்க 10 பேர் தயாரானால், இடம் தருவார்கள்.

பக்தன் - *இதை நம்புபவர்கள் தம் வாழ்வில் முதலில் செய்வது அவசியம்.* போட்டி, பொறாமை, அலட்சியம் மனிதனுக்குப் பெரியது.

பகவான் - நமக்கு அவை பெரிதாக இல்லாவிட்டால் அது பலிக்கும். நீ கூறுவதைவிட நாமே போய்ச் சேவை என்று மாட்டிக் கொண்டால் உலகத்திற்குச் சேவை தேவையில்லை. பிறரை அழித்துப் பரிகாசம் செய்ய உலகம் காத்திருக்கிறது.

பக்தன் - அது இல்லாத உலகம் உண்டா எனத் தெரியவில்லை.

பகவான் - வாய்மொழி முக்கியம். அது உலகை நமக்கு அறிவிக்கும். அதை அறிவது பண்பற்ற செயலென ஒதுங்கினால் நாம் உலகுக்குப் பலியாவோம்.

பக்தன் - சேவை அழிவுக்கு உத்தரவாதம். **One becomes the Many.** பரமாத்மா ஜீவாத்மா ஆயிற்று. ஆண்டவன் உலகைப் படைத்தான். எப்படி? என்பது பரம்பரை அறியா விஷயம். நான் புத்தகத்திலிருந்து புரிந்து கொண்டது,

**One** என்பது சத்.

சத் சத்தியமாகும் முன் ஆன்மாவாகிறது.

ஆன்மா என்பது பொருள். ஆன்மீகப் பொருள் **Spiritual Substance**.

மனம் ஆன்மீகப் பொருளை புலனால் காணும்பொழுது ஜடப்பொருளாகத் தெரிகிறது **Material Substance.**

மனம் தான் கண்டதை சிறு அணுவாகும்வரை துண்டு செய்கிறது.

துண்டுகள் ஒன்று சேர்கின்றன.

ஒன்று சேர்ந்த குவியல் தன்னைத் தனியாக உணர்கிறது.

இக்குவியல்களில் ஒவ்வொன்றையும் நாம் **Many** என்கிறோம்.

பகவான் - புரிந்து கொண்டது சரி. மேலும் என்ன கேள்வி?

பக்தன் - உதாரணம்.

பகவான் - **One** என்பது சத் என்ற சத் புருஷன். சுருக்கமாகப் புருஷனாகும்.

புருஷனை ஜீவன் எனவும் கூறுவோம்.

ஜீவனிலிருந்து ஜீவியம் வருகிறது.

இவையிரண்டும் எப்பொழுதும் முழுமையுடையது. பகுதியாகா.

ஜீவியத்திலிருந்து சக்தி வருகிறது.

சக்தியைத் துண்டு செய்ய முடியும்.

ஒவ்வொரு துண்டும், அல்லது துண்டுகளின் குவியலும், ஒரு ஜீவாத்மா.

சக்தி துண்டானாலும், ஜீவனும், ஜீவியமும் அதை விட்டு நகர்வதில்லை.

ஜீவன் பின்னணியில் துண்டாடப்படாத நிலையுடையது. பூமியில் நிலம் உண்டு. நிலத்தைப் பிரிக்கிறோம். வரப்பால் பிரிக்கிறோம். ஒருவர் நிலம் மற்றவர் நிலத்திலிருந்து வேறுபட்டது. நிலம் பிரிக்கப்பட்டாலும் பூமி பிரிக்கப் படவில்லை. குடும்பம் என்பது கூட்டுக் குடும்பம். குடும்பம் என்பது ஒரு கருத்து. அதைப் பிரிக்க முடியாது. அண்ணன், தம்பி தன் வீட்டுக்குப் போகலாம். அது பிரிந்த நிலையானாலும் பிரிந்தது வீடு. குடும்பம் பிரியாமல் ஒன்றாய் உள்ளது. நிலம் பிரிந்தாலும், பூமி பிரிவதில்லை என்பதுபோல் ஜீவாத்மா பிரிந்து தெரிந்தாலும், உண்மையில் அது பிரிவதில்லை. ஒரு ஜீவன் பிரிந்து தோன்றுகிறது. பிரிந்த நிலையை வற்புறுத்தினால், சண்டை, பூசல் வரும். குடும்பத்தை வற்புறுத்தினால் சுமுகம் வளரும். உடலில் கை, கால், தலை, கண் போன்ற உறுப்புகள் வேறாகத் தோன்றுவது உண்மையானாலும், அவை உடலே, உடலின் பகுதிகளே. என்றும் பிரியா. பிரிக்க முடியாது. சிருஷ்டி சக்தியுடன் முடிவதாக நினைத்தால் பிரிவினை தெரியும். சக்திக்குப்பின் ஜீவனிருப்பதையும், ஜீவனிலிருந்து சக்தி எழுவதையும் கண்டால் பிரிவினைத் தோற்றம், முழுமை உண்மை என்பது விளங்கும்.





பக்தன் - ரிஷிகள் எப்படி இதைக் கண்டு கொள்ளவில்லை?

பகவான் - அவர் கருவி மனம். அது துண்டுகளைக் காண்கிறது. ஜீவனின் முழுமையை, ஜீவனும் சக்தியும் ஒன்றே என்ற முழுமையையும் சத்தியஜீவியம் காணும். சத்தியஜீவியம் அவர்கள் காலத்தில் மனிதனுக்குக் கருவியாய்க் கிடைக்கவில்லை. அதனால் அவர்கள் முழுமையைக் காணவில்லை.

பக்தன் - முறையையும் (**process**) காண முடியவில்லை. மேலும் ஓர் உதாரணம்.

பகவான் - சர்க்கார் இலாக்காக்கள் பல. ஆனால் அனைத்தும் சர்க்காரே. *முழுமையான சர்க்கார், பல இலாக்காக்களாகத் தோன்றினாலும் சர்க்கார் ஒன்றே.*

பக்தன் - அடிமனத்தின் தத்துவம், உதாரணம், விளக்கம், வியாக்யானம் தேவை. ரிஷிகளுடைய யோகம் மேல்மனத்தோடு ஏன் முடிந்தது, ஏன் அவர்கள் அடிமனத்தை நாடவில்லை?

பகவான் - கிணறு என்று தோண்டு முன் மனிதன் ஆறு, குளம் அருகில் வாழ்ந்தான். குளம் வற்றிவிட்டால், வேறு நீர்நிலைகளைத் தேடிப் போனான். அன்று கிணறு வெட்டவில்லை. **Bore-well** போடவில்லை. கிணறு என்று வெட்டினாலும் 10 அடி, 20 அடிக்கு மேல் வெட்டுவதில்லை. பூமிக்கடியில் உள்ள குடிநீர் 97% எனவும் ஆறு, குளம், ஏரியில் உள்ளவை 3% எனவும் கணக்கிட்டிருக்கிறார்கள். **Borewell** போட்ட இடங்களில் மழையை எதிர்பாராமல் 12 மாதமும் பயிராகிறது. அன்றைய விவசாயத்தை இன்றைய விவசாயத்துடன் ஒப்பிட முடியாது.

பக்தன் - நான் இந்த உதாரணத்தை ஏற்கிறேன். அதைத் தொடர்ந்து பிரச்சினை எழுப்பவில்லை. புரிய உதவியாக இருக்கிறது.

பகவான் - சிருஷ்டி என்பது ஞானம் அஞ்ஞானமானதால் ஏற்பட்டது. சிருஷ்டிக்கு பரமாத்மா, பாதாளம் என இருபகுதிகள் உள்ளன (**superconscient, subconscient**). ஒன்று இரண்டாகப்

பிரிந்து கூடுவது சிருஷ்டிப் பரிணாமம். பாதாளம் உடல், வாழ்வு, மனம் எனப் பரிணாமத்தால் உயர்ந்துள்ளது. விலங்குக்கு மனம் இல்லை. மேல் உலகம் தெய்வங்கட்கும், கீழ் உலகம் விலங்கினங்கட்கும், நடுவே மனிதனும் உள்ளான். தேவர்கள், தெய்வங்கள் ஜொலிப்பவர்கள். அவர்களுக்கு எதுவும் தேவையில்லை. பரிணாமமும் இல்லை. விலங்கிற்குப் பரிணாமம் முடியாது. இரண்டாகப் பிரிந்தவற்றைச் சேர்ப்பது பரிணாமம். *அந்த வேலை மனிதனுக்குரியது.*

பக்தன் - மனிதனுக்குரியது மேல்மனமா? அடிமனம் இல்லையா?

பகவான் - மனிதனுக்குரியது மேல்மனம். அடிமனம் மறைந்துள்ளது. சிருஷ்டி அஞ்ஞானத்தால் ஏற்பட்டது. ஞானம் என்பதை பரமாத்மாவுடன் இரண்டறக் கலப்பது என்றால், அடுத்த நிலையில் வெளியிலிருந்து பரமாத்மாவைப் புலனுதவியின்றி அறிவது என்கிறோம். மூன்றாம் நிலையில் பரமாத்மாவை அறிய முடியாமல் பிரபஞ்சத்தை மட்டும் அறிய முடிகிறது. அதை அறிவது அடிமனம். உலகில் எங்கு நடப்பதையும் அறியும் திறனுடைய மனம், பாதாளமும், பரமாத்மாவும் சேருமிடத்தில் உற்பத்தியாவது. சிருஷ்டியில் அஞ்ஞானத்திற்கு முழுமையளிக்க வேண்டியதாயிற்று. *அஞ்ஞானம் முழுமையானால் பிரம்மம் தன்னை மறக்கும். தான் மறந்ததை மறக்கும்.* முழுமையான அஞ்ஞானத்தியிருந்து பிரம்மம் தன்னை நினைவுபடுத்தி வெளிவருவது பரிணாமம். அதுவே அது தேடும் ஆனந்தம். அந்த அஞ்ஞான முழுமையை எட்ட சிருஷ்டி அடிமனத்திலிருந்து ஒரு பகுதியைப் பிரிக்கிறது. பிரித்து அங்கு அஞ்ஞானத்தை முழுமைப்படுத்த ஞானத்தைக் காலத்திற்கும், மனத்திற்கும், கண்டத்திற்கும், அகந்தைக்கும் உட்படுத்துகிறது. அஞ்ஞானம் முழுமை பெறுகிறது.

பக்தன் - சைத்தியப் புருஷன் அடிமனத்தில் எப்படி வந்தது?

பகவான் - அடிமனமே பிரகிருதி, இயற்கை, பிரபஞ்சம் முழுவதும் தழுவியது. அதன் யுகாந்த கால அனுபவம் அதன்





ஆத்மசாரம். அதுவே சைத்தியப் புருஷன். சமூகம் முழுவதும் மேல்மனத்திற்குரியது. நமக்கு சமூகமே எல்லாம். உள்ளபடி அடிமனமே எல்லாம். *அடிமனமே எல்லாம். அதுவே மேல்மனத்தை ஆள்கிறது என்பது முதல் சித்தி.*

பக்தன் - நமக்கு அடிமனம் என ஒன்றிருப்பது தெரிவதில்லை.

பகவான் - 1947இல் சுதந்திர தின விழா **August** 15இல் கொண்டாட மேல்மனம் தயார் செய்யும்பொழுது, பஞ்சாபிலிருந்து லட்சக்கணக்கான அகதிகள் டெல்லி நோக்கிப் புறப்பட இருப்பதை அடிமனம் அறியும். செப்டம்பர் மாதம் 50 லட்சம் பேர் வந்தனர். சுதந்திரம் வந்து விட்டது. இனி சுபிட்சத்திற்கு வேலை செய்ய வேண்டும் என மேல் மனம் தயார் செய்யும் பொழுது, முழுமையை அறிந்த அடிமனம் செய்ய வேண்டிய வேலை நாட்டை ஒன்றுபடுத்துவது என்று அகதிகள் மூலம் கூறுகிறது. 1936, 37, 38இல் இங்கிலாந்து வசதிகளை நாடித் திட்டம் போட்டபொழுது, அடிமனம் வேலை அதுவன்று, ஹிட்லர் எழுகிறான் அவனை முதலில் அழிக்க வேண்டும் என்று கூறி இரண்டாம் யுத்தத்தை எழுப்பியது. ஹிட்லர் அழிந்தபிறகு சாம்ராஜ்யத்தை அழித்தது. பிறகு சுபிட்சம் பெருவாரியாக வந்தது.

பக்தன் - நமக்கு மனம் என்பது அடிமனமே. அதுவே அனைத்தையும் நிர்ணயிக்கிறது. அதற்கு வேண்டியதை மேல்மனத்திற்குப் பிடிக்காவிட்டாலும் வற்புறுத்திச் செய்யச் சொல்கிறது. அதைச் செய்வதால் மேல்மனம் தன் அஞ்ஞானத்தை இழந்து அடி மனத்தை அறிகிறது.

பகவான் - நாம் இடித்துக் காலை உடைத்துக் கொள்கிறோம் என்றால் அது **accident.** எதிர்பாராமல் நடந்தது எனக் கருதுகிறோம். அடிமனம் நம்மை இடித்துக் காலை உடைத்துக் கொள்ளச் சொல்கிறது என்பது தத்துவம். மேல்மனம் அஞ்ஞானத்தை விட்டு வெளிவரும்வரை - அறிவோடு நடக்கும்வரை - விபத்து வருவதில்லை. அஞ்ஞானத்தை விட்டு வெளிவர மறுத்து அடம்பிடித்தால், காலை உடைத்துக்கொள் இனிப் புரியும் என அடிமனம் கூறுகிறது.

பக்தன் - இது போன்ற விபத்துகள் வந்த பின் வாழ்வில் அதிர்ஷ்டம் வருவதை நம்மவர் அறிவார்கள்.

பகவான் - Alert விழிப்பாக இருப்பவர்க்கு விபத்து வருவதில்லை. அவர்கள் அறியாமையை வலியுறுத்துவதில்லை. *மனிதனுக்கு இது கடுமையான சட்டம். இதன் பொருளை ஏற்றால் இனி அவன் வாழ்வில் சிரமமிருக்காது. அதிர்ஷ்டம் தொடர்ந்து வரும்.*

பக்தன் - புயல், வெள்ளம், வறட்சி, பூகம்பம், எரிமலை வெடிப்பது மக்கள் மனம் மாற மறுப்பதால் என்று அன்னை கூறுகிறார். ஒருவர் தம் வாழ்வில் ஏற்பட்ட விபத்துகளை இப்படி அறிந்து மாற முடியுமா?

பகவான் - மாறுவது பரிணாமம். ஏதோ சில குடும்பங்கள் இது போன்ற நேரங்களில், "ஆண்டவன் இதுவரை எங்களுக்கு அந்தக் கஷ்டம் கொடுத்ததில்லை" என்பார்கள். பொதுவாக அவர்கள் அறிவுடையவர்களாக இருப்பார்கள்

பக்தன் - அடிமனம் கூறுவதை ஏற்பது life responseஐக் கவனித்தால் தெரியுமா? இதுவரை நடந்த தவறுகள் இனி நடக்காவிட்டால் அடிமனத்தை ஏற்பதாகுமா?

பகவான் - தவற்றை விலக்கினால் பிரச்சினையிருக்காது. அடிமனம் சூசகமாகக் கூறுவதைக் கேட்டு ஏற்கமுடிந்தால் அடுத்த 100 ஆண்டு இப்பொழுது வரும்.

பக்தன் - முதலில் கூறியது புரிகிறது.

பகவான் - அது புரியப் புரிய அடுத்தவை அடுக்கடுக்காகப் புரியும்.

பக்தன் - நமக்குப் புரிந்தவற்றை சரி என ஊர்ஜிதம் செய்தபின் உடன் உள்ளவரால் அதை ஏற்க முடியவில்லை.

பகவான் - *உடனுள்ளவர் ஏற்கும் வகையில் நாம் அடிமனத்தை, அன்னையை ஏற்க வேண்டும்.* அல்லது அவர்களை ஏற்கக் கூடாது. விலக வேண்டியவர் தாமே விலகுவர். நாமே பிடித்துவைத்திருப்பது தொந்தரவு செய்யும்.

பக்தன் - சிலரை விலக்கினால் முழுமை எப்படி வரும்?





பகவான் - நம்மால் முடிந்தவரை ஏற்கலாம். முடியாததை ஏற்க முடியாது. முழுமை முழுமையாகும்பொழுது விலக்க வேண்டியவர் இருக்கமாட்டார்.

பக்தன் - நமக்குத் தகுதி வரும்வரை அந்தச் சட்டம் நமக்கில்லை. Negative எதிரானது இல்லை என்கிறார். சூன்யம் என்பது சக்திவாய்ந்தது என்பதெல்லாம் சொல்ல வேண்டும்.

பகவான் - 600 ஆண்டுகட்கு முன் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு ஆப்பிரிக்கா வரும் கப்பல்கள் Cape of Good Hope கேப்முனை வரை வரும். *அத்துடன் பூமி முடிகிறது. அதைக் கடந்தால் கப்பல் பாதாளத்தில் விழும் என நினைத்தார்கள்.* அது அந்த நாள் நம்பிக்கை. அதுபோல் நமக்குப் புரியாததை இல்லை என்பது தத்துவத்தில் சூன்யம் எனப்பட்டது. சூன்யம் என ஒன்றில்லை. பார்லிமெண்டில் ஆளும் கட்சிக்கு எதிர்கட்சி negative வேண்டாதவர். எதிர்கட்சிக்கு ஆளும் கட்சி வேண்டாதவர். அவர்கட்கு அதிகாரமிருந்தால் வேண்டாதவர்களை விலக்கி விடுவார்கள். ஆளும் கட்சியும், எதிர்கட்சியும் சேர்ந்ததே சர்க்கார். ஒரு பகுதி இல்லாமலிருக்க முடியாது. அப்படி இல்லாவிட்டால் பார்லிமெண்ட் இல்லை. ஆளும் கட்சிக்கு எதிரேயிருந்து ஆள உதவுவது எதிர்கட்சியின் கடமை.

பக்தன் - வீட்டு உதாரணம்.

பகவான் - ஒரு பையன் படிக்கிறான். அடுத்தவன் விவசாயம், வியாபாரம் செய்தால் பரீட்சை, அறுவடை மோதும். மோதும் பொழுது அடுத்தவர் காரியத்தின் முக்கியத்துவத்தை அறிந்து அனுசரிப்பது குடும்பம். "அறுவடைக்கு உதவாத பையன், என்ன பையன்" என்றும், "நீ படிக்காதவன், உனக்கு பரீட்சை என்றால் எப்படித் தெரியும்?" என்றும் ஆரம்பித்தால் இருவரும் ஒருவருக்கொருவர் வேண்டாதவராகி, வீடு இரண்டாகிறது. *குடும்பத்தைக் கருதினால் அறுவடையும் முக்கியம், பரீட்சையும் முக்கியம்.*

பக்தன் - ஒரு பகுதியால் சொல்ல முடியாததை அடுத்த பகுதி சொல்வதே நெகட்டிவ் என்பது இதுதானா? நெகட்டிவ் அம்சங்களை -

தோல்வி போன்றவற்றை - அனுபவிக்காதவன் பாஸிட்டிவ் அம்சங்களை முழுமையாக அனுபவிக்க முடியாது. நிழலின் அருமை வெய்யிலில் தெரியும், என்பவை தெரிந்தாலும் சற்றுப் புதியதாக இருக்கிறது.

பகவான் - கெட்டது என்ற எண்ணம் பரம்பரையானது. கெட்டது என்று ஒன்றில்லை. அது வேறு என நினைக்க முடியவில்லை.

பக்தன் - அன்று கெட்டது என்றவற்றை இன்று நல்லது என சேர்த்துக்கொள்வதால் ஓரளவு புரிந்தாலும், மனம் இதமாக, பளிச்சென ஏற்பதில்லை.

பகவான் - IAS பயிற்சியை தாலுக்காபீஸ் முதல் ஜெயில், பிச்சைக்கார விடுதி வரை அளிக்கின்றனர். தாழ்ந்த இடம் என எதையும் ஒதுக்குவதில்லை. IAS ஆபீசர் முக்கியமான டிபார்ட் மெண்ட்களில் மட்டுமிருப்பதில்லை. எல்லா டிபார்ட்மெண்டுகளுக்கும் அதிகாரிகளாக இருப்பதால் எதையும் விலக்க முடியாது. *வாழ்வில் நாம் எதையும் விலக்க முடியாது, விலக்கக் கூடாது.*

பக்தன் - அவை தவிர வேறெதாவது உண்டா?

பகவான் - ஆண்டவன் விஷ ஜந்துகளை உற்பத்தி செய்திருப்பது எதனால்? வாழ்வு முழுமையானது. சிருஷ்டியில் எதையும் இரண்டாக, எதிரெதிராகப் பிரித்துக் காட்டுவதுபோல் நல்லது, கெட்டது உள்ளன. நல்லதை மட்டும் பாராட்டினால் வாழ்வில் முழுமையிருக்காது. கெட்டதும் சேர்ந்தால்தான் முழுமை.

பக்தன் - புரிகிறது. மனத்தைத் தொடவில்லை.

பகவான் - எந்தக் குடும்பத்திலும், சர்க்காரிலும், ஸ்தாபனத்திலும் எவ்வளவு பெருமையுடையதானாலும் இரகஸ்யம் என்பவை உண்டு. *அவை தவறானவையல்ல, அவசியமானவை.* **Official Secrets Act** என்று ஒரு சட்டம் உண்டு. ஓய்வு பெற்ற பின்னும் அந்த இரகஸ்யங்களை ஆபீசர்கள் வெளியிட்டால் ஜெயிலுக்குப் போக வேண்டும்.





பக்தன் - இது அதிகமாகப் புரிந்தாலும், ஏதோ குறையாக இருக்கிறது.

பகவான் - உங்கள் சொந்த அனுபவத்தில் குறையற்ற இரகஸ்யம் ஒன்று கூட இல்லையா?

பக்தன் - உண்டு.

பகவான் - அது வெளிவந்தால்......

பக்தன் - எல்லாம் போகும்.

பகவான் - இவை குறையற்ற ரகஸ்யங்கள். மற்றவை குறையான இரகஸ்யங்கள். மீதி விஷமான இரகஸ்யம்.

பக்தன் - அமிர்தத்தைவிட உயர்ந்த வாழ்வு திருவுருமாற்றத்தால் வர விஷம் தேவை எனப் புரிந்தாலும், மனம்?

பகவான் - பெரிய அளவு புரிந்தால் மீதி போகப் போகப் புரியும். மனத்தைத் தொடும்படிப் புரிய கொடுமை அனுபவிப்பவர்க்கு இன்பமானது என்ற அனுபவம் வேண்டும். வேகமாகப் போனால், வேகமாக சைக்கிளில் போனால் வேகம் தெரியும். ரயிலில் அதை விட வேகமாகப் போகலாம். வேகம் அதிகரிக்க பெரிய வண்டி தேவை. அந்த வேகம் அமைதியாகவும் தெரியும். *அமைதியான வேகம் அதிவேகம்.*

பக்தன் - பகுதியைக் காணும் மனம் சிறியது. முழுமையைக் காண மனம் பரந்திருக்க வேண்டும். பரந்த மனம் முழுமையை அறியும் பொழுது பகுதிக்குரிய வேகம் அமைதியாகும்.

பகவான் - ஆமாம்.

பக்தன் - சத், சித், ஆனந்தம், சத்திய ஜீவியம் தலை கீழே மாறி உலகம் உண்டானதை உதாரணம் மூலம் கூற முடியுமா?

பகவான் - ஒரு கம்பனி ஆரம்பிக்க முதல் போட்டு கட்டிடம் கட்டி, மெஷின் வாங்கி, பொருள்களை உற்பத்தி செய்து, நிர்வாகம் செய்து இலாபம் எடுக்கிறோம். நாம் போட்ட முதல் கட்டிடமாகவும், மெஷினாகவும் மாறுகிறது. செய்யும் வேலை சரக்காகிறது. கம்பனி ஆரம்பிக்கும் ஆர்வம்

இலாபமாக வருகிறது. நிர்வாகத்திறமை சட்டம், ஒழுங்கு என மாறுகிறது.

பணம் - கட்டடம், மெஷின்

வேலை - சரக்கு

ஆர்வம் - இலாபம்

திறமை - சட்டம் ஒழுங்கு

போட்ட பணம், செய்த வேலை, காட்டிய ஆர்வம், திறமை உபரியாகிறது.

சத் - ஜடமாகவும்

சித் - வாழ்வாகவும்

ஆனந்தம் - சைத்தியப் புருஷனாகவும்

சத்திய ஜீவியம் - மனமாகவும்

மாறுவது சிருஷ்டி. இம்மாற்றத்தால் ஆனந்தம் பேரானந்தமாகிறது. இது சிருஷ்டி ஏற்பட்ட வகை. ரிஷிகள் சொல்லாதது. முதற்புத்தகத்தில் 27ஆம் அத்தியாயம் இப்படிக் கூறுகிறது.

பக்தன் - மீண்டும் பரிணாமத்தால் முன்நிலையை அவை அடைகின்றனவா?

பகவான் - அது பரிணாமம். ஆனந்தம் மேலும் அதிகரிக்கிறது.

பக்தன் - ஆனந்தம் தவிர வாழ்வில் வலியில்லை என்பதை விளக்க முடியுமா?

பகவான் - 3 வயதுக் குழந்தைக்கு எந்த நேரமும் சந்தோஷம் உண்டு.

பக்தன் - நாம் தலையிடாதவரை எல்லாம் ஆனந்தம்தான்.

பகவான் - அது நடக்க முயன்று ஓடினால் விழுந்து அழுகிறது. அது ஓடக் கற்றுக்கொள்வது. கற்றுக்கொள்வது ஆனந்தம். இடறி விழுவது வலி. எழுந்து மீண்டும் ஓடுகிறது. *வலியைவிட ஆனந்தம் அதிகம்.* கற்றுக் கொண்டால் வலியில்லை, ஆனந்தம் மட்டும் இருக்கின்றது. வலி அறியாமைக்கு. ஆனந்தம் அறிவுக்கு. அறிவுக்கு ஆனந்தம் தவிர வேறில்லை.





பக்தன் - அது சரி, வலி இருக்கிறதல்லவா?

பகவான் - வலியும், ஆனந்தமும் உள்ள பொழுது எதையும் நாடும் உரிமை மனிதனுக்குண்டு. அந்தச் சுதந்திரத்தில் இறைவன் தலையிடுவதில்லை. வெயிலில் விளையாடும் பையனுக்கு வெயில் தெரிவதில்லை. நடக்கக் கற்றுக் கொள்ளும் குழந்தை விழுந்தால், எழுந்து ஓடும் குழந்தையும் உண்டு. அழும் குழந்தையும் உண்டு. வலியும், அழுகையும் பலஹீனத்திற்கு. பலஹீனம் பலமாக மாறுவது ஆனந்தம்.

பக்தன் - வலி என்பதை சிருஷ்டிக்கவில்லை. ஆனந்தத்தை மனிதன் வலியாகவும் உணருகிறான்.

பகவான் - சரி.

பக்தன் - எப்படிப் பார்த்தாலும் வலி என்பது சிருஷ்டியிலிருக்கிறது.

பகவான் - தொழிலில் லாபம் உண்டு. அதிக லாபமும் உண்டு. சரியாக செய்யவில்லை எனில் நஷ்டம் வரும்.

பக்தன் - அதுவே நான் கேட்பது. நஷ்டமே தொழிலிலில்லை என்று எப்படிக் கூறுவது?

பகவான் - நஷ்டம் அனுபவத்தைக் கொடுக்கும். அனுபவம் அதிக லாபத்தைக் கொடுக்கும். அதை நஷ்டம் என்பதை விட அனுபவம் என்று கூறலாம். அறிவு பெறும் அனுபவம், அறியாமை.

பக்தன் - நாம் அறியாமையை வலி என்கிறோமா?

பகவான் - ஆம். அந்த வலியும் அடிமனத்திற்கு ஆனந்தம் தருகிறது. வலி மேல் மனத்திற்குத்தான். *வலி உணர்வின் அறியாமை.*

பக்தன் - உலகில் வலியில்லை, அறியாமையிருக்கிறது. அறியாமையை உணர்ச்சி வலி என்கிறது.

பகவான் - சத் முதல் ஜடம் வரை உள்ள எட்டு லோகங்களிலும் அறியாமையில்லை என்று கண்டோம். *அறியாமை யில்லாத எட்டு லோகங்களில் அதிக ஆனந்தத்தை நாடி அறிவு தன்னுள் மறைந்து அறியாமையாகிறது.*

பக்தன் - உபநிஷதம் **'All is in each, each is in all'** எல்லா ஜீவன்களும் ஒருவரிலும், ஒருவர் எல்லா ஆத்மாக்களிலும் இருக்கிறார் என்று கூறுகிறது.

பகவான் - மேலும் அனைவரும் ஆண்டவனிலும், ஆண்டவன் அனைவரிலும் இருக்கிறார் என்றும் கூறுகிறது.

பக்தன் - ஒன்று பலவாகப் பிரிந்து, கலப்பது ஆனந்தம் உற்பத்தியாகும் வகை எனவும் கூறப்படுகிறது. கலப்பது ஆனந்தம். ஆனந்தத்திற்காகப் பிரிந்து கலப்பது.

பகவான் - மனிதன் மற்றவர்களுடன் உறவாட விரும்புகிறான். உறவு இன்பம். ஒரு திருமணம் என்றால் ஏராளமான உறவினர்களும் நண்பர்களும் ஒருவரை நாடி வருகின்றனர். அவர்கள் வீட்டு விசேஷத்திற்கெல்லாம் 'ஒருவர்' போய்க் கலந்து கொள்கிறார். கலந்து உறவாடுதல் இன்பம் என்பது நம் வாழ்விலும் உள்ளது.

பக்தன் - சச்சிதானந்தம் என்பது 9ஆம் அத்தியாயம். அதன் முன்னுள்ள 8 அத்தியாயங்களும் முரண்பாட்டைப் பற்றிப் பேசுவது எதனால்?

பகவான் - பிரம்மம் சிருஷ்டியில் முதலாகச் செய்தது சத்புருஷன். சத் என்று ஏற்பட்டவுடன் அசத் ஏற்படுகிறது. சத்புருஷனை **being** என்றால் **non being** உண்டாகிறது. சத், சித், ஆனந்தம் மூன்றிற்கும் எதிரான அசத், அசித், நிரானந்தம் ஏற்படுகிறது. *சிருஷ்டியே முரண்பாடு, முரண்பாட்டில் ஆரம்பிக்கிறது.* முரண்பாடு என்று கூறாவிட்டால் **(dualities)** இரட்டைகள் எனலாம். சத், அசத் என்ற முரண்பாடு பிரம்மம் என்ற உடன்பாடு. ஒன்றான பிரம்மம் இரண்டாக - சத், அசத் - சிருஷ்டியில் எழுவதால், அதன் வகைகளை முதல் எட்டு அத்தியாயங்களில் எழுதினேன்.

பக்தன் - அவை எவை?





பகவான் - ஜடம், ஆன்மா எளிதில் விளங்கக் கூடிய முரண்பாடு, **Ch.** 2 & 3.

பாதாளம், பரமாத்மா அடுத்தது. **Ch.** 5.

பிரபஞ்சம், மனிதன் **Ch.** 6.

அகந்தை, சைத்தியப் புருஷன் **Ch.** 7.

எட்டாம் அத்தியாயத்தில் பாதாளத்திற்கும், பரமாத்மாவுக்கும் பொதுவான ஞானம், புலன்களால், அஞ்ஞானமாவதை ரிஷிகள் கண்டு கடந்ததைக் கூறுகிறார்கள். கண்டவர் அவற்றைச் சேர்க்க முனையாமல், பரமனையடைய முனைந்தனர். மேலும் முதல் அத்தியாயத்தில் உடலுக்கும், உணர்வுக்குமுள்ள முரண்பாடு, உணர்வுக்கும், அறிவுக்கும் உள்ள முரண்பாடு, அறிவுக்கும், ஆன்மா வுக்கும் உள்ள முரண்பாடுகளைக் குறிப்பிடுகிறேன்.

பக்தன் - முதல் அத்தியாயத்தில் வேதாந்தம் பரிணாமத்தைப் பற்றிப் பேசுகிறது என்று வருகிறது.

பகவான் - உணர்வும், அறிவும் முரண்பாடொழிந்தபொழுது விஞ்ஞானம் எழுந்ததைக் கூறி, அறிவும் ஆன்மாவும் இணைவதால் சத்தியஜீவன் பிறப்பான் என்ற விளக்கம் இருக்கிறதே.

பக்தன் - ஏன் சிருஷ்டி முரண்பாட்டில் ஆரம்பிக்கிறது?

பகவான் - *முரண்பாடு, உடன்பாடு என்பவையோ மற்ற எதுவுமோ, எங்கும் இல்லை. மனிதன் மனத்தால் ஆனவன். அம்மனத்தின் பார்வைக்கு சத், அசத் முரண்பாடாய்த் தெரிகின்றன.*

பக்தன் - மனத்தின் கீழுள்ள விலங்குகட்கு அது எப்படித் தெரியும்?

பகவான் - அது தெரியாது. விலங்குகட்கு உணர்வு தெரியும். அதுவே கடவுளாகத் தெரியும். மீனவனுக்குக் கடல் ஆத்தா. காட்டிலிருப்பவனுக்குக் காடு மோகினி. அவனுக்கு சத்தில்லை, அசத்தில்லை.

பக்தன் - மனத்தைக் கடந்தவனுக்கு,

பகவான் - அவனுக்கும் சத்தில்லை. பிரம்மம் முழுமையாகத் தெரியும்.

பக்தன் - முரண்பாடு நமக்குத்தானா?

பகவான் - நமக்கு போலீஸ் பாதுகாப்பு, திருடனுக்கு போலீஸ் கைது. நமது பிரச்சினையே எப்படி மனத்தைக் கடப்பது என்பதுதானே.

பக்தன் - காலத்தின் 3 நிலைகள் முரண்பாட்டிலும் வருமா?

பகவான் - முரண்பாட்டை முரண்பாடாக ஏற்பது காலம் முதல் நிலை. முரண்பாட்டில் எதிரி நமக்குட்படுவது கடந்த நிலை, இரண்டாம் நிலை. முரண்பாடு உடன்பாடாவது மூன்றாம் நிலை. உதாரணமாக, எதிரி முரண்பாடு. நம் பலமறிந்து எதிரி அடங்குவது அடுத்தது. எதிரி தன் தவற்றை உணர்ந்து நம் கட்சியில் சேர்ந்தபொழுது *எதிரியாக இருந்த பொழுது எப்படியெல்லாம் நமக்குத் தொந்தரவு கொடுத்தானோ - அவை நமக்குத் தெரியாது - அவற்றை எல்லாம் சாதகமாக மாற்றிச் செய்தால், நம் நிலை பலமடங்கு உயருவது மூன்றாம் நிலை.*

பக்தன் - 1947க்கு முன் ஆங்கிலச் சர்க்கார் நாம் தொழில் ஆரம்பிக்கத் தடையாக இருந்தது. 1947இல் அவர்கள் விலகிப் போனது நமக்குத் தடை விலகியது, வெற்றி. இனி நாம் தொழில் ஆரம்பிக்கலாம். ஆனால் அவர்கள் போகவில்லை. எதிரிகள் நண்பராக மாறினர். அவர்கள் முதலையும், தொழில் நுணுக்கத்தையும் கொடுத்து அசோக் லேலண்ட் போன்ற ஏராளமான தொழில்களை ஆரம்பிக்க உதவினர். நாமே அந்த அளவுக்கு முன்னேறியிருக்க முடியாது.

பகவான் - அது மூன்றாம் நிலை. எல்லா இடங்களுக்கும் வருவது.

பக்தன் - இரண்டாம் நிலை அடங்குவது. மூன்றாம் நிலை *அன்பாய் ஆதரிப்பது.*

பகவான் - முதல் நிலை கட்டை வண்டிபோன்றது. இரண்டாம் நிலை லாரிபோன்றது. மூன்றாம் நிலை விமானம்போன்றது. வாழ்வில் காணும் செய்திகளை இதுபோன்ற கருத்துகள்





மூலம் சிந்தனை செய்வது நல்லது. ஜடமும், ஆன்மாவும் ஒன்று என்பதை ஏற்கும்பொழுது எளிமையாகப் புரிந்து ஏற்கலாம்.

பக்தன் - அதில் புரிய ஒன்றுமில்லையே.

பகவான் - புரிந்து கொள்ள ஆரம்பித்தால் ஒரே அத்தியாயத்துள் உலகமே வரும். ஜடம், ஜடம். நாம் சக்தி ரூபம் பெற்று, சலனமிழந்து ஜடமாயிற்று என்று கண்டோம். ஜடம் மீண்டும் சலனம் பெற ரூபம் அழிய வேண்டும். அது கற்பனைக்கு எட்டுமா?

பக்தன் - ஐஸ்கட்டி உருகி உருவமிழக்கிறது.

பகவான் - உருவமிழந்து நீராக ஓடுவது சலனம். அடுத்த கட்டம் மனம்.

பக்தன் - ஐஸ் கட்டியில் மனம் எப்படி வரும்?

பகவான் - மனத்தின் ஞானம் உறுதிமேல் செயல்பட்டு வாழ்வுச் சலனம் ஏற்படுகிறது என்றோம். நீர் எப்படி மனமாகும். நீர் புலனுக்குத் தெரியும். மனம் புலனுக்குத் தெரியாது.

பக்தன் - ஒன்றும் புரியவில்லையே.

பகவான் - பிரபஞ்சமனம் ஹைட்ரஜன், ஆக்ஸிஜன் மூலம் நீரை உற்பத்தி செய்தது.

பக்தன் - அது சரி.

பகவான் - அதை நினைக்கும்பொழுது நீர் சக்தியின் சலனமாக மனத்திற்குத் தெரிய வேண்டும்.

பக்தன் - தெரியவில்லை.

பகவான் - ஜட சக்தி சப்தமாகி, ஆகாயமாகி, நீராயிற்று.

பக்தன் - அது தெரியும்.

பகவான் - எனவே நீர் ஆகாயமாகி, சப்தமாகி, ஜடசக்தியாகி, சக்தி அலைகளாகும்.

பக்தன் - புரிகிறது.

பகவான் - புரிவது அறிவு; சக்தி அலைகளாகத் தெரிவது அனுபவம். ஆன்மா, ஆன்மிகப் பொருளாகி, மனத்தின் மூலம் ஜடப்பொருளாகிறது.

பக்தன் - அது தெரியும்.

பகவான் - அது சக்தி அலைகளாகும். ஜடமும் சக்தி அலைகளாகும். இரண்டும் ஒன்றே என்று அறிகிறோம்.

ஜடமும், ஆன்மாவும் சக்தி அலைகளாவது - பிரபஞ்சத்தில் சந்திப்பது - முதல் நிலை.

ஜடமும், ஆன்மாவும் பிரம்மமாவது - பிரம்மத்தில் சந்திப்பது - இரண்டாம் நிலை.

அவை பரிணாமத்தில் ஜடம் ஆன்மாவாக வெளிப்படுவது மூன்றாம் நிலை, பிரம்ம ஜனனம்.

பக்தன் - ஜடமும், ஆன்மாவும் பிரம்மத்தில் சந்திப்பதே இரண்டாம் நிலையாகுமா?

பகவான் - அது மௌனமான பிரம்மம் காலத்தைக் கடந்தது. மௌனமான பிரம்மம், பரிணாமத்தில் சலனமான செயலாய் எழுவது, ஜடம் ஆன்மாவாகி செயல்படுவது - காலத்துள் காலத்தைக் கடந்த நிலை, அற்புதக் காட்சி.

பக்தன் - *அதையே பிரம்ம ஜனனம் என்கிறோம்.*

பகவான் - சரி. **Unity in multiplicity, One in the Many.** பிரம்மம் பரிணாமத்தில் தன்னையறிந்து தான் தேடிய இன்பம் பெறுவது.

பக்தன் - உலகம் அற்புத சிருஷ்டி. அங்கு துன்பமேயில்லை என்பது நம் பார்வைக்குத் தெரியும் வழியுண்டா?

பகவான் - தானே காண வேண்டும் என்ற அவா பூரணமானால் தெரியும்.

பக்தன் - நான் என்ன செய்யலாம்?

பகவான் - **Knowledge by Identity**, இரண்டறக் கலந்த ஞானமாக அவ்வவா ஆனால் தெரியும்.





பக்தன் - எண்ணத்துடன் இரண்டறக் கலக்க வேண்டுமா?

பகவான் - அப்படிக் கலந்தால் எண்ணம் ஆத்மாவில் தெளிவுபடும்.

பக்தன் - வேறென்ன செய்ய வேண்டும்?

பகவான் - நீ கேட்பது காட்சி, எண்ணமன்று.

பக்தன் - காட்சி புலன்கட்கு. எண்ணம் புலனில் இரண்டறக் கலக்க வேண்டும். அதுபோல் நமக்கு மனிதர்கள், தெய்வம் தெரிகிறது.

பகவான் - சிந்தனை உணர்வாகி, உணர்வே சிந்தனையாக வேண்டும்.

பக்தன் - புலன்களால், அற்புதத்தைக் காண முடியுமா?

பகவான் - புலன்கள் தூய்மையானால் காணும். புலன்களைத் தூய்மைப்படுத்த மனம் தூய்மையான எண்ணங்களை மட்டும் அனுமதிக்க வேண்டும்.

பக்தன் - எந்த அத்தியாயத்தில் புலன்கள் வருகின்றன?

பகவான் - இரண்டாம் அத்தியாயத்தில் அறிவிலிருந்து ஜீவியத்திற்குப் போனால் உலகை சக்திமயமாகக் காண்பது புலன். 9ஆம் அத்தியாயத்தில் ஹிருதயச் சமுத்திரம் தெரிவது புலனுக்குத்தான். ஸ்தாணுவின் அதிவேகம் அமைதியாய்த் தெரிவதும் புலன் அறிவதாகும்.

பக்தன் - புலன்கள் அகந்தையின் கருவிகளல்லவா?

பகவான் - அனுபவம் ஏற்படும்பொழுது அகந்தை அழிவதில்லை, விலகி நிற்கின்றது. அழிந்தால் அனுபவம் நிலை பெறும். *உலகம் அற்புதம் என்பதை மனம் ஏற்பது பூரணமான பின், தியானம் முழுமையானால் காட்சியுண்டு.*

பக்தன் - தியானத்தால் அடிமனம் போக முடியாது என்றீர்களே?

பகவான் - நிலையாகப் போக முடியாது. க்ஷணம் போகலாம். அதையே சரணாகதி, சமர்ப்பணம் மூலமாகப் போக நாளாகும்.

பக்தன் - உதாரணம்.

பகவான் - கல்லூரியில் நடக்கும் நாடகம் பார்க்கும் உரிமை கல்லூரி மாணவனுக்குண்டு. ஒருவருக்கு அது பிரியமானால்,

கல்லூரியில் சேரும்வரை காத்திருக்கலாம். அல்லது எந்த மாணவனுடனும் போய் நாடகம் பார்க்கலாம். நாடகம் பார்க்க எவராலும் முடியும். மாணவனாக அதற்குரிய தகுதிகள் தேவை.

பக்தன் - இந்தக் காட்சி இதுவரை எந்த ரிஷிகட்கும் தெரியாத காட்சியாக இருக்கிறதே.

பகவான் - அவர்கள் அதை நம்பவில்லை. அதனால் அதை நாடவில்லை.

பக்தன் - இன்று எவரும் சிங்கப்பூர் போகலாம். அங்கே தங்குவது வேறு விஷயம். கப்பல் ஏற்படுமுன் அது இல்லை என்பதுபோல் கொள் கிறேன். **Matter** சிக்கலான அத்தியாயம். **Knot of Matter** என்ற அத்தியாயத்தில் ஜடம் பரிணாமம் பெறத் தடையானவை **Ignorance, inertia, division** அஞ்ஞானம், தமஸ், பிரிவினை என வருகிறது. தெரியாதது அஞ்ஞானம், முடியாதது தமஸ் என்றும், பிரிவினை என்பது அகந்தை எனவும் கூறலாமா?

பகவான் - மனிதன் அஞ்ஞானத்துள் ஆனந்தமாக வாழ்கிறான் என்பதே உண்மை. அவன் வேதனைப்படுவதை மற்றவர்கள் அறியலாம். 1903இல் பிளேக் வந்தபொழுது தடுப்பு ஊசி போடுவதைப் பொதுமக்கள் எதிர்த்தனர். சர்க்கார் வலியுறுத்தவில்லை. 10 இலட்சம் பேர் இறந்தனர். அவற்றுள் ஆங்கிலேயர் 5 பேர். தடுப்பு ஊசி போட்டுக் கொண்டதால் 300 பேர் இறப்பதற்குப் பதிலாக 5 பேர் இறந்தனர்.

பக்தன் - இது அஞ்ஞானம். கர்மபலன் என்பர்.

பகவான் - உலகில் ஓர் ஏக்கரில் ஒரு லட்ச ரூபாயிலிருந்து 15 லட்சம் வரை சம்பாதிக்கின்றனர். இந்தியாவில் ரூ. 10,000 முதல் 1 லட்சம் வரை சம்பாதிப்பது எதனால்? அது தமஸ், கற்றுக் கொள்ள முயலவில்லை.

பக்தன் - பிரிவினைக்கு உதாரணம்.

பகவான் - பிரிவினைக்கு அடிப்படை தான் உயர்வு என்ற எண்ணம். தான் தனியேயிருந்தால் அதிகமாகச் சாதிப்பதாக நினைவு. ஆப்கானிஸ்தான் முஸ்லீம்கள் ஐரோப்பியரை விட, இந்தியரை விட உயர்ந்தவர் எனக் கூறுகிறார்கள். உயர்வு





என்ற நினைவு அறியாமையை வலியுறுத்துவதால் எழுந்து பிரிவினையை நாடுகிறது. *உயர்வு என்ற நினைவு செயல்படுவதால் பிரிவினை எழுகிறது.*

பக்தன் - அப்படியானால் சுமுகம் எழத் தடையானது உயர்வு என்ற நினைவா?

பகவான் - அதுவும், சுயநலமும் பிரிவினையை வற்புறுத்தி சுமுகத்தை அழிக்கின்றன. இக்கருத்துகளை ஏற்பவர் ஒருமுறை செயல்பட்டால் எல்லாக் கருத்துகளும் தெளிவாகப் புரிய உதவும்.

பக்தன் - காட்சிக்கு உதவுமா?

பகவான் - செயல் (token act) முடியுமுன் அற்புதம் தெரியும்.

பக்தன் - சிருஷ்டியின் எல்லாக் கட்டங்களையும் வரிசையாக அறிவது பலன் தருமன்றோ?

பகவான் - ஊம்.

பக்தன் - வாழ்விலும், ஆன்மீகத்திலும் முக்கியக் கருத்துகளை ஸ்ரீ அரவிந்தத்துடன் ஒப்பிட்டு எழுதினால், 56 அத்தியாயத் தத்துவங்கள் மூலம் விளக்கம் தரலாமன்றோ?

பகவான் - ஆமாம்.

பக்தன் - சிருஷ்டியின் எட்டு நிலைகளையும், புருஷனின் 5 அம்சங்களையும் நான் எழுதிக் கொள்கிறேன்.

## பிரம்மம்

I சத் - சத்புருஷன்.

1. சத் - சித் - ஆனந்தம்.
2. ஆத்மா - புருஷா - ஈஸ்வரா.
3. சத்தான அகம் சத்தியமான புறமாகி ஆன்மாவை இடையில் உற்பத்தி செய்கிறது.
4. அகமான காலம், புறமான இடம்.
5. பிரபஞ்சத்தில் சத் **(One)** உலகமாகிறது **(Many)**.

II - சத்தியம், ஞானம், அனந்தம் என்பவை சத், சித், ஆனந்தம் என்பவற்றின் புற நிலைகள்.

- சத்திய ஜீவியம் என்பது சச்சிதானந்தத்தின் புறம்.

III ஆத்மா என்ற சொல் பிரம்மத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது. இக்கட்டுரையில் ஆத்மா என்ற சொல் **spirit, soul** என்ற பொருளில் பயன்படும். சத், தன்னைப் புறமாக்கும் அனுபவம் **spirit**, ஆத்மா எனப்படும். உலகம் **spirit** ஆத்மா என்பதாலானது. எந்த நிலையும் **(plane)** ஜீவியம், பொருள் **(substance)** எனப் பிரியும். **Spirit** ஆத்மா என்பது **spiritual substance** ஆன்மீகப் பொருளாகும்.

IV சத்திய ஜீவியம் இரண்டாகப் பிரிகிறது. ஒன்று காலத்தைக் கடந்தது. அடுத்தது காலத்திற்குடையது. மனம் இப்பிளவின் நடுவில் உற்பத்தியாகிறது. மனம் எதையும் முழுமையாகப் பார்க்க முடியாதது. மனம் துண்டு செய்யும் கருவி. *ஆத்மாவைப் புலன் வழி மனம் கண்டால் ஆத்மா மனத்திற்கு ஜடமாகத் தெரியும்.*

V மனம் ஜடத்தைத் துண்டு செய்து அது துச்சமாகும்வரை துண்டு செய்கிறது. துண்டுகள் சேர்ந்து சிறு குவியல்களாகின்றன. ஒவ்வோர் குவியலும் அகந்தையாகும்.

VI மனத்தில் இரு பகுதிகள் உள்ளன. அவை ஞானம், உறுதி. ஞானம் உறுதிமேல் செயல்பட்டால் சக்தி பிறக்கும். அதற்கு வாழ்வு எனப்படும். ஓரளவு ஞானம் தன்னை இழந்துவிடும்.

VII ஞானம் தன்னை முழுவதுமிழந்தால் வாழ்வு ஜடமாகும். இத்துடன் சிருஷ்டி முடிகிறது. இனி வருவது பரிணாமம்.

## பரிணாமம்

பரிணாமம் மனத்தில் ஆரம்பிக்கின்றது.

பிரகிருதியின் ஆத்மாவுக்கு சைத்தியப் புருஷன் எனப் பெயர்.

பிரகிருதியின் அனுபவச்சாரம் சைத்தியப் புருஷன்.

அது முதலில் மனத்தில் **mental psychic** என எழுகிறது.

இது ஒரே சமயத்தில் மேலும் கீழும் சஞ்சாரம் செய்கிறது.





மேலே போக சைத்தியப் புருஷன் முதலில் கீழே போய் மேலே எழ வேண்டும்.

கீழே போனது மேலெழுந்து வந்து முனிவர், ரிஷி, யோகி, தெய்வநிலைகளின் சைத்தியப் புருஷனாகி, பொன்முடியைக் கடந்து ஈஸ்வரனாகி, சத்தியஜீவனாகும். கீழே போக வேண்டிய பகுதி பிராணனின் சைத்தியப் புருஷன், உடலின் சைத்தியப் புருஷனாகும். உடலில் ஜீவியம், பொருள் என இரு பகுதிகளிருப்பதால், பொருளின் சைத்தியப் புருஷனாகும் பொழுது அது சத்தியஜீவனாகிறது.

## இதர விஷயங்கள்

- சத் என்பது ஜடமாகவும்,

  சித் என்பது வாழ்வாகவும்,

  ஆனந்தம் என்பது சைத்தியப் புருஷனாகவும்,

  சத்திய ஜீவியம் மனமாகவும் தலைகீழே மாறி சிருஷ்டி பூர்த்தியாகிறது.
- பிரம்மம் ஆனந்தத்தைத் தேடி தன்னுள் தான் மறைந்து சிருஷ்டியை உண்டு பண்ணியது.
- ஒளிவது சிருஷ்டி, வெளிவருவது பரிணாமம்.
- *சிருஷ்டியிலும், பரிணாமத்திலும் பிரம்மம் பிரம்மமாகவேயிருக்கிறது. தன் முழுமையை, பிரம்மம் எப்பொழுதும் இழப்பதில்லை.* மனிதனுக்குப் பல்வேறு உறுப்புகளுண்டு. ஆனால் அவ்வுறுப்புகள் அவனிலிருந்து எப்பொழுதும் பிரிந்து போவதில்லை. பார்ப்பவர் தலையை மட்டும் பார்ப்பதால் மனிதன் என்பது தலை எனக் கூற முடியாது. கால்களை மட்டும் காண்பவர் மனிதனைக் கால்கள் என நினைப்பது உண்மையாகாது.
- பிரம்மம் தன் முழுமையை இழந்ததில்லை. என்றும், எப்பொழுதும் பிரம்மம் பிரம்மமே.

  வாழ்வின் அடிப்படையான பல நம்பிக்கைகளையும் அதற்கேற்ற ஸ்ரீ அரவிந்தத்தின் கூற்றையும் கீழே எழுதுகிறேன்.

1. பொருள்கள், சக்தி, ஆயுள் ஆகிய எதற்கும் அளவுண்டு.

   அன்னை வாழ்வில் ஆயுள் உள்பட எப்பொருளுக்கும் அளவு என்பதில்லை.

2. வாழ்வின் ஜீவநாடி பொய்.

   சத்தியம் மட்டும் ஆட்சி செய்வது அன்னை வாழ்வு.

3. மனிதன் கர்மத்திற்குக் கட்டுண்டவன்.

   கர்மம் மனிதனைக் கட்டுப்படுத்தாது.

4. செல்வம், பதவி முக்கியம்.

   ஜீவியம் முக்கியம், அது மட்டும் முக்கியம்.

5. ஊரில் நடப்பவை, இயற்கை நிகழ்ச்சிகள் நமக்குக் கட்டுப்பட்டவையல்ல.

   புறம் அகத்தைப் பிரதிபலிப்பதால், அகத்திற்குக் கட்டுப்பட்டது.

6. ஓரளவு கடுமை, கொடுமை, வன்முறை தவிர்க்க முடியாதது.

   வாழ்வு கருணை மயமானது, அருளன்றி வேறெதுவும் அங்கில்லை.

7. பொருள், காலம், சக்தி விரயமாவது இயல்பு.

   விரயம் என்று நாமறிவது இயற்கையின் விஸ்வரூபம்.

8. ரத்தபாசம் பேசும்.

   அன்பு பாசத்தை விட உயர்ந்தது.

9. வெற்றி தோல்வியுடன் கலந்தது.

   தோல்வியறியாத வெற்றி நிலையானது.

10. மனித சுபாவம் மாறாது.

    சுபாவம் திருவுருமாறும்.

11. குற்றம் பணம், பொருள், பெண்ணிலிருந்து எழுவது.

    அவை நெகிழ்வை நெருக்கமாக்கும்.





12. பற்றாக்குறை என்பது எப்பொழுதும் எழக்கூடியது.

    அபரிமிதம் சட்டம். நாம் பிரியப்பட்டு பற்றாக்குறையை எழுப்புகிறோம்.

13. மனிதன் மட்டமானவன், சுயநலம் அவனது பிறப்புரிமை.

    பெருந்தன்மையான அர்ப்பணம் இயல்பு.

14. தலைவிதிக்குத் தலை வணங்க வேண்டும்.

    விதியை நாமே நிர்ணயிப்பது விதி.

15. நட்பு, விஸ்வாசம், காதல் நீர்க்குமிழி போன்று நிலையற்றவை.

    அவைமட்டும் வாழ்வில் நிலையானவை.

16. இலட்சியம் நடைமுறைக்குதவாது.

    இலட்சியம் வளர்ந்தால் வாழ்வில் வெற்றியுயரும்.

17. உடலின் திண்மை மனத்தின் தூய்மையை நிர்ணயிக்கும்.

    மனம்போல் உடல்.

18. படிப்பு என்பது பட்டம்.

    படிப்பும், கல்வியும், அறிவும் ஞானமாகா.

    ஆத்மா மனத்தால் பெறும் அனுபவம் ஞானம்.

19. நாலு பேர்போல் நாமும் நடக்க வேண்டும்.

    ஊரையோ, மனச்சாட்சியையோ புறக்கணித்து ஆத்மாவைப் பின்பற்ற வேண்டும்.

20. மனிதனாகப் பிறந்தவன் உடலால் உழைப்பது அவசியம்.

    மனமும் ஆன்மாவும் உடல் மூலம் உழைக்க வேண்டும்.

(வாழ்வின் நம்பிக்கைகள் 20 அல்ல, 200ம் ஆகும். மனித வாழ்வு சுருங்கியது, இருண்டது, துன்பமானது என்பதே அடிப்படை. பெரும் பீழையுள்ளது வாழ்வு. அன்னை வாழ்வு அழகானது, அருள்மயமான அதிர்ஷ்டமுடையது என்ற கருத்தின் தத்துவ அடிப்படைகளை மரபின் ஆன்மிகத் தத்துவங்களுடன் எழுதுகிறேன்.)

1. மோட்சம் சிகரமானது.

   திருவுள்ளம் திருவுருமாற்றம்.

2. ஆசனம், பிராணாயாமம், மந்திரம், தந்திரம், தியானம், ஜபம் கருவிகள்.

உடலுக்குரிய முறை உதவாது. சரணாகதி மட்டுமே முறை.

3. ஜீவாத்மா பரமாத்மாவையடைய வேண்டும்.

ஜீவாத்மாவே பரமாத்மா.

4. காலத்தைக் கடந்த நிலையுண்டு.

இரண்டையும் கடந்த நிலை காலத்துள் உண்டு.

5. ஆத்மா பிறப்பு, இறப்பில்லாதது. அது ஜீவாத்மா.

இது ஆன்மீகப் பரிணாம யோகம். சைத்தியப் புருஷன் வளரும் ஆன்மா

ஆத்மா வளர்ந்து பிரம்மத்தையடையும்.

6. திரிகாலம் மனித வாழ்வைக் கடந்தது.

காலத்தைக் கடந்த நிகழ் காலம் ஆத்மாவுக்குரியது.

7. மனிதன் சிருஷ்டியின் சிகரம்.

சத்தியஜீவன் அடுத்த மனித நிலை.

8. மனம் உலகை சிருஷ்டித்தது. அகந்தை சிருஷ்டித்தது.

சத்தியஜீவியம் சிருஷ்டித்தது.

9. முரண்பாடே இயல்பானது.

முரண்பாடு உடன்பாடு.

10. ஜடம் ஆன்மாவிலிருந்து மாறுபட்டது.

இரண்டும் ஒன்றே.

11. சிருஷ்டி லீலை

ஆனந்தத்தை நாடி பிரம்மம் ஒளிந்து வெளிவருவது சிருஷ்டி.

12. கடவுளை அறிவது ஞானம், உலகை அறிவது அஞ்ஞானம்.

ஞானம் அஞ்ஞானமாகிறது. அஞ்ஞானம் ஞானத்தைவிடப் பெரியது.





13. உலகம் எப்படி உற்பத்தியாயிற்று என நாம் அறிய முடியாது.

ஸ்ரீ அரவிந்தம் உலகம் எப்படி இறைவனிலிருந்து வந்தது எனக் கூறுகிறது.

14. வாழ்வு இருண்டது.

வாழ்வு சக்தியின் சிறப்பு.

15. சிருஷ்டி ஏற்பட்ட வகையை நாம் அறியமுடியாது.

புருஷன் தன்னிச்சையால் தன் சக்தியிலிருந்து சிருஷ்டித்தான்.

16. சத், சித்திலிருந்து மாறுபட்டது. ஆனந்தம் வேறு.

மூன்றும் ஒன்றே.

17. ஆன்மா, மனம், சத்தியஜீவியம், வாழ்வு, ஜடம் விளக்கப்படவில்லை.

ஸ்ரீ அரவிந்தம் விளக்கம் கூறுகிறது.

18. தீமை தவிர்க்க முடியாதது.

சுயமான நல்லதுண்டு.

19. பிறவி அற, பிறப்பு வேண்டும்.

ஆன்மா வளர மறுபிறப்புத் தேவை.

20. வாழ்வை நீத்து ஆன்மாவையடைய வேண்டும்.

வாழ்வனைத்தும் யோகம்.

21. எதற்கும் உரிய காலம் உண்டு. நேரம் வாராமல் முடியாது.

எதுவும் க்ஷணத்தில் முடியும்.

22. ஆத்மா அகத்திற்குரியது.

பிரபஞ்சமும், பிரம்மமும் அகத்தில் உள்ளன.

23. ஜடம் ஆன்மாவை ஆளும்.

ஆன்மா ஜடத்தை ஆளும்.

⌘ ⌘ ⌘

'**The Life Divine**' என்ற நூலில் உள்ள 56 அத்தியாயங்களுக்கும் ஒரு தத்துவம் உண்டு. சில அத்தியாயங்களில் பல தத்துவங்களும் வருகின்றன. அவற்றுள் 50 முதல் 100 வரை தத்துவங்களை எடுத்து விளக்கமாகப் புரிந்து கொண்டால் நூல் புரிய உதவியாக இருக்கும்.

1. முரண்பாடு உடன்பாடு.
2. ஜடமும் ஆன்மாவும் ஒன்று.
3. அறிவுக்கு எட்டாதது ஜீவியத்திற்கு எட்டும்.
4. பிரபஞ்சத்தில் ஜடமும், ஆன்மாவும் சக்தியாக சந்திக்கின்றன.
5. கடந்த நிலையில் சத்தும், அசத்தும் பிரம்மத்தில் சந்திக்கின்றன.
6. எந்தத் தத்துவமும் காலைத் தரையில் வலுவாக ஊன்றுதல் அவசியம்.
7. சர்வம் பிரம்மம், ஏகம் ஏகதுவித்தியம் என்பவற்றைச் சேர்த்து அறிய வேண்டும்.
8. சன்னியாசி பிரம்மத்தை அறிந்ததைப்போல் விஞ்ஞானி ஜடத்தை அறிய வேண்டும்.
9. சிருஷ்டியில் இறைவனை அறிந்ததைப்போல் பரிணாமத்தில் அறிய வேண்டும்.
10. ஆரியர் கண்ட ஒற்றுமையை சத்திய ஜீவியத்தில் காணும் பொறுமை வேண்டும்.
11. சத்தில் ஊன்றிய காலை எடுக்காமல் அசத்திற்குப் போக வேண்டும்.
12. பரமனும், பாதாளமும் இணைதல் அவசியம்.
13. கடந்ததை விலக்குதல் கூடாது.
14. பிரபஞ்சமும், மனிதனும் இணைய வேண்டும்.
15. மரணத்தை விலக்கும் திறன் மனிதனுக்குண்டு.
16. அறிவிலிருந்து உணர்வு விலகினால் ஞானம் ஏற்படும்.
17. அகந்தை விலகினால் ஹிருதயச் சமுத்திரம் தெரியும்.
18. சூரிய மண்டலமும், எறும்புப் புற்றும் ஒன்றே.





19. ஆரம்பம், முடிவு என்பவையில்லை.
20. பிரம்மத்திற்கும் உலகுக்கும் உள்ள தொடர்பை அறிவது விவேகம்.
21. சக்தி சத்தின் வெளிப்பாடு.
22. விரயம் என்பதில்லை.
23. வாழ்வில் தர்மமில்லை.
24. சச்சிதானந்தம் ஆனந்தத்தைப் பொருள்களில் வெளிப்படுத்த முனைகிறது.
25. ஜீவனின் ஆனந்தம் பிரகிருதியின் ஆனந்தமாவது பரிணாமம்.
26. ஆனந்தத்தைத் தேடி ஆண்டவன் உலகை சிருஷ்டித்தான்.
27. மாயை பிரம்ம ஜீவியம். அது எதையும் சிருஷ்டிக்கும்.
28. சத்திய ஜீவியம் உலகை சிருஷ்டித்தது.
29. ஜீவனின் பூரண எண்ணம் சத்திய ஜீவியத்தில் சிருஷ்டிக்கிறது.
30. ஜீவியம் மூன்றாகப் - ஞானி, ஞானம், பொருள் - பிரிகிறது.
31. சத்தியஜீவியத்திற்குக் கடவுள், ஜீவாத்மா, அகந்தை என மூன்று நிலைகள் உள்ளன.
32. எல்லா ஜீவன்களிலும் கடவுள் உண்டு. கடவுளில் எல்லா ஜீவன்களும் உறைகின்றன. ஒரு ஜீவன் மற்ற எல்லா ஜீவன்களிலும் உள்ளது. எல்லா ஜீவன்களும் ஒன்றில் உள்ளன.
33. சத்தியஜீவியம் இரண்டாகப் பிரியுமிடத்தில் மனம் உற்பத்தியாகிறது.
34. மனம், சத்தியஜீவியத் தொடர்பை இழந்தால் அஞ்ஞானம் எழும்.
35. பிரபஞ்சம் அழிந்தாலும் வாழ்விருக்கும்.
36. ஞானம் உறுதி மேல் செயல்படுவதால் வாழ்வு உண்டாகிறது.
37. அடிமனம் மேல்மனத்தை ஆள்வதை அறிவது முதல் சித்தி.
38. மரணம் வாழ்விற்கு அமரத்வமளிக்கிறது.
39. சக்தியும், ஜீவியமும் சேர வேண்டும்.
40. உடல் உணர்வை மனத்தில் எண்ணமாக்கி அதற்கு உடலை உட்படுத்துவது வாழ்வு.

41. இயலாமை போராடி வலுப்பெற்றால் சைத்தியப் புருஷன் மனதில் எழுகிறான்.
42. ஜடம் சச்சிதானந்தம்.
43. மனம் ஆன்மாவைப் புலன்வழி அறிந்தால் அது ஜடம்.
44. அஞ்ஞானம், தமஸ், பிரிவினை ஜடம் பெற்ற தடை.
45. சத்திய ஜீவியம் சிருஷ்டிப்பது என்பது பிரம்மம் சிருஷ்டிப்பதாகும்.
46. பிரம்மம் பூரண முழுமையுடையது. மனம் அதைப் பகுதியாகக் காண்கிறது.
47. ஜீவாத்மாவே பரமாத்மா.
48. Negative வேண்டாதது என்றொன்றில்லை.
49. மனம் இல்லாததை நினைக்க முடியாது.
50. பாம்பும், ஆவியும் உள்ளவை.
51. சுய-ஜீவியம் அஞ்ஞானத்தில் சுய-அனுபவம் பெறுவது அகந்தை.
52. நினைவு காலத்திற்குரியது.
53. ஆன்மாவையும், இயற்கையையும் மேலும் கீழும் அறிவது பூரணம்.
54. ஐக்கியம், ஞானம், அடிமன அறிவு, அகந்தையின் அறிவு என நான்கு வகை அறிவுண்டு.
55. ஏழு வகை அஞ்ஞானங்களுண்டு.
56. மேல் மனத்தில் அஞ்ஞானம் பூரணமடைகிறது.
57. அஞ்ஞானம் ஞானத்தை விடப் பெரியது.
58. உலகில் தீமை படைக்கப்படவில்லை.
59. ஜீவாத்மாவும், பரமாத்மாவும் உள்ளடங்கிய பிரம்மம் சத்தியம்.
60. பூரணவாழ்வு கடந்தது உள்பட எதையும் விலக்காது.
61. பரமாத்மாவும், பாதாளமும் மனிதனில் இணைய வேண்டும், இணைந்து உயர வேண்டும்.
62. ஏழு வகை அஞ்ஞானங்கள், ஏழு வகை ஞானங்களாகத் திருவுருமாறும்.





63. புனர் ஜென்மமில்லாமல் ஆன்மாவிற்குப் பரிணாமமில்லை.
64. கர்மம் சக்திக்கு, ஜீவனுக்கில்லை.
65. ஆன்மா வளரும்பொழுது உடலின் ஜீவியமும் வளர்ந்தால் உடலை மாற்ற வேண்டாம்.
66. பிரம்மம் தன்னுள் ஜனித்த பின், பிறருள் ஜனிக்க உதவுவது சேவை.
67. திருவுருமாற்றத்தின் நிலைகள் மூன்று.
68. உடலின் இருளை, பரமனின் ஒளியே மாற்ற முடியும்.
69. புறம் அகமானால், யுகம் க்ஷணமாகும்.
70. தவிர்க்க முடியாத திருவுருமாற்றம் பெற சரணாகதி மட்டுமே முறையாகும்.

பக்தன் - புறம் அகமானால், யுகம் க்ஷணமாகும் எனில் எப்படி 100 ஆண்டு 100 நாளாகும் என்பதை மீண்டும் ஒரு முறை கேட்கப் பிரியப்படுகிறேன்.

பகவான் - 15 நாளில் USAக்குப் போகும் தபால் 15 நிமிஷத்தில் எப்படிப் போகிறது? தபாலில் உள்ள விஷயம் மின்சார அலைகளாக மாறிப் போவதால் வேகம் அதிகரிக்கிறது, புறம், காலம். அகம் காலத்தைக் கடந்தது. *புறம் அகமாவது எனில் காலத்தில் செய்வதைக் காலத்தைக் கடந்து செய்யமுடியும் என்பதால் வேகம் வருகிறது.*

பக்தன் - வீட்டில் 11 பேருள்ளனர் என்பதை மனதால் எண்ண முடியாமல் வாயால் பேரைச் சொல்லி விரல் விட்டு எண்ணுவது படிக்காதவன் நிலை. காலத்தில், செயலால் செய்வதைக் காலத்தைக் கடந்து செய்ய வேண்டுமானால் மனத்தால் செய்ய வேண்டும். வேகம் மனோ வேகம்.

பகவான் - மனத்தால் நினைப்பது, மனத்தால் செய்வதாகாது. செயலின் நுணுக்கத்தை மனம் அனுபவத்தால் அறிந்து, அது செயலாக மாறும் தீவிரத்துடன் மனம் செயல்பட வேண்டும்.

பக்தன் - மந்திரம் அப்படித்தான் சக்தி வாய்ந்ததாகிறதா?

பகவான் - இந்த நேரம் எந்த நாட்டிலும், எந்தக் காரியம் நடக்க வேண்டுமானாலும் அதற்குரிய கருவியைச் செய்ய முடிவதுபோல், *அதற்குரிய மந்திரத்தை எழுதலாம்.*

பக்தன் - மந்திரம் மனத்திற்குரியது. டெக்னாலஜி ஜடத்திற்குரியது. உலகம் அதை **formula** சூத்திரம் எனக் கருதுகிறது. அதன்படி, சொற்கள் பரவிவருகின்றன - **Sustainable development** என்ற தொடர் இப்பொழுது அப்படிப்பட்டது.

பகவான் - அந்த மந்திரம் வாய்ச் சொல்லாகவோ, மனத்தின் எழுச்சியாகவோ, ஆன்மாவின் அசரீரியாகவோ, ஆன்மா மனத்தில் வெளிப்படுவதாகவோ இருக்கமுடியும். நிலை மாறினால் வேகம் மாறும்

பக்தன் - உலகு அவற்றை அறியவில்லை.

பகவான் - உலகில் எதுவும் திடீரென உற்பத்தியாவதில்லை. *20ஆம் நூற்றாண்டில் நடந்த புரட்சிகள், போர்கள், விஞ்ஞான முன்னேற்றங்கள் அனைத்தும் எப்படிப் படிப்படியாக உருவாகின என சரித்திரம் கூறுகிறது.* முன்கூட்டி அறிய சரித்திரத்தின் போக்குத் தெரிய வேண்டும். அது தெரிந்தால் வேண்டாதவற்றை விலக்கலாம். வேண்டியவற்றைத் துரிதப்படுத்தலாம்.

பக்தன் - நிகழ்ச்சி நடந்த பின் நாம் விழித்துக் கொள்கிறோம்.

பகவான் - 30,000 ஆண்டுக்குப் பின் வருவது தெரிவதால் 300 ஆண்டிற்குப் பின் வருவதைத் தெரிந்து கொள்ள முடியுமன்றோ.

பக்தன் - **No.** 18 சூரிய மண்டலமும் எறும்புப் புற்றும் ஒன்றே என்பதை அமெரிக்காவும், இந்தியாவும் ஒன்றே எனக் கூறலாமா?

பகவான் - அற்புதமான கேள்வி. 18இல் என்ன விசேஷம்? இரண்டும் ஒன்று என்று அறிந்தால் எறும்புப் புற்று, சூரிய மண்டலமாகலாம் என்பதே விசேஷம். *அது பலிக்க நாம் அவற்றை பிரம்மத்திலிருந்து அறிய வேண்டும்.*

பக்தன் - மாடு மேய்ப்பவன் மகனும், பேராசிரியர் மகனும் அறிவில் சமமானவர் என்றால், அறிவு என்றால் என்ன, கல்வியை எப்படி அறிவு வரும்படி - பட்டம் பெறும்படியன்று - போதிப்பது என்று தெரிந்தால் மாடு மேய்ப்பவன் மகன் படிப்பால் பேராசிரியர் மகனுக்குச் சமமாக வருவான் என்ற உதாரணம் சரி வருமா?





பகவான் - சரி. அதையும் கடந்த நிலையில் அவையிரண்டையும், - எறும்பு, சூரியன் - உற்பத்தி செய்யப் பயன்பட்ட சக்தி சமம் என்பது அது.

பக்தன் - நடைமுறையில் எப்படி அதை உணர்வது?

பகவான் - மேலும் ஒரு படி கடந்தால், எறும்பு, சூரியன் சிருஷ்டிக்க பிரம்மம் இரண்டிற்கும் தன்னை முழுமையாகக் கொடுத்தது என்பது தத்துவம்.

பக்தன் - அடுத்த நிலையும் உண்டா? நாம் எப்படி அறிவது?

பகவான் - *எந்த நிலை விளக்கத்தை நாம் அறிய வேண்டுமோ, செயல்படுத்த வேண்டுமோ நாம் அந்த நிலையில் இருக்க வேண்டும்.*

பக்தன் - இதெல்லாம் பகவானுக்கும், அன்னைக்கும் உரியதல்லவா? எங்களுக்கு எப்படிப் பொருந்தும்?

பகவான் - இந்தக் கேள்வி எந்த மனநிலையிலிருந்து எழுகிறது?

பக்தன் - சாதாரண மனித நிலை அது. அதுவே பலனை நிர்ணயிக்குமா?

பகவான் - எப்படிப்பட்ட டெக்னாலஜியை எந்த நிலை மக்கள் இன்று அனுபவிக்கிறார்கள்?

பக்தன் - எல்லோரும் எல்லாவற்றையும் அனுபவிக்கிறார்கள். விஞ்ஞானம் கண்டுபிடித்ததை வியாபாரம் தருவதால் எளியவரும் எட்டாததை அனுபவிக்கிறார்கள்.

பகவான் - **USA** எப்படி இந்நிலைக்கு வந்தது, இந்தியா எப்படி இங்கிருக்கிறது என்ற ஆராய்ச்சி ஆதிக்குப் போனால், முறை எளிதில் புரியும். புரிந்தால் செய்யலாம்.

பக்தன் - படிப்பு, அந்தஸ்தில் நாம் இன்று காண்பதை அப்படிப் புரிந்து கொண்டால், நாட்டு வளத்தில் காணலாம் என்றாகிறது.

பகவான் - இம்முறையறிந்து ஏழையைப் பணக்காரனாக்கினால், பயந்தவரை தைரியமாக்கினால், தாழ்ந்தவரை உயர்ந்தவராக்கினால், நாமும் அமெரிக்கா ஆகலாம்.

பக்தன் - இவையெல்லாம் இன்று நடக்கின்றன.

பகவான் - தானே நடப்பது மெதுவாக நடக்கும். முனைந்து செய்தால் முழுமையாக நடக்கும்.

பக்தன் - இது ஆபத்தான பாதை.

பகவான் - மிருகக்காட்சிசாலை அமைக்கும் பொழுது ஆபத்து அதிகம்.

பக்தன் - ஆபத்து என நாம் சொல்வது என்ன?

பகவான் - உத்தியோகம் டிரான்ஸ்பரானால் வேலை போகவில்லை. உடல் மாறினால் உயிர் போகிறது, ஆத்மா அழியவில்லை என்பதை அறியாதபொழுது இம்மாற்றத்திற்குரிய நிகழ்ச்சியை நாம் வெறுக்கிறோம். பெரியதை ஆபத்து என்கிறோம்.

பக்தன் - ஆபத்து என்பதே இல்லையா?

பகவான் - பெரிய ஆத்மா சாதிப்பதில் (adventure) வீரத்தைக் காண்பதுபோல் ஆவி அழிப்பதில் வீரத்தைக் காட்டுவதை நாம் சேதம் என்கிறோம்.

பக்தன் - இதுவரை உலகில் கேள்விப்படாதது.

பகவான் - பெருஞ்சேதங்களைக் கண்டு கலங்கக் கூடாது என உதாரணத்தின் மூலம் கூற முடியுமா?

பக்தன் - பள்ளிக்குப் போகும் குழந்தை அழுவதை நாம் பொருட்படுத்துவதில்லை.

பகவான் - 4 வயதுக் குழந்தை, 3 வயதுக் குழந்தை அதுபோல் அழுவதைக் கண்டு தானும் அது போலிருந்ததை நினைத்துச் சிரிக்கும். இங்கு மனம் ஏற்கும் அனுபவம், அறிவு இருப்பதைப்போல் வெள்ளம், புயலிலிருப்பதில்லை. *விஷயம் ஒன்றே, அளவு வேறு.*

பக்தன் - தத்துவம் புரிவது மனத்தைத் தேற்றும்.

பகவான் - கடவுள் இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்கும்பொழுது, நம்மாலிருக்க முடியவில்லை.

பக்தன் - அவர்தானே இவற்றைச் செய்வது?

பகவான் - இவற்றைச் செய்து ஆனந்தம் அனுபவிக்கிறார்.





பக்தன் - துன்பம் துன்பமில்லை, ஆனந்தம் என்பது இதுதானா? உலக நிகழ்ச்சிகளில் பெரியது, சிறியது மூலம் இக்கருத்தை மேலும் சற்றுப் புரியுமாறு சொல்ல முடியுமா?

பகவான் - சொல்லலாம், சொல்வதற்கு அளவுண்டு. *சொல்லாமல் செய்பவற்றைச் சேர்ந்தவை இவை.*

பக்தன் - சொல்லாமல் செய்யும் காரியங்கட்கு எனக்கு உதாரணம் தோன்றவில்லை.

பகவான் - உதாரணம் ஓரளவுதான் தேவைப்படும், பயன்படும்.

பக்தன் - இனி உதாரணம் பயன்படாது என்ற எல்லைக் கோட்டிலுள்ளது எது?

பகவான் - - - - - - - - -

பக்தன் - மௌனமா?

பகவான் - தானே உள்ளிருந்து எழும் மௌனம் பேச்சும், பொருளும் பொருளை இழந்ததற்கு அடையாளம்.

பக்தன் - சொல்லை இழந்ததைப்போல், உணர்வை, செயலையும் இழந்து நாம் பெரிய மௌன அமைதியை அடைகிறோமன்றோ!

பகவான் - நூல் படிப்பவரை அந்த மௌனம், அமைதிக்கு அழைத்துப் போகிறது.

பக்தன் - நான் பார்த்திருக்கிறேன். Silence என்பது எல்லா நிலைகட்கும் உள்ளதா?

பகவான் - ஆம். மௌனம் மட்டுமன்று, எல்லா அம்சங்களும் எல்லா நிலைகட்கும் உள்ளன.

பக்தன் - ஏன் அப்படி?

பகவான் - அகண்டத்திலிருந்து, கண்டம்வரை எல்லாம் பிரம்மம் என்றால், பிரம்மத்துள் அனைத்தும் உள்ளன.

பக்தன் - அன்னிய பாஷையில் பேசினாலும், சில சமயம் என்ன பேசுகிறார்கள் என்று புரிவது இதுதானா?

பகவான் - சொல் வேறு, கருத்து ஒன்று என்பதால் பிறர் மனத்தின் கருத்து, நம் மனத்தை சொல்லில்லாமல் தொடுகிறது.

பக்தன் - இது அடிமனத் தொடர்பா?

பகவான் - புரியாது, வேறு பாஷையில் பேசுகிறார்கள் என்பதால் ஆழ்ந்து கவனிக்கிறோம். அடிமனம் செயல்படுகிறது.

பக்தன் - **Silence behind Silence** என்பது எந்த நிலை? பிரம்மத்தின் நிலையா?

பகவான் - பிரம்மத்திற்கு silence என்ற குணமும் இருப்பதாகக் கூறுவது பொருந்தாது.

பக்தன் - அன்னை வாழ்வு அளவு கடந்தது என்பதை நம் மனத்தைத் தொடும் விளக்கம், உதாரணம் மூலம் மீண்டும் ஒருமுறை கூறமுடியுமா?

பகவான் - சூட்சுமம் அதிகமானால் சுலபமாகப் புரியும். வாய் ஓயாமல் பேசுபவரின் பேச்சு அனந்தம் என்பதை ஏற்பதைப்போல் நம் கால்கள் அளவுகடந்து நடக்க வல்லவை என்பதை ஏற்க முடிவதில்லை. அது புரிய ஜடத்தை அறிய வேண்டும். ஜடப் பொருளும், சூட்சுமப் பொருளும் ஒன்றே என மனம் அறிவது ஓரளவு உதவும். ஜடம் ஏற்பட்டதை நினைவு கூறினால் இரண்டும் தத்துவப்படி ஒன்றே எனத் தெரியும். அனந்தம், அபரிமிதம், அளவுகடந்தது என்பவற்றை நாம் தொடர்ந்த செயலாகக் கற்பனை செய்கிறோம். நதி தொடர்ந்து ஓடுவதுபோல் வாய் ஓயாமல் பேசவேண்டும் என்பதில்லை. பேச முயலும் பொழுதெல்லாம் பேச்சு எழுவது வரையறையற்ற திறன் என்பது தெளிவு. *திறனிருந்து செயல்படாவிட்டால், செயல்பட முடியாது எனப் பொருளன்று.*

பக்தன் - ஜடம் தன் அபரிமிதத்தை வெளியிட முதலில் சூட்சுமமாக வேண்டுமா?

பகவான் - அது பொதுவானது. விலக்கானது, ஜடமே தன்னை அபிவிருத்தி செய்வது.

பக்தன் - ஓர் அச்சிலிருந்து ஆயிரக்கணக்கான பிரதிகளை அச்சிடுவதை ஜடம் அபரிமிதமாக வளர்வதற்கு உதாரணமாகக் கூற முடியாதா?

பகவான் - நல்ல உதாரணம்.





பக்தன் - வாழ்வின் ஜீவநாடி பொய். அன்னை வாழ்வு சத்தியத்திற்குரியது என்பதை எப்படி விளக்க முடியும்?

பகவான் - வாழ்வில் சத்தியம் தோற்பதற்கு உதாரணம் தேவையில்லை. பொய் ஜெயிப்பதற்கும் உதாரணம் தேவையில்லை. *அன்னை வாழ்வில் சத்தியம் தோற்றதில்லை, பொய் ஜெயித்ததில்லை என்பதற்கு உதாரணம் வேண்டுமா?*

பக்தன் - தேவையில்லை. கர்மத்தைப் பற்றியும் விளக்கம் வேண்டாம். 68ஆம் பக்க பட்டியலில் மேற்கண்டவை 1,2,3, அடுத்த 4, 5 இல் 4க்கு விளக்கம் தெரியும், 5உம் ஓரளவு தெரியும். இருப்பினும் மேலும் ஏதேனும் கூறலாமா?

பகவான் - நான் என்ன செய்வேன், பெண், கட்டுப்பட்டவள்; நான் சிறுவன், குடும்பம் பெரியவர்கட்கு நான் கட்டுப்படாமலிருக்க முடியுமா; ஊர் பெரிய விஷயம். அதனுடன் ஒத்துப் போவது நல்லது. எதிர்க்க முடியுமா? அழிவை நாடுபவனுக்கு அது குறுக்குவழி என்ற கருத்துகளை ஏற்கனவே பார்த்தோம். *முடிவான முடிவு நம்முடையது என்றோம்.*

பக்தன் - அவையெல்லாம் தெரியும். போதாது. ஊரைக் கடந்து இயற்கையின் புயலும், பூகம்பமும் நமக்குக் கட்டுப்படும் என்பது பெரிய விஷயம். பிரார்த்தனைக்குப் புயல் கட்டுப்படுவது அன்னைக்குக் கட்டுப்படுவது.

பகவான் - தத்துவம் புரிவது மனத்திற்குத் தெளிவு தரும்.

பக்தன் - ஒரு தத்துவம் ஆயிரம் கேள்விகளை விலக்கும்.

பகவான் - சிருஷ்டி பிரம்மாவின் அகம். சிருஷ்டி புறம். புறத்தின் ஆரம்பம் அகம். ஆதியும், ஆரம்பமுமான அகத்திற்குப் புறம் கட்டுப்படுவது இயற்கை.

பக்தன் - ஊரில் கலாட்டா, உலகில் போர் நடக்கிறது. நம் மனம் கடுகு.

பகவான் - **DNA, gene** கண்ணுக்குத் தெரியாது. நம் வாழ்வை ஆள்கின்றன. பிரதம மந்திரியின் அன்றைய ஒரு சொல் 50 ஆண்டுகளாக ஆயிரம் இடத்தில் சட்டமாக அமுலாகிறது.

பக்தன் - பிரதம் மந்திரிக்கே அவர் சொல்லுக்குரிய சக்தி ஆச்சரியம் தரும்.

பகவான் - **தான் போட்ட சட்டம் உலகை ஆள்வதைக் கண்டும், சந்தேகம் எழுவது மனித இயல்பு.**

பக்தன் - சக்தியுள்ளவர்க்கு சந்தேகம் வருகிறது. இல்லாதவர்க்கு ஏன் வாராது. முதலில் சக்தியைப் பெற வேண்டும்.

பகவான் - *சந்தேகம் போனால் சக்தி வரும். புறம் அகமானால் சந்தேகம் போகும், சக்தி எழும்.*

**வீட்டில் அடம் பிடிக்கும் குழந்தை, இரவு 11 மணிக்கு வீடு திரும்பும் கணவன், வாய் ஓயாமல் குறை கூறும் மனைவி, எதிர்மாறாக நடக்கும் ஊழியன் போன்றவை இருந்தால் அங்குச் சோதனை செய்ய வேண்டும்.**

பக்தன் - *அவன் செய்வது அத்தனையும் நம் 'அகத்திற்குரியது என வைத்துக் கொள்ள வேண்டும்'* என்று கூறுவீர்கள்.

பகவான் - **வைத்துக் கொள்வதில்லை. அவர்கள் நடத்தை நம் மனதில் ஆரம்பித்தது. செய்வது நாம், வெளிப்படுத்துவது மற்றவர், என்று கொண்டால், அது பலிப்பதைப் பார்த்தும் நம்ப முடியாது.**

பக்தன் - பார்த்தபின் ஏற்பது இயல்பன்று. கொஞ்சம் கொஞ்சமாக அதிகப் படுத்தினால், முடிவான பெரிய காரியங்கள் முடிவதைக் காணலாம் என்று நான் கண்டிருக்கிறேன்.

பகவான் - **தான் கண்டதை, அறிந்ததை, அனுபவித்ததை, பாராட்டி அடுத்த அடுத்த நிலைகளில் பலன் பெறும் நோக்கம் நமக்கிருப்பதில்லை.**

பக்தன் - விஷயம் வரும் பொழுதெல்லாம் ஒருவர் இதை எடுத்துக் கூற வேண்டியிருக்கிறது.

பகவான் - **நாம் படித்தவர்களானாலும், physical being உடலால் செயல்படுவதால் மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டியிருக்கிறது. மனம் அறிந்தாலும், செயலை நடத்துவது மூளை.**

பக்தன் - 7ஆம் கருத்து வாழ்வு கருணைமயமானது, அருளன்றி வேறெதுவும் அங்கில்லை என்பது வெகு நாளாய்க் கேள்விப் படுவது.





பகவான் - **Fairy tales குழந்தைகட்கு தெய்வம் செய்யும் அற்புதங்களைக் கதையாகக் கூறுவதில் வீடு சர்க்கரையால் கட்டப்பட்டது என வரும். சாக்கலேட் வீடு, (cake) கேக்கால் செய்யப்பட்ட வீடு என வரும். அதுபோல் உலகம் ஆனந்தத்தால், ஆனந்தத்திற்காக, சிருஷ்டிக்கப்பட்டது என்பதால், இங்குத் துன்பத்திற்கு வழியில்லை. வாயிற்படி, கதவு, தாள் கடினமாக இருந்தாலும் சர்க்கரையாலேயே செய்யப்பட்டது என்பதால் சுவைத்துப் பார்க்கும்பொழுது இனிப்புத் தெரியும்.**

பக்தன் - அன்பு பாசத்தை விட உயர்ந்தது என்பது 8.

பகவான் - **பாசம் துடிக்கும், தன் திறனுக்குட்பட்ட உதவி செய்யும். தனக்குத் திறனில்லாத இடத்தில் உதவ முடியாது. திறனுள்ள இடத்திலும் வேண்டுமானால் உதவும், எதிரியாக மாறி தொந்தரவு செய்யும். அன்புக்கு முடிவில்லாத திறனுண்டு. எதிரியாக அன்பால் மாற முடியாது.**

பக்தன் - ஊர்ப் பஞ்சாயத்து நியாயம் வழங்கும். IAS பரீட்சையில் ஒருவன் வாங்கிய மார்க்கை 83 என்பதை 38 என மாற்றி அடுத்தவனைத் தேர்ந்தெடுத்தால், ஊர், பரிதாபப்படும். அனுதாபம் தெரிவிக்கும். அங்கு நியாயம் வழங்க ஊருக்குத் திறமையில்லை. ஊர் பொறாமைப்படும் நேரம் உண்டு. நியாயத்தை மறுக்கும் நேரம் உண்டு. எதிராக மாறி கொடுமைப்படுத்தும் நேரமும் உண்டு. சட்டம் எதிரியாகாது. கொடுமைப்படுத்தாது. தத்துவம் விளங்கும் பொழுது, அனுபவம் உதாரணமாகிறது. No.9 தெரியும். No.10 மனித சுபாவம் ஏன் மாறாது, மரபு நிலையென்ன என்பவற்றைக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

பகவான் - **சுபாவம் என்றால் என்ன? ஒரு குணத்தை வெளிப்படுத்தும் திறமை சுபாவம் எனப்படும். இனிமை என்று மனத்தில் எழுந்தால் அதைப் பிரியம் வெளிப்படுத்தும். கடுமை எழுந்தால் கோபம் வெளிப்படுத்தும். கோபத்தை நிர்ணயிப்பது கடுமை. கடுமை மாறாமல் கோபம் மாறாது.**

பக்தன் - மனிதன் என்பவன் யார் என்ற கேள்வி எழுகிறது.

பகவான் - **மனம் உடலைப் பெற்றால் மனிதன் உண்டாகிறான். மனம் துண்டு செய்யும் கருவி. ஆத்மாவை துண்டு செய்து**

உடலாக்கியது. துண்டு, பரிணாமத்தால் மீண்டும் ஆத்மாவுடன் சேரும். அதற்குமுன் சேராது. மரபு பரிணாமத்தை அறியாது. அதனால் மனித சுபாவம் மாறாது என்றனர். பூரண யோகம் திருவுருமாற்றத்தைக் கையாள்கிறது. இது மாற்றமில்லை, திருவுருமாற்றம். கோபம் சாந்தமாவது திருவுருமாற்றம். மாற்றம் கடினம், திருவுரு மாற்றம் அதிகக் கடினம். மனிதனுக்கு அவை கடினம். மனிதன் சரணாகதியடைந்தபின் திருவுருமாற்றத்தைச் செய்வது இறைவன். மனிதனால் முடியாதது இறைவனால் முடியும். *மனிதன் இறைவனுக்கு இடம் கொடுப்பது கடினம்.*

பக்தன் - 11ஆம் நெம்பர் பெண்ணையும் குற்றத்தையும் பற்றியது.

பகவான் - பணமிருந்தால் குற்றம் வரும் என்பது சரி. 3ஆம் நிலையில் பிரம்ம ஜனனத்தில், பணம் நெருக்கம் தரும், பெண் நெகிழ்வு தருவாள் என்பது சற்றுப் புதியது.

பக்தன் - பணமில்லாதபொழுது உறவுக்குத் தீவிரமில்லை. பணம் புரளும் பொழுது உறவுக்கு ஆயிரம் செய்திகள் வரும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் பணத்தால் நம்பிக்கையாக நடக்க வேண்டியிருப்பதால் நெருக்கம் அதிகமாகும். *இருவரிடையே பெண் வருவது தமக்கை புருஷன் போன்ற உறவு. பெண் புனிதம், பவித்திரம், பத்தினித் தெய்வம்.* பணம் நம் மட்ட குணங்களை விலக்கும். பெண் பணம் தரும் நெருக்கத்தைப் பவித்திரமாக்குவாள். அக்காவுக்காகப் பார்க்கிறேன். மனிதனின் அவசரம், சந்தேகம், அவளால் பொறுமையாக, அவளுக்காக நம்பிக்கையாக மாறும். பெண் மரியாதைக்குரியவள். அதனால் நட்பை நயமாக்குகிறாள். இதற்கு மேல் சொல்ல முடியுமா?

பகவான் - அண்ணனை அன்பாக நடத்தலாம். அண்ணியை மரியாதையாகவும் நடத்த வேண்டும். பணமில்லாத உறவு பசையற்ற உறவு. பணம் நமக்குப் பதமான இதத்தைத் தரும். *நண்பனை, அண்ணனைத் தெய்வமாக நடத்தலாம். அண்ணியை, நண்பன் தாயாரை, மனைவியைத் தெய்வமாக நடத்தினால் தெய்வம் நடமாடும்.* அவள் ஈஸ்வரி. அவளுக்குள்ள உயர்வுக்கு அவன் உயர முடியாது.





பக்தன் - ஆவது பெண்ணால்......

பகவான் - யோகத்தைப் பூர்த்தி செய்ய உதவும் கருவிகள், குணங்கள், சந்தர்ப்பங்கள், குரு போன்றவை ஏராளம். அவை அனைத்தும் பெண்ணிற்கு ஈடாகா. பெண் மனிதனை யோகத்தில் உயர்த்தும் அளவுக்கு குருவும் உயர்த்த முடியாது.

பக்தன் - ஏன்?

பகவான் - குரு ஒரு மெஷினுக்குப் பெட்ரோல்போன்றவர். பெண் மெஷினிலுள்ள ஒவ்வொரு பாகத்துடனும் இணையும் பாகம் போன்றவள். - ஆணியை மறை பூர்த்தி (**nut & bolt**) செய்வதுபோல் - பெண் ஆணின் ஒவ்வொரு குணத்தையும் பூர்த்தி செய்கிறாள்.

பக்தன் - **Negative** ஆக பூர்த்தி செய்வதை **positive** ஆக பூர்த்தி செய்தால் திருமணம் யோகமாகும். நம் பண்பில் இவையெல்லாம் இருக்கின்றன.

பகவான் - தமிழ்ப் பண்பு ஆன்மீக உணர்வை பெண்மையில் குடும்பப் பெண்ணின் பண்பாக வடித்தெடுத்துள்ளது. போற்றினால் பெரிய பலன். இல்லை எனில் போர்க்களம்.

பக்தன் - **No.**12. பற்றாக்குறையில்லை என்கிறது.

பகவான் - பற்றாக்குறை என்றால் என்ன என யோசிப்போம். ஒரு வேலையைச் செய்ய போதுமான பொருள்கள் இல்லாதது பற்றாக்குறை. விவசாயத்தில் தண்ணீர்ப் பஞ்சம் என்பது வழக்கம். இதன் அடிப்படை என்ன? ஆதிநாளில் தண்ணீர் அபரிமிதமான இடங்களில் விவசாயம் ஆரம்பித்தது. அவை நதி தீரங்கள். *நீர்வசதி அதிகமாக இருப்பதால் அவ்விடம் விவசாயத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால், நீர்ப்பஞ்சம் என்பதற்கு வழியில்லை.* நாளடைவில் விவசாயம் பெருகி, நீரில்லாத இடங்களில் ஆரம்பித்துச் சில ஆண்டுகள் சௌகரியமாகவும், சில ஆண்டுகள் பற்றாக்குறையாகவும் வாழ்வு அமைகிறது. மனிதன் நீர் சரிவரக் கிடைக்காத இடத்தில் விவசாயத்தை ஆரம்பித்துப் பற்றாக்குறையை உண்டு பண்ணுகிறான்.

பக்தன் - மேலும் விவசாயம் என்று ஆரம்பித்தபொழுது அது ஓர் அதிசயம். ஒரு நெல்லை விதைத்தால் 1000 நெல் விளைவது அபரிமிதம். *அதைக் கண்ட விவசாயி ஆச்சரியப்பட்டான். நிலத்தைத் தாயாக நினைத்து வணங்கினான்.* நீர் என்பது உணர்ச்சி. உணர்ச்சி பொங்க வாழ்பவனுக்கு நீர்ப் பஞ்சமில்லை. நாளடைவில் நிலம் மண்ணாகிறது. உணர்ச்சி வறண்டு போனால் நீர்ப் பஞ்சம் எழுகிறது. உணர்ச்சி எழுந்தால் பஞ்சம் நீங்கும்.

பகவான் - **எந்தச் செயலும் அபரிமிதமாக ஆரம்பித்து உணர்ச்சிவசமாக மனிதன் வாழ்ந்தான். இந்த நிலையை மனிதன் அறிவில்லாமல் மாற்றி, உணர்ச்சியை இழந்து பற்றாக்குறையை உண்டு பண்ணுகிறான்.**

பக்தன் - அறிவுக்குப் புறம்பானதை விடுத்து, உணர்ச்சி பெற்றால் பற்றாக்குறை விலகும். இது புரிகிறது. சுமார் பத்து விதங்களான பற்றாக்குறைகளை இதுபோல் விவரித்தால் நல்லது.

பகவான் - **நீயே செய்தால் பலனிருக்கும். அத்துடன் உன்னை பாதிக்கும் பற்றாக்குறைகளை ஆராய்வது நல்லது.**

பக்தன் - அறிவுக்குப் புறம்பானது என்பதை அறிவு எனக் கொள்கிறோம்.

பகவான் - **அது அறிவிலியின் அறிவு. நாலு பேர் சொல்வதை நாம் செய்யப் பிரியப்படுவது அறிவாகாது. அவர்கள் சொல்வது வேறு, செய்வது வேறு.**

பக்தன் - இப்படித்தான் மனிதன் அறிவு பெறுகிறானா?

பகவான் - **சூட்சுமம் தெரிந்தால் போதாது.**

பக்தன் - தெரிவதற்குரிய சூட்சுமம் வேறு, *செய்வதற்குரிய சூட்சுமம் தனி.*

பகவான் - **விஷயம் சூட்சுமத்திலில்லை. சூட்சுமத்தை ஏற்கும் மனப்பான்மையிலுள்ளது.**

பக்தன் - அதுதான் சரணாகதியா? அடக்கமா?

பகவான் - **ஒரு சொல்லால் இக்கருத்தைப் புரிந்து கொண்டால் கருத்து மறந்து போகும், சொல் நிற்கும், பயன்படாது.**

பக்தன் - சொல் இல்லாமல் புரிந்துகொள்வது படிக்காதவனுடைய பழக்கம்.





பகவான் - ***படித்து, சொல்லையறிந்த பின், சொல்லைக் கடந்த சூட்சுமத்தை, சூட்சுமத்தைக் கடந்ததை ஏற்க முயன்றால் மனம் விலகி, ஆத்மா முன்வரும்.***

பக்தன் - சொல்லே தெரியாத மனிதனை சொல், சூட்சுமம், அதைக் கடந்து என்றெல்லாம் சொன்னால் அவன் என்ன செய்வான்?

பகவான் - **மனிதன் தன் விஷயங்களை அப்படித்தானே புரிந்து கொள்கிறான்?**

பக்தன் - அப்போ, அது பழைய விஷயம். எல்லாம் அவனுக்குத் தெரிந்தாலும், புதியதை தன் இஷ்டப்படி செய்ய முனைவதால் தவறுகிறது என்பது மீண்டும் வருகிறது.

பகவான் - ***வேண்டும் என்றால் செய்வான்.***

பக்தன் - வேண்டாம் என்பவனை வேண்டும் என்ற நிலைக்குக் கொண்டு வருவதுதான் வேலையா?

பகவான் - **அந்த வேலை அதிகப்பிரசங்கித்தனம் (altruism).**

பக்தன் - அதைப் புறத்தில் செய்யாமல் அகத்தில் செய்ய வேண்டுமா?

பகவான் - **அந்த எண்ணம் போகாமல், அகத்திலும் செய்ய முடியாது.**

பக்தன் - அகத்தில் ஆழத்தில் செய்தால், புறத்தில் பலிக்குமா?

பகவான் - **புறத்தில் பலிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தடை.**

பக்தன் - எப்படிப் பார்த்தாலும் மனம் அடங்க வேண்டும்.

பகவான் - **மனிதன் மனம் அடங்க வேண்டும் என்பதை மனத்தால் ஏற்க வேண்டும். பற்றாக்குறை என்பது அறிவு பற்றாக்குறை.**

பக்தன் - **No.13.** மனிதனுக்குப் பெருந்தன்மை இயல்பு என்பது எப்படி?

பகவான் - **மனிதன் தேடுவது மரியாதை. இறைவன் தேடுவது ஆனந்தம். மரியாதையில் ஆனந்தம் தேடுவது மனிதன். மரியாதை கிடைக்கவில்லை எனில் பிறர் மரியாதையை எடுக்கிறான்.**

பக்தன் - எடுப்பதும், கொடுப்பதும் ஒன்றே!

பகவான் - மட்டமான குணம் இயல்பு என்பது திருவுருமாறினால் பெருந்தன்மையாகிறது.

பக்தன் - இதுவும் அதுவும் ஒன்றே என்பது பிரம்ம ஞானமா?

பகவான் - இரண்டும் பிரம்மம் என்பது பிரம்ம ஞானம்.

பக்தன் - திட்டுவது தித்திக்க வேண்டும் என்பது பிரம்ம ஞானம். No.14 விதியை நாமே நிர்ணயிக்கிறோம்.

பகவான் - நாம் சத்திய ஜீவியம் என்றால் விதிப்பது நாம். நாம் மனம் என்றால் விதிக்குப் பணிய வேண்டும்.

பக்தன் - நாம் ஒருவரைத் தேடிப் போகும்பொழுது, நம்மை கவனிக்கிறார்கள், அடுத்தவரைக் கண்டுகொள்ளவில்லை என்பது நமக்குப் படாது. அவரைக் கவனித்து நம்மைக் கவனிக்காவிட்டால் படும். அந்தஸ்துபடி விஷயம் நடக்கிறது. நாம் மாறிய மனநிலையில் - சத்திய ஜீவியத்தில் - இருந்தால், உடன் வருபவரைக் கவனிக்க மாட்டார் என்பது நம் மனத்திலிருக்கும். அவருக்கு நல்ல கவனிப்பு இருக்கும். இது நாம் விதியை நிர்ணயிப்பது.

பகவான் - பொருத்தமானது. பெரிய விஷயங்களில் இதைக் காண்பது முக்கியம்.

பக்தன் - *தலைவிதியில்லை என அனுபவப்பூர்வமாக அறிவது பெரிய விஷயம்.* ஏழை தன் விதியை மாற்றிப் பணக்காரனானால் புரியும்.

பகவான் - பலிக்கும், புரியாது. பணம் வரும்பொழுது எதுவும் புரியாது. கவனித்துப் புரிந்து கொண்டால் பெரும் பணம் ஒன்றுமேயில்லை என்பதுபோல் நிலைமை உயரும். நிலைமையும், அந்தஸ்தும் ஒன்றுமேயில்லை என்பது பக்தி, நம்பிக்கை, அன்னை ஜீவியம். வருமுன் அது புரிவது யோகம், வந்த பின் அறிவது அதிர்ஷ்டம்.

பக்தன் - No. 15 நட்பு, காதல் உயர்வைப் பற்றியது. எவரும் ஏற்க மாட்டார்கள்.

பகவான் - இரத்த பாசம் உடலைப் பற்றியது. நட்பு உயிருக்குரியது. இலட்சியம் மனத்திற்குரியது. குருபக்தி ஆத்மாவுக்குரியது. ஆத்மாவுக்குரிய குரு பக்தி, நண்பன் மீது எழுவது ஆத்மார்த்தமான நட்பு. அதுவே பெண் மீது எழுவது காதல்.





பக்தன் - ஏன் இவை அழிகின்றன?

பகவான் - காதல், நட்பின் தரம் உயர்வானாலும், வலிமை பணத்தைவிடக் குறைந்ததாக இருந்தால், பணம் பிரச்சினையானபொழுது நட்பு அழிகிறது.

பக்தன் - உயர்ந்த காதலுக்கும் தரம் உயர்வாக இருப்பதால், வலிமை இருக்க வேண்டும் என்பதில்லை.

பகவான் - அழியாக்காதல், அழிவதில் எழுவதால் நிலையில்லாமல் போகிறது.

பக்தன் - அழியாத தரமுள்ள காதல் அழியும் சமூகத்தில் எழுவதால் அழிகிறதா?

பகவான் - காதல் அழியாதது. பணம் அழிவது. இது அதன் மூலம் நிலைக்காது.

*அழிவில்லாதது அழிவதில் எழுவது காதல்*

- காதல் அழியாது, அதனால் அழிய முடியாது. அழிந்ததாக வரலாறில்லை.
- அழியாதது அழியாததைக் காலத்திற்கும், காலத்தைக் கடந்தும் தேடுவது காதல்.
- தேடுவது இன்பம். பெறுவது பேரின்பம்.
- தணியாத தழல் வானை நோக்கி எழுவதற்கு முடிவில்லை. பெற்றால், பெரியதை நாடும். எட்டாததை எட்டும் முயற்சி எழும். அழிவும், மரணமும் அது அறியாதவை. தணியும் வேகமும், குறையும் குணமும் அதற்கில்லை.
- அழிவதனுள் அழியாதது அன்பால் மலர்கிறது.
- அழிவது, அழியாததாக மாற அழியாதது அழிவதனுள் அன்பாய் மலர்கிறது.
- அழிவதன் வலிமை அனந்தம். தனக்கு அமரத்துவம் அளிக்க முயலும் அழியாததை அடியோடு அழிக்க அழிவது பெருமுயற்சி செய்து பெருவெற்றி பெறுகிறது. பெற்றதாக நினைக்கிறது.

- அழியாதது அழிவதில்லை. சற்று பின்வாங்குகிறது.
- தன்னை ஏற்கும்படி அழியாதது அழிவதை அனுதினமும் அணுகுகிறது. அதனால் காதலுக்குக் கண்ணில்லை, காலமில்லை. மரணம் அது அறியாதது.
- பொய்க்கு உயிரளிக்க வரும் சந்தர்ப்பத்தை மனிதன் இழப்பதில்லை.
- எதையும் அவன் பொய்க்கச் செய்வான்.
- சத்தியம் பெரியதானால், அவன் அதிகமாக அழிக்க முயல்வான்.
- முழுதோல்வி பெற்றபொழுது, பொய்யின் வெற்றியாக அதை அறிவிப்பான்.
- இலட்சியம் இவ்வழி ஸ்தாபனமாகும்.
- ஸ்தாபனத்திற்கு உயிரில்லை.
- காதல் திருமணத்தால் அழியும் என்பர்.
- இறப்பது காதலில்லை.
- ஜீவனற்ற ஸ்தாபனம் காதலின் உயிரை எடுக்க முனையும்பொழுது மரணமடைகிறது.
- காதலால் அழிய முடியாது.
- இதுவரை அது அழிந்ததில்லை.
- மரணத்தை அழிப்பது காதலின் இலட்சியம்.
- ஜீவனற்ற சம்பிரதாயத்திற்குக் காதல் சாவுமணி.
- காதலை நசுக்க அவை முனைகின்றன.
- தான் அழிவதைக் காதல் இறந்ததாக உலகுக்குப் பறை அறிவிக்கின்றனர்.
- பிறப்பில்லாத காதலுக்கு அழிவு எப்படி வரும்?
- மனிதன் பிறப்பதற்கு முன் பிறந்த ஆத்மா அடுத்த ஆத்மாவை நாடுவது காதல். மனித வாழ்வுக்கு மரணமிலா பெருவாழ்வு தரவந்த காதலுக்கு மரணமுண்டா?





பக்தன் - இன்று திருமணம் மேல் நாடுகளில் இல்லை என்ற அளவுக்கு மக்கள் மாறியிருந்தாலும், பிரபலமான கதை, சினிமாவின் **theme** காதல். ஏன் அது?

பகவான் - காதல் திருமணத்தைக் கடந்தது, சமூகத்தையும் கடந்தது. அது அழியாது.

பக்தன் - ஏன்?

பகவான் - உடல் அழியும், எண்ணம் அழியாது.

பக்தன் - சரி.

பகவான் - மனிதனுக்கு நல்லெண்ணம் பிடிக்கும். பரிசு பெறும் படம் எல்லாம் ஓர் உயர்ந்த இலட்சியத்தைப் பற்றியது - நட்பின் விஸ்வாசம், குழந்தைக்கு ஆதரவு, சொல்லைக் காப்பது, மனம் விரும்பியவருக்கு உண்மையாக இருப்பது, வீரம், தைரியம் போன்றவை - *அவற்றுள் சிறந்தது, சிகரமானது, காதல்.*

பக்தன் - ஏன்?

பகவான் - உயர்ந்த உறவில் உச்சகட்டம் குருபக்தி, சாதாரண மனிதனுக்கு தேசபக்தி.

பக்தன் - ஆத்மா குருவை ஏற்பதால் அது உயர்ந்தது.

பகவான் - ஏற்பதில் ஞானம், உணர்வு, செயல் என 3 கட்டங்கள் உண்டு. குருவை ஏற்பது சிறந்தது என்பது ஞானம். குரு மீது பக்தி வருவது உணர்வு. அவருக்குப் பணிவிடை செய்வது செயல்.

பக்தன் - இவற்றுள் ஞானமே உச்சகட்டம்.

பகவான் - **Ascent, descent** என்பவை தெரிந்தவை.

பக்தன் - தெரியும், இருந்தாலும் சொல்லுங்கள்.

பகவான் - புரியாமல் பணிவது முதல் நிலை. பிடிக்கும் என்பதால் பணிவது இரண்டாம் நிலை. புரிந்து பணிவது மூன்றாம் நிலை. இது **ascent. Ascent**இல் புரிவது ஞானம். உச்சி. புரிவதால் பிடிப்பது 4ஆம் நிலை. புரிவதால் பிடிக்கும்

என்பதால் பணிவது 5ஆம் நிலை descent. 5ஆம் நிலை உச்சக்கட்டம்.

பக்தன் - Descentஇல் சேவை ஞானத்தை விட உயர்ந்தது. குரு பக்தி இந்த 5இல் எந்த நிலையிலும் இருக்கலாம்.

பகவான் - பாசம், நட்பை விட, குருபக்தியும் அதன் 5ஆம் நிலையும் உச்சக்கட்டம்.

பக்தன் - காதல் இதை விட எப்படி உயர்ந்தது?

பகவான் - இளமைக்குரிய காதல் உடலைப் பற்றியது. அது உயர்ந்து உயிருக்குரியதாகும். அது இலட்சியக் காதலாவது மனத்தை எட்டுவது. ஆத்மாவை எட்டுவது அதனினும் உன்னதமானது.

பக்தன் - இங்கும் descent உண்டா?

பகவான் - ஆத்மா மனதில் எழுந்தால் இலட்சியம் ஆன்மீக இலட்சியமாகும். அது 5ஆம் நிலை. ஆத்மா உயிரில் மலர்ந்தால் பரவசப்படுகிறோம். அதுவே உடலில் பூத்துப் பூரிப்பது நன்றியறிதல் 7ஆம் நிலை.

பக்தன் - குருவுக்குச் சேவை செய்வதைவிட இது எப்படி உயர்ந்தது? ஏன் அங்கு 5 நிலைகளையும், இங்கு 7 நிலைகளையும் கூறுகிறீர்கள்?

பகவான் - இரண்டு இடத்திலும் 5 நிலை அல்லது 7 நிலைகளை நாம் கொள்ளலாம். குரு உயர்ந்தவர் என்பதால் ஆன்மா அவர் விஷயத்தில் எளிதில் விழிக்கும். மனைவி பெண். அவள் விஷயத்தில் ஆன்மா விழிப்பது கடினம். அதனால் உயர்ந்தது.

பக்தன் - அதுதான் காதலை உயர்த்துகிறதா?

பகவான் - காதலை உயர்த்துவது இரண்டு. 1. பெண்மை 2. ஆத்மா.

பக்தன் - பெண்மையில் காதல் வாழ்வுக்குரியதாயிற்றே. ஆத்மா எப்படி அங்கு வரும்?

பகவான் - காதலில் ஆத்மா எழுவது கடினம். எழுந்தால் உயர்வு. இல்லையென்றால் திருமணம், குடும்பம். *ஆத்மா வாராமல் காதலில்லை.*





பக்தன் - காதலுக்குப் பெண்மை உயர்வு அளிப்பது எப்படி?

பகவான் - குருவுக்கு ஆன்மாவால் உயர்வைக் கடந்த சிருஷ்டியின் இரகஸ்யம் காதலுக்குரியது.

பக்தன் - *பெண் ஆணுக்கு முரண்பாடான உடன்பாடு* என்பதா?

பகவான் - உயர்வு உடன்பாட்டிலில்லை, முரண்பாட்டில் மறைந்துள்ளது. முரண்பாடு மீண்டும் உடன்பாடாவது பெண்மையில். குருவிடம் அந்த அம்சம் இல்லை. ஆத்மாவுக்குரிய உயர்ந்த அம்சம் உண்டு.

பக்தன் - பெண், குருவாக வேண்டுமா?

பகவான் - குரு ஆன்மீகப் பெருமையுடையவர், பெண் பரிணாமப் பெருமையுடையவள், ஆணுக்குக் கட்டுப்பட்டவள்.

பக்தன் - புரிகிறது. ஆன்மீக உயர்வு இரண்டாம் நிலை, பரிணாமம் 3ஆம் நிலை.

பகவான் - பெருமைக்குரிய குருவுக்குச் சரணடையலாம். தனக்குக் கட்டுப்பட்ட பெண்ணிற்குச் சரணடைய பெண் தன் பெருமையை அறியாதபொழுதும் தான் அதை அறிந்து ஏற்றுப் பணிவது, பெண்ணை சக்தியாக்கும், ஆணை ஈஸ்வரனாக்கும்.

பக்தன் - பெண் தாய்மை, வீடு, ஆண் தன்னை அடக்க வேண்டும் என்பவற்றைக் கடந்து வர வேண்டும் என்கிறார் அன்னை.

பகவான் - இப்படி ஒரு காதல் உலகில் இதுவரை மனிதர்கள் அறிந்ததில்லை.

பக்தன் - உடலிலிருந்து ஆத்மாவரை உயர்ந்தும், மீண்டும் இறங்கி வந்தும் காதல் பல நிலைகளில் உண்மையாக எழுந்ததே காதலிலக்கியம்.

பகவான் - உண்மையின் சாயல் இலட்சியத்தில் பட்டால் இலக்கியம், கதை, படம் உயர்கிறது. அது காதலில், ஏதாவது ஒரு துளி பட்டால், உயர்வின் உச்சியை எட்டுகிறது. காதல் எட்ட வேண்டிய கட்டங்கள் மேலும் உண்டு. அவற்றை எட்டும்வரை உலகம் காதலைப் போற்றும்.

பக்தன் - காதல் இளமைக்கு மட்டும் உரியதன்று.

பகவான் - எல்லாக் காதலிலக்கியங்களிலும் (adventure) தடையை மீறி செயல்படும் கட்டம் உண்டு.

பக்தன் - ஜீவனே தடையை மீறுவதால் வருவது தானே.

பகவான் - சமூகம், மனச்சாட்சி, தர்மம், நியாயம் போன்ற தடைகள் எல்லாம் நீங்கியபின், காதலிலட்சியம் எட்டாக்கனி என்பதால், அது யோக சித்தி என்பதால் அங்கும் adventure தடையை மீறுவது வரும்.

பக்தன் - ஆத்மா, பெண்மை, adventure மூன்றும் கலந்தது காதல்.

பகவான் - பரிணாமத்திற்குரிய ஆத்மா உயர்ந்து, உச்சியை அடைந்தபின் இறங்கி உடலுக்கு வந்து, முரண்பாடான பெண்மையில் உடன்பாட்டைத் தேடும் adventureஐ ஏற்பது காதல் எனப்படும்.

பக்தன் - பெண்ணின் ஆத்மாவை தன் ஆத்மாவால் அடைவது.

பகவான் - அது ascentஇன் பகுதி. அது descentஇல் பூர்த்தியாகும்.

பக்தன் - மனிதன் ஈஸ்வரனாகி, பெண் சக்தியாகிப் பூர்த்தியடையும் யோகம் காதல் எனப்படும்.

பகவான் - அதன் பொறியுள்ள இடமெல்லாம் பொறி பறக்கும்.

பக்தன் - காதல் சிருஷ்டியின் இரகஸ்யம் என்பது இதுவா?

பகவான் - Positive, negative; சத், அசத் - இரட்டைகள் - என்பவை ஆண்மை, பெண்மை எனவும் பிரியும். அதை மனித வாழ்வில் ஆன்மீகப் புனிதத்துடன் காண்பது காதல் இதயத்தில் எழுவதாகும்.

பக்தன் - பக்தியை எந்தக் கட்டத்தில் வைக்கலாம்?

பகவான் - காதலுக்கு முன்னும், பின்னும் வைக்கலாம். காதலாகிக் கசிந்துருகினால் காதல் கனலாக எழுகிறது. *அழியாதது, அழிவதில் எழுந்து அழிவது நாமறியும் காதல். அழியாதது, அழியாததில் அழிய முடியாமல் எழுவது அழியாக்காதல். அது ஆண்டவனுக்குரியது.* தெய்வத்தைக் கல்லிலும், மண்ணிலும், பொருளிலும் காணலாம். மனிதனுக்குப் பெண்ணில், பெண்மையில் காண்பது எளிது.





*உலகை உயர்விக்க வந்தது பெண்மை.*
*பெண்மையின் சிகரம் ஈஸ்வனின் சக்தி.*

தவசிரேஷ்டர் பெற்ற பிரம்மானந்தம் பெரியது. அதைச் சமாதியில் பெற தவமிருந்தோர் பல ஜென்மமாக தவத்தில் லயித்தனர். அது உலகம் கண்ட உயர்வு. அதற்கடுத்த கட்டமும் உண்டு. அதையும் புனிதமாக்கும் அற்புதம் உலகில் உண்டு. அதுவே பெண்மை.

மனிதன் வானையும் கடலையும் கண்டான். தன் கண்களால் கண்டான். கடலை வென்றான், வானை அளந்தான். வான சாஸ்த்திரம் எழுதினான். அடுத்த ஆண்டு எந்த நிமிஷம் சூரிய கிரகணம், சந்திர கிரகணம் வரும் என எழுதினான். அவை மனித முயற்சியின் உன்னதமான உச்சி. அவன் கண்டவை, கண்டு விண்டுரைத்தவை பெரியவை. அவை அவன் ஊனக் கண்ணால், ஊனக் கண்ணுக்குப் பின்னாலுள்ள ஞானக் கண்ணால் கண்டவை. கண் பார்வையைக் கடந்து செல்வது டெலிஸ்கோப். அதையும் மனிதன் கண்டான். அதன்பின் ஞானக் கண் இன்னும் எழவில்லை.

ரிஷிகள் கண்ட பிரம்மம் பிரம்மாண்டமானது. அவர்கள் மனத்தைக் கருவியாய் பெற்றிருந்தனர். மனம் பிரம்மத்தைச் சமாதியில் ஊடுருவிக் கண்ட தரிசனம் பிரம்ம தரிசனம். தான் பெற்ற பேறு பெரியது. பிறருக்குச் சொல்லும் சொல் இன்னும் உலகில் உற்பத்தியாகவில்லை. மனத்தைக் கடந்தது உண்டு. அதை super-mind, சத்திய ஜீவியம் என்றனர் ரிஷிகள். சுவாமி விவேகானந்தர் தாம் நிர்விகல்ப சமாதியில் பெற்றதைக் கடந்தது உண்டு என பூதவுடலை நீத்தபின் சூட்சும உலகில் கண்டார். அதை உலகுக்கு அறிவிக்கும் கருவியாக பகவான் ஸ்ரீ அரவிந்தரைத் தேர்ந்தெடுத்தார். அறிவித்தார். தீட்சை பெற்ற பகவான் அதைக் கண்டார். கண்டவர் பிரம்மத்தைக் காண முயன்றார். பிரம்மத்தின் முழுமை தெரிந்தது. முழுமையான பிரம்மம் முடிவான உலகமாகக் காட்சியளித்தது. அது அற்புதம். ஆனந்தமயமானது. நாமறிந்த துன்பமும், நோயும் இல்லாத தூய லோகம் அது. அதை விழிப்பில் கண்டவர்,

உலகுக்கு அறிவிக்க - சுவாமி விவேகானந்தரின் ஆணையைப் பூர்த்தி செய்ய - பகவான் முயன்றார். அது தமக்குரிய பேறில்லை. அப்பேற்றைப் பெற்றது பெண்மை, பெண்மையின் சிகரமான சக்தி, ஈஸ்வரனுடைய சக்தி. சக்தி ஈஸ்வரனின் கருவியாகச் செயல்படக் காத்திருக்கின்றது. ஆனால் அது ஈஸ்வரன் தன்னைப் பணிக்கக் காத்திருக்கின்றது. இறைவனின் ஆணையை இகத்தில் பூர்த்தி செய்ய சக்தி ஈஸ்வரனின் ஆணையை ஏற்பது உலக இரகஸ்யம். அது சரணாகதி. பகவான் சிருஷ்டியின் இரகஸ்யத்தை அறிந்தார்.

*சக்திக்கு ஈஸ்வரனான பகவான் சரணடைந்தார்.*

அந்தச் சரணாகதி புவியின் பூரணத்தைத் தரவல்லது. பகவான் ஸ்ரீ அரவிந்தர் பிரம்மத்தை அடைந்தபொழுது வரம் கேட்டார். மனித குலத்தைக் கடந்த பூமாதேவிக்கு வரம் கேட்டார். முழுமையான பிரம்மம் முடிவான முழுமுதற் கடவுளிடம் ஸ்ரீ அரவிந்தர் பூமா தேவிக்குக் கேட்ட வரம்,

*சத்திய ஜீவியம் ஜடத்தில் ஜனிக்க வேண்டும்*

என்ற வரத்தைக் கேட்டார். வரமளிக்கப்பட்டது. பூரண சரணாகதியால் மனிதன் அதைப் பெறவேண்டும். ஈஸ்வரன் சக்திக்குச் சரணடைந்து பெற்ற வரம் மனிதன் தூய்மையான பெண்ணுள்ளத்திற்குச் சரணடைந்து பலிக்க வேண்டும். பெண்ணைப் பெண்மையின் பேறாக உணர்ந்து, ஆண்மை அனுபவிக்கும் சரணாகதி அனந்தம் ஆத்மாவாக வாழ்வில் மலர்ந்து மணம் வீசுவதாகும்.

- பெண்மையின் தூய்மையான சிகரம் சக்தி.
- சக்தியின் பராசக்தி அவதாரம் லோக மாதாவான அன்னை.
- அவரை நாம் அடைய நம் மனம் விழைந்தால் போதும்.
- அழைக்க ஆர்வமிருந்தால், அழைக்கும் முன் நம் முன் வருவார் அன்னை.





- ஆத்மா சரணாகதியை ஏற்றால் அற்புதம் மனிதனை ஏற்கும்.
- உலகில் பெரியவையுண்டு. பெரியவற்றைக் கடந்த பேரானந்தமுண்டு. அவை மனிதனை நாடி வருவதுண்டு. நாடி வந்தபோது நாட்டை ஆளச் செய்வதுண்டு.

உலகிலுள்ள எந்தப் பெரிய பேறும் ஆனந்தமாக மனிதனை நாடி வந்து மனிதனைத் தெய்வமாக்கியதுண்டு. அவையும் அவனுக்குரிய பெண் மூலம் அவனை நாடி வரும் பொழுது உயர்வு உன்னதமாகும். உன்னதம் உத்தம மாகும். உத்தமம் தன் இரகஸ்யத்தை உள்ளே உணர்த்திப் போகும். அந்த இரகஸ்யம் சரணாகதி. அவன் அவளுக்கு விரும்பிச் செய்யும் ஆத்மானுபவச் சரணாகதி. பெண்மைக்கு ஆண்மையின் சரணாகதி தான் பெற்ற பேற்றை உலகுக்குப் பெற்றுத் தரும்.

*ஆண்மகன் ஆண்மையின் அழகு. பெண் பெண்மையின் பெரிய பேறு. ஆண்மை பெண்மைக்குச் சரணடையும்பொழுது அவனுள் உலகம் பூர்த்தியாகி, பூரணம் பெறுகிறது. அதுவே பரிணாமம் நாடும் பரமபதம்.*

பகவான் ஸ்ரீ அரவிந்தர் ஆண்மையைச் சரணடைய ஆணையிட்டபொழுது, சரணாகதியை ஏற்ற பெண்மை எல்லையைக் கடந்து செல்லும் நேரம் வரும்பொழுது தவறாமல் பெண் தனக்குரிய பாணியில் செயல்படுவாள். அவனே ஈஸ்வரன் என்பதாலும், அவனுடைய சரணாகதி அவனே விரும்பிச் செய்வது என்பதாலும், எல்லையை மீறும் எழிலை இழுத்துப்பிடிக்கும் அவசியமும் உண்டு என்கிறார்.

பக்தன் - இந்த அம்சங்கள் உலக வழக்கில் அங்கும், இங்குமாக அவ்வப்பொழுது வெளிப்படுகின்றன.

பகவான் - தலைகீழே வெளிப்படுவது ஏராளம். அநேகமாக அனைத்து அம்சங்களும் அப்படி வெளிவருகின்றன. **Context** சந்தர்ப்பம் சரியில்லை என்பதால் எதையும் எடுத்து சரிவர விளக்க முடிவதில்லை.

பக்தன் - அந்த விளக்கம் நாம் வலியை வருந்தி அழைத்ததை விளக்குவது போலிருக்கும். **Intellectuals are stupid** என அன்னை கூறியுள்ளார். **No.** 20 வரை உள்ளவை விளங்கும். சொன்னால் அதையும் கேட்டுக் கொள்வேன். 20 உடலுழைப்பு.

பகவான் - **உடலால் உழைப்பதைவிட அறிவால் உழைப்பதால் ஏராளமாக சம்பாதிக்கலாம் என்பதை அடுத்த படியில் ஆன்மீக உழைப்பு அபரிமித இலாபம் கொடுக்கும் என்பதற்கு விளக்கமே தேவையில்லை. இதுவரை எவரும் புரிவதாகக் கூறவில்லை.**

பக்தன் - அறிவால் உழைப்பது என்றால் நினைப்பது, ஆன்மாவால் உழைப்பது எனில் தியானம் செய்வது என்று எடுத்துக் கொள்கிறார்கள். *முக்கியமாக வேறு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை என்று கொள்கிறார்கள்.* அறிவால் உழைப்பதென்றால், வேலையை அறிவில் ஆரம்பித்து, உழைப்பை அறிவுக்கு மாற்றி, மற்றவற்றையெல்லாம் முன்போல் செய்வது எனப் பொருள்.

பகவான் - **இந்தியச் சுதந்திரத்தை ஆன்மாவால், சூட்சுமத்தில் பெற்றார் எனில் சூட்சும லோகத்தில் வெற்றி கிடைத்துவிட்டது. இனி 5 அல்லது 10 ஆண்டு ஆயுதம் தாங்கிய போராட்டம் சுருங்கும் எனப் பொருள். பங்களாதேஷ் சண்டை சில நாட்களில் முடிந்தது அன்னை செயல்பட்டதால்தான். அதற்காக சண்டை போடாமலிருக்க முடியுமா?**

பக்தன் - உலகப் போர் அப்படி ஜெயிக்கப்பட்டது. இதை எப்படி விளக்குவது?

பகவான் - செயலால் விளக்கலாம். 16 ஆண்டில் ஏற்பட்ட வருமான உயர்வு 16 மாதத்தில் வந்தால் அறிவு செயல்பட்டது புரியாதா?

பகவான் - **அடுத்த 16 ஆண்டுகளில் பெறும் திறனை இன்று மனத்தால் 16 மாதத்தில் பெற்றால் புரியும்.**

பக்தன் - எப்படி எழுதுவது?

பகவான் - **எழுதலாம். நம்மவர்கள் நேரில் பேசினால் புரிந்து கொள்வார்கள். எழுதினால், மீண்டும் அதையே சொல்லும்படிக் கேட்பார்கள்.**





பக்தன் - எவரும் சம்மதப்பட்டு வந்து கேள்வி கேட்க மாட்டார்கள்.

பகவான் - **இடம் சுத்தமாவது முக்கியம்.**

பக்தன் - கோணல் வழிக்கு வேலையில்லை. கோணலில்லாதவர்க்கு அருளுண்டு.

பகவான் - **வேலை செய்பவர் திறமைசாலியாக இருந்தால் கடந்த 16 ஆண்டில் பெற்ற திறமை என்ன என்று தெரியும். 16 ஆண்டிற்குப்பின் தான் செய்யும் வேலையின் ஒவ்வொரு பகுதியும் எப்படித் தன் கையில் மாறும் என்பது பெரும்பாலும் புரியும்.**

பக்தன் - முதற்காரியமாக 16 ஆண்டு கழித்து உயர்பதவியில் பெரிய சம்பளத்தில் வேலை செய்யாமலிருக்கலாம் என்று தோன்றும்.

பகவான் - **அவர்கட்கு இது இல்லை.**

பக்தன் - அது தவிர வேறு விதமான மக்களில்லை.

பகவான் - **அப்படியானால் பேச வேண்டாம்.**

பக்தன் - நான் கேட்டுக்கொள்கிறேன்.

பகவான் - **செய்பவருக்குச் சொல்லலாம்.**

பக்தன் - நான் செய்கிறேன்.

பகவான் - **இந்த நிலைகள் எல்லா ஆபீஸ்களிலும் இருக்கின்றன. என்ன முக்கியம் என்றால் நம் மனம் இன்றுள்ள நிலையிலிருந்து படிப்படியாக ஒவ்வொரு கட்டமாக மனத்தால் நகர்ந்து கடைசி கட்டத்திற்கு வர வேண்டும்.**

பக்தன் - அனுபவம் பெற்றபின் முதலிலிருந்ததைவிட தெளிவாகச் செய்வதை அறிவோம். மனம் அதை நாட வேண்டும். அதன் வழிச் செல்ல வேண்டும். அப்படிச் சென்றால் நான் சொல்லிய தவறு எழாது. இரண்டு முக்கியம்.

1. *கோணலாக இல்லாமல், நேராக இருக்க வேண்டும்.*
2. *மனத்தால் உழைக்க ஆசைப்பட வேண்டும்.* இவை இரண்டும் இருப்பது அரிது.

பகவான் - **200 பேரை IASஇல் எடுத்தால் 4 லட்சம் பேர் எழுதுகிறார்கள். பலர் 5%, 15% மார்க் வாங்குகிறார்கள்.**

**IAS** எழுதும்பொழுது அதற்காக தயார் செய்யக் கூடாதா? 61% வாங்கி செலக்ட் ஆகவில்லை என்று இருக்கக் கூடாதா?

பக்தன் - மனத்தால் உழைப்பது என்றால் என்ன?

பகவான் - வீடு கட்ட வேண்டும் என்று நினைப்பது ஆசை. ஒருவர் வீடு கட்டியவர் என்றால் அவருக்கு அனுபவம் உண்டு. அந்த வேலைகளைச் செய்யும்பொழுது மனம் ஏற்ற பொறுப்பை - பாரத்தை - அவர் அறிவார். அடுத்த முறை பெரிய வீடு கட்ட மனத்தால் பொறுப்புடன் அந்த வேலைகளை உண்மையில் செய்வதுபோல் செய்து முடித்தால், இப்பெரிய வீடு $^{1}/_{10}$ சிரமத்துடன் முடிவதைக் காணலாம்.

பக்தன் - ஆன்மாவால் அதையே செய்வது எப்படி?

பகவான் - மனம் ஈடுபட்டுச் செய்ததை, ஆத்மா பற்றற்று மௌனமாகச் செய்யும்.

பக்தன் - நினைக்கக் கூடாதா?

பகவான் - பலன் கருதாமல், படபடப்பில்லாமல் 'நினைக்கலாம்.'

பக்தன் - அதற்கு நினைவு என்று பெயரா?

பகவான் - பெயர் எது வேண்டுமானாலும் கூறலாம். பற்றில்லாமல், மௌனமாகச் செய்வது ஆத்மா செயல்படுவது.

பக்தன் - மூன்றாம் நிலை, சக்தி செயல்படுவது, அன்னை செயல் எப்படி?

பகவான் - முயற்சியைச் சரணம் செய்தால் அன்னை செயல்படுவார்.

பக்தன் - இவையெல்லாம் செய்யத் தகுதியிருப்பதற்கு அடையாளம்?

பகவான் - **Token Act** சொல்லும்.

பக்தன் - அடுத்தாற்போல் 67 – 69ஆம் பக்கங்களில் 23உம், 70 – 73ஆம் பக்கங்களில் 70உம் உள்ளன. எதைக் கேட்க?

பகவான் - கேட்டது திரும்ப வரும். வாராமலிருந்தால் நல்லது. வந்தால் பரவாயில்லை. இவை பெரிய விஷயங்கள். பலமுறை கேட்பது தவறன்று.





பக்தன் - **No.** 1. முரண்பாடு, உடன்பாடு என்பதில் புதியதாக அல்லது புதிய கோணத்தில் கூறக்கூடியதுண்டா?

பகவான் - *முரண்பாடுதான் உடன்பாட்டின் உயர்வை உணர்த்துவது.* உலகப் போர் உலகம் 1000 ஆண்டு முன்னேற உதவியது. நிர்ப்பந்தத்தால், அல்லது விரோதத்தால் பிரிந்துள்ள அண்ணன், தம்பி, நண்பர்கள், தம்பதிகள் பிரிந்துள்ளபொழுது மற்றவரை நினைப்பதைப் போல் சேர்ந்துள்ளபொழுது நினைப்பதில்லை.

பக்தன் - பாம்பு தவளையை விழுங்கும்பொழுது தவளை உணர்வது **Divine love** என்பது தத்துவம். ஏதோ ஓர் அளவில் நம் மனத்தைத் தீண்டும் அளவுக்கு இருந்தால் நல்லது. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்பதும் மொழி. *இறைவனை நாம் பிரிந்துள்ளதால் அவனை இடைவிடாது நினைக்கும் இன்பம் அவனோடு இரண்டறக் கலந்தபின் இருக்காது.* அது அன்னையின் அனுபவம் எனப் படித்திருக்கிறேன்.

பகவான் - பலனில் தெளிவாகக் கூறலாம்.

உணர்வில் இதற்கு மேல் கூற முடியாது.

அறிவில் தெளிவு ஏற்படுவது சிரமம்.

ஆத்மா கண்ணுக்குத் தெரியாது.

இதன் உச்சகட்ட அற்புதம் தெரிய ஒன்று செய்யலாம். நமக்கு விருப்பமில்லாத ஒருவரை நினைத்து, அவரிடம் நமக்குப் பிடிக்காததை விலக்கி, பிடித்ததை நினைவுபடுத்தி, நம் குணங்களுடன் எப்படி அவை ஒத்துப்போகிறது எனக் கண்டபின், அவரிடம் பிடிக்காத குணங்களை நினைத்து அத்துடன் ஒத்துப்போகும் குணம் ஒன்றைக் கருதினால், அதன் பெரும்பலன் ஏற்கனவே வந்தது தெரியும். பலனிலிருந்து உணர்வுக்குப் போவதும், உணர்விலிருந்து அறிவுக்கு வருவதும், அறிவிலிருந்து ஆத்மாவை நாடுவதையும் நினைக்க முடிந்தால், எல்லா முரண்பாடுகளும், உடன்பாடாகிவிடும்.

பக்தன் - எனக்குச் சில உதாரணங்கள் தெரியும். அவை இந்த உயர்வை எட்டுமா என்பதை அனுபவித்தவரே சொன்னால்தான் தெரியும்.

ஒருவர் உயிரை அடுத்தவர் எடுக்க முனைந்து முடிவான வெற்றி பெறும் நேரம் உயிரை அன்னையைக் கொண்டு காப்பாற்ற வேண்டும் என்று அவர் செய்த முடிவு அவரை ஸ்தூல உலகினின்று சூட்சுமத்திற்குக் கொண்டு போயிற்று. இது ஆன்மா பெற்ற பலன். அவரே பேசினால் விபரம் தெரியும். நாம் வெளியிலிருந்து பார்க்கும்பொழுது முழு விவரமும் தெரிந்து கொள்ள முடிவதில்லை. ஏதோ ஓர் அம்சம் அங்கும், இங்குமாகப் புரிகிறது. *அதிகமாக நான் பெற்ற அனுபவம் உடன்பாடு முரண்பாடானவை.*

பகவான் - தொழிலில் தெளிவாகத் தெரியும்.

பக்தன் - 8, 10 கம்பனிகள் மொத்தம் 800 கோடிக்கு 1989இல் பெற்றவர் அவற்றுள் 40 கோடி கம்பனியை மூட முடிவு செய்தார். நாம் அவரை அணுகிக் கம்பனியை மூட வேண்டாம் என்று கூறினோம். ‘‘நான் 25 ஆண்டுகட்குமுன் மாறிவரும் டெக்னாலஜியை சொற்பவிலைக்கு வாங்கினேன். இன்று உலகிலேயே இந்த டெக்னாலஜி பயன்படும் கம்பனிகள் சொற்பம். எவ்வளவு சீக்கிரம் மூடுகிறேனோ, அவ்வளவு நல்லது” என்றார். இந்த முரண்பாட்டை எப்படி உடன்பாடாக்கலாம் என **report** எழுதினோம். அவர் கம்பனி உடனே 40 கோடியிலிருந்து ஓரிரு ஆண்டுகளில் 100 கோடியாயிற்று. இன்டர்நெட்டில் இன்று அவருடைய **site**இல் அக்கம்பனி 500 கோடி எனவும், அவருடைய கம்பனிகளில் இது மட்டுமே இலாபகரமானது எனவும் பார்த்தோம்.

பகவான் - அவர் நீங்கள் கூறியதைப் புரிந்து கொள்ளாமல் பின்பற்றியதால் இக்கம்பனியில் அதிகப் பலன் வந்தாலும், அவர் நினைவு மற்ற கம்பனிகளில் பலிக்கிறது.

பக்தன் - 40, இந்த 13 ஆண்டில் 500 ஆனது உடன்பாடு. **No.** 52 நினைவைப்பற்றியது. நினைவு காலத்திற்குரியது,

பகவான் - ஜீவன், ஜீவியம், ஆனந்தம், மனம், வாழ்வு, ஜடம் ஆகியவை அனைத்தும் (**unity**) ஐக்கியமானவை. அவற்றுள் பிரிவினையில்லை. அதுபோல் காலத்திலும் பிரிவினையில்லை. பிரிவினை வாராமல் சிருஷ்டியில்லை, காலம் மூன்றாகப் பிரிகிறது. அது மனத்தாலும், அகந்தையாலும் பிரிகிறது. மேல்மனத்தில் பிரிவினை அதிகமாகத் தெரிகிறது. மனம் அடிமனமாகவே





யிருந்திருந்தால், நினைவு தேவையில்லை. மேல்மனம் ஏற்பட்டு காலம் என்ற 3 நிலை உண்டானபின் நினைவு தேவைப்படுகிறது. நாம் இந்த அறையிலிருக்கும்பொழுது எல்லாப் பொருட்களும் நம் கண்முன்னேயிருப்பதைப்போல் அடிமனத்தின் முன் உலகமிருப்பதால், கடந்ததும், வரப்போவதுமிருப்பதால் அடிமனத்திற்கு நினைவு தேவையில்லை. அடுத்த அறைப் பொருள்கள், அடுத்த வீட்டுப் பொருள்கள், 5ஆண்டுக்கு முன் நடந்தவை கண் முன்னாலில்லை. அவற்றை எழுதிவைப்பதுபோல் நினைவு நிகழ்ச்சிகளைப் பதிவு செய்கிறது. அடிமனத்தில் கடந்தது, நிகழ்ந்தது, எதிர்காலம் ஓரளவு சேர்ந்து வரும். *முதல் சித்தி அடிமனத்தை அறிவது.*

சிருஷ்டி என்பது பிரம்மம் தன்னை உலகமாக மாற்றுவது. அப்படி மாறும்பொழுது முதல் நிலை சத்புருஷன். முடிவான நிலை ஜடம். இம்மாறுதலில் ஞானம் அஞ்ஞானமாகிறது. அஞ்ஞானம் மேல்மனத்தில் பூர்த்தியடைகிறது. மேல்மனம் என்பது மனம். அது தன்னைக் காலத்திற்கும், அகந்தைக்கும் உட்படுத்தினால் சிறியதாகிறது. நினைவு காலத்திற்குரியது. காலத்தைக் கடந்தால் நினைவிருக்காது. உலகம் முழுவதும் தெரிவதால் நினைவுக்கு வேலையில்லை. *கடந்ததைப் பதிவு செய்து வைத்திருந்து நிகழ்காலத்திற்குக் கூறுவது நினைவு.*

பக்தன் - பிரம்மம் தன்னை நினைவு கூர்வதே பரிணாமமில்லையா?

பகவான் - காலத்தைக் கடந்த பிரம்மம் காலத்திற்குத் தன்னை உட்படுத்திக் கொள்வதால் நினைவு கூர வேண்டியிருக்கிறது. சூட்சும லோகத்தில் பூமியின் நினைவு முழுவதும் பதிக்கப்பட்ட இடம் உண்டு. அங்கு போய் பூமி உற்பத்தியானது முதல் அறியலாம்.

பக்தன் - **No.** 63 புனர் ஜென்மம்.

பகவான் - பரம்பரை, புனர்ஜென்மத்தை அறியும். அதன் காரணத்தை அறியாது. *ஆன்மா வளரும்பொழுது ஒரு கட்டத்தில்*

*இனி இந்த உடலில் வளர முடியாது என்ற நிலை வந்தவுடன் அடுத்த உடலை ஆன்மா நாடுவது புனர் ஜென்மம்.* புனர்ஜென்மம் ஆன்மீகப் பரிணாமத்திற்கு அவசியம்.

பக்தன் - நான் அறிய வேண்டிய சூட்சுமம் இதிலிருக்கிறதா?

பகவான் - மனம், உடலில் பொதிந்துள்ள ஆத்மாவை அவற்றினின்று பிரித்து - விடுதலை செய்து - அதன் ஆதியுடன் சேர்ப்பது மோட்சம். நம்மவர் ஆன்மாவுக்கு மோட்சம் தேடியபொழுது அதே மோட்சம் மனத்திற்கும், உடலுக்கும் தேவை என நினைக்கவில்லை. அவையும் தேவை என்பதால் மறுபிறப்புத் தேவைப்படுகிறது.

பக்தன் - உதாரணம்.

பகவான் - கிராமத்துப் பள்ளியில் படிப்பு முடிந்து, நகரத்திற்குப் போய், அங்கிருந்து காலேஜிக்கும், பல்கலைக்கழகத்திற்கும் பையன் படிக்கப் போகிறான். அந்த மாறுதல்கள் அனைத்தும் கிராமத்திற்கே வந்தால், அது பையன் படிப்பதால் வந்தால், நம்மால் அதைக் கற்பனை செய்ய முடியாது. புனர்ஜென்மத்தைத் தவிர்த்து இதே உடலில் எல்லா மாற்றங்களும் வருவது அதுபோன்றது.

பக்தன் - கிராமப் பள்ளி பல்கலைக்கழகமாவது வாழ்வில் காணாதது. ஆனால் கற்பனை செய்யலாம். ஒரு பையனுடைய படிப்பால் அது நடக்கும் என்பது என்ன?

பகவான் - பையனுடைய சிறப்பு உலகைக் கவர்ந்து பள்ளியை உயர்த்த முன்வர வேண்டும்.

பக்தன் - அதற்குப் பையன் உலகத்தைக் கடந்த உன்னதம் பெற்றிருக்க வேண்டும். No.69 *புறம் அகமானால் யுகம் க்ஷணமாகும்.*

பகவான் - சத்தியாரோகணம் என்ற அத்தியாயத்தின் - II/2, No. 27 - கரு இது. இதைப் பலவாறு கூறலாம்.

1. கையால் செய்வதை மனத்தால் செய்தால் காரியம் விரைவில் முடியும்.
2. கிராமத்து மனிதன் நெடுநாளில் செய்வதை டெல்லியில் உள்ளவர் போனில் முடிப்பார்கள்.
3. *சிறியவனுக்கு மலை, பெரியவனுக்குத் துரும்பு.*

   சென்னைக்குப் போகப் பல மணி நேரமாகும். மனோவேகம் நினைத்தவுடன் மனத்தை, சென்னைக்குக் கொண்டு போகும். மனத்தால் நினைத்தால் உடலுக்குப் பலிப்பது ஆத்மாவின் செயல்.
4. நிலை மாறினால் (planes) வேகம் அதிகமாகும்.
5. புறம் அகமாவது இங்கு ஜடம் ஆத்மாவாவதாகும். அதுவும், ஆத்மா அகத்திற்குரிய அமைதியான ஆத்மாயில்லை. பிரம்ம ஜனனத்தில் வாழ்வில் மலரும் ஆத்மா.
6. புறம் அகமாவது அறியாமையின் உச்சியிலிருந்து அறிவின் உச்சக்கட்டத்தைக் கடந்து செல்வது.

பக்தன் - No. 36 ஞானம் உறுதிமேல் செயல்படுவதால் வாழ்வு உண்டாகிறது. எதை இப்படிக் குறிப்பிடுகிறீர்கள்? ஆர்வம் எழுந்தால் தெம்பு வருவதைக் கூறுகிறீர்களா?

பகவான் - ஆர்வம் உணர்வு, மனமில்லை. ஆர்வம் எழ ஓர் எண்ணம் வேண்டும். அதைக் கூறுகிறேன். மரணப் படுக்கையிலிருந்த ஏழை ஒருவரை "வீடு கட்டலாம்" என்றவுடன் பிழைத்து எழுந்து வீடு கட்டி 25 ஆண்டுகள் மேலும் உயிரோடிருந்தார் என்பது எண்ணம் வாழ்வை உயர்ப்பிக்கிறது என்று காட்டுகிறது.

பக்தன் - உயிருக்குத் தெம்பு வருவதெல்லாம் மனத்தால் என்று கூறலாமா?

பகவான் - 36ஆம் நெம்பர் கூறுவதே அதுதான். எங்கு நாம் உணர்வைக் கண்டாலும், அதன்பின் ஞானம் இருக்கும்.

பக்தன் - No. 37 அடிமனம் மேல்மனத்தை ஆள்வதே முதல் சித்தி.

பகவான் - மேல்மனம், உள்மனம், அடிமனம் என்பவை அடுக்கடுக்காக உள்ளன.

பக்தன் - நாம் மேல்மனத்திலிருக்கிறோம், ரிஷி உள்மனத்திலிருக்கிறார்.

உள்மனத்திற்குப் போனால் ஆன்மீக மனத்திற்கு - முனி, ரிஷி, யோகி, தெய்வம் - உயரலாம் எனத் தெரியும்.

பகவான் - மனோமயப் புருஷனும், நிர்வாணக் கதவும் உள்மனத்திலுள்ளன. அடிமனம் அதையும் கடந்தது. சைத்தியப்புருஷன் அங்குள்ள குகையில் உள்ளான்.

பக்தன் - இதுவரை யோகங்கள்

1. அகந்தையாலும்
2. மேல்மனத்தாலும்
3. காலத்திற்குக் கட்டுப்பட்டும்
4. மனத்தாலும்

செய்யப்பட்டன என அறிவேன்.

பகவான் - காலத்திற்குக் கட்டுப்பட்டது எனில் கடந்த நிலையும் அதனுள் வரும்.

பக்தன் - காலத்தைக் கடந்தது எப்படி காலத்துள் வரும்?

பகவான் - காலம் என்பதற்கு இரு பகுதிகள் உள்ளன. கடந்தது மேற்பகுதி.

பக்தன் - ரிஷிகள் அடிமனத்தை அறியவில்லையா?

பகவான் - அறிவார்கள், யோகம் அங்கிருந்து செய்யப்படவில்லை.

பக்தன் - ஏன்?

பகவான் - அடிமனம் முழுமைக்குரியது. அங்கிருந்து யோகம் செய்ய சத்திய ஜீவியத்திலிருந்து யோகம் செய்ய வேண்டும். இதற்கு முன் அதை எவரும் கருதவில்லை.

பக்தன் - ஏன் இதை முதற் சித்தி என்று கூறுகிறீர்கள்?

பகவான் - முழுமை என்பது பாதாளமும், பரமாத்மாவும் சேர்ந்தது. அடிமனம் இவை சேருமிடத்திலுள்ளது. அடிமனமே உலகை ஆள்வது. மேல்மனம் அதன் கருவி. ஓர் ஆபீஸ் கிளார்க்குக்கு அதிகாரமில்லை. அதிகாரம் ஆபீஸுக்கு. *கிளார்க் ஆபீசுக்கு எதிராக வேலை செய்வான்.* அடிமனம் ஆபீஸ், கிளார்க் மேல்மனம். கிளார்க்





சொல்வதை எதையும் நம்ப வேண்டாம். அதுவே முதல் அனுபவம்.

பக்தன் - கிளார்க் ஆபீஸ் சொல்வதை அடியோடு மாற்றிப் பேசுவான்.

பகவான் - ஆபீஸ் கிளார்க்குக்குப் பிடிக்காதவற்றைச் செய்ய அவனை வற்புறுத்துவதுபோல் அடிமனம் மேல்மனத்திற்கு ஒவ்வாதவற்றைச் செய்யும்படி மேல்மனத்தை வலியுறுத்தும். அடிமனம் ஆனந்தமாக உணர்வதை மேல்மனம் வலியாக அறியும். குழந்தையின் தேவையைப் பெற்றோர் அறிவதைப்போல் நம் தேவையை அடிமனம் அறியும்.

பக்தன் - நெம்பர் 38 மரணம் வாழ்விற்கு அமரத்துவம் தருவது.

பகவான் - அன்பு, சிறுவர்களிடம் வெளிப்படும்பொழுது பரிசாகிறது. அன்பு உயர்ந்தது. சிறுவர்கட்கு அன்பு புரியுமானாலும், அது பரிசாக வெளிப்படுவது தெளிவாகப் புரியும். *மனத்தில் உள்ள அன்பு, புறத்தில் பரிசாகக் காணப்படுகிறது.*

பக்தன் - மரணம் வாழ்விற்கு முடிவு கட்டுகிறதே.

பகவான் - ஒரு குளத்தில் ஒரு குடம் நீரை முகந்து அதே குளத்தில் வேறு இடத்தில் ஊற்றினால் அதனால் நீர் குறைவதில்லை. நீரை முகந்ததும், மீண்டும் ஊற்றியதும் உண்மை. முகந்தபொழுது குளத்து நீர் குறைந்தது உண்மை. மீண்டும் நீர் குளத்தை வந்து அடைவதால் குளத்து நீர் மாறவில்லை.

பக்தன் - மரணம் எப்படி?

பகவான் - வாழ்வு அழியாதது. உலகில் சக்தி அழியாதது என்பது விஞ்ஞானம். வாழ்வு அழிவற்றது, குறையாதது. மிகைப்படாதது. ஓர் உடல் அழிவது மரணம். மீண்டும் அவ்வுயிர் வேறோர் உடலாகப் பிறப்பது புனர் ஜென்மம். வாழ்வுக்கு மரணத்தால் நஷ்டமில்லை, மாற்றமுண்டு. அழிவற்ற ஆத்மா அழியும். வாழ்வில், பிறப்பு, இறப்பென மாறிமாறி எழுவது வாழ்வுக்கு அமரத்துவம் தருவதாகும். *உயர்ந்த நிலை தாழ்ந்த நிலையில் தன் அனந்தத்தை*

*வெளிப்படுத்த தாழ்ந்த நிலையின் தாழ்ந்த சட்டங்களுக்குத் தன்னை உட்படுத்திக் கொள்கிறது.*

பக்தன் - சக்தியும், ஜீவியமும் சேர வேண்டும். **No.** 39.

பகவான் - சிருஷ்டியின் நிலைகளை நாம் கீழ்க்கண்டவாறு கூறுகிறோம்.

பிரம்மம்

↓

சத்புருஷன்

↓

சித் → சக்தி, ஜீவியம் எனப் பிரிகிறது

↓

சத்திய ஜீவியம்

↓

மனம்

↓

வாழ்வு

↓

உடல்

சித் என்ற நிலையில் சக்தியும், ஜீவியமும் பிரிகின்றன. பிரிவினை பூர்த்தியானபின் சக்தி வாழ்வாகிறது. பரிணாமத்தால் மீண்டும் மேலே போகும்பொழுது சக்தியும் ஜீவியமும் சேர்ந்து பூர்த்தியாகின்றன. சிருஷ்டியில் பிரிந்தவை, பரிணாமத்தால் பூர்த்தியாவது ஸ்ரீ அரவிந்தம். பிரிவது சிருஷ்டி, சேர்வது பரிணாமம்.

பக்தன் - மீண்டும் ஒரு முறை கூற முடியுமா?

பகவான் - பிரம்மம் முழுமை. அது சிருஷ்டிக்க வேண்டி தன்னுள்ளிருந்து ஒரு பகுதியாக சத்புருஷனை வெளிப்படுத்துகிறது. அடுத்த பகுதி அசத். சத்புருஷனுக்கு அடுத்த நிலை சித். சித் என்பது சத்தின் பகுதி. ஆனந்தம் சித்தின் பகுதி. சத்திய ஜீவியம் அவற்றின் பகுதி. மனம்





சத்திய ஜீவியத்தின் பகுதி. வாழ்வு மனத்தின் பகுதி. ஜடம் வாழ்வின் பகுதி. இதுவரை சிருஷ்டி. ஜடம் வாழ்வாகி முழுமை பெறுவது பரிணாமம். வாழ்வு மனமாகி முழுமை பெறுகிறது. தொடர்ந்து மீண்டும் பரிணாமத்தால் பகுதி, முழுமை பெற்று பிரம்மத்தை அடைகிறது.

பக்தன் - இது புரிகிறது.

பகவான் - சித் என்பது இரண்டாகப் பிரிகிறது. இதை ஜீவியம், சக்தி எனலாம். ஞானம், உறுதி எனவும் கூறலாம். இவை பிரிவதால் சிருஷ்டி அடுத்த அடுத்த நிலைகளையடை கிறது. மனம் என்ற நிலையில் ஞானமும், உறுதியும் பிரிந்துள்ளன. ஞானம் உறுதிமேல் செயல்பட்டால் **life energy** பிறக்கிறது. இதுவே வாழ்வு எனப்படும். பரிணாமத்தால் மீண்டும் உயர்ந்து மேலே போகும்பொழுது ஞானமும், உறுதியும் அல்லது சக்தியும், ஜீவனும் சேர்கின்றன. இது தத்துவம்.

பக்தன் - உதாரணம்,

பகவான் - கம்பனியில் மானேஜராக உள்ளவர் அறிவாளியானால், தன் அறிவால் தீட்டிய திட்டத்திற்கு அவர் உயிர் தர முடியாது. முதலாளியைக் கேட்டு உத்தரவு பெற்று திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். மானேஜர் நிலை உயர்ந்து, அவரே முதலாளியானால் இப்பொழுது மனதில் எழும் திட்டத்திற்கு அவர் உத்தரவு பெறத் தேவையில்லை. இந்நிலையில் திட்டமும் உயர்வும் இணைந்துள்ளன.

பக்தன் - உடல் உணர்வு மனத்தை எட்டி எண்ணமாகி உடலை ஆட்சி செய்கிறது என்பது நெம்பர் 40.

பகவான் - இயற்கைக்குப் பரிணாமம் என்பதும், சமூகத்திற்கு நாகரீகம் என்பதும் ஒன்றே - *உடல் மனத்திற்குப் பணிவது.*

பக்தன் - அன்று உடலால் வாழ்ந்த மனிதன் நாகரீகம் பெற்றதால் இன்று மனத்தால் வாழ்கிறான். இது தெரியும்.

பகவான் - தத்துவப்படி இது எப்படி சாத்தியமாகிறது என்பது 40ஆம் நெம்பர் விளக்கம். உடலுக்கு உணர்வுண்டு, அறிவில்லை.

வாழ்வுக்கு அறிவில்லை என்றாலும், அறிவுடைய மனத்திற்கும் உணர்வுடைய உடலுக்கும் இடையே அது அமைந்துள்ளது. உடல் மனமாக உயரும் பரிணாமத்தை நிறைவேற்றும் கருவி வாழ்வு. உடலுக்கும், மனத்திற்கும் இடையே வாழ்வுள்ளதால் உடல் அடிபடும்பொழுது, உடலுக்குச் சிந்திக்கும் அறிவில்லை. தான் பட்ட அடியை மனத்திற்கு வாழ்வு மூலம் உடல் அனுப்புகிறது. மனம் அதை எண்ணமாக மாற்றி மீண்டும் எப்படி அடிபடாமலிருக்கும் என உடலுக்குக் கூறுகிறது.

பக்தன் - உதாரணம்,

பகவான் - ஒற்றன் ஊரைச் சுற்றி நடப்பவற்றை அரசனுக்குத் தெரிவித்தால் அதன் பேரில் அரசன் ஆணை பிறப்பிப்பான் என்பது வழக்கம்.

பக்தன் - ஊருக்கும், அரசனுக்கும் இடையில் ஒற்றனிருப்பதைப்போல் உடலுக்கும் மனத்திற்குமிடையே வாழ்வுள்ளது. நம்பர் 41 இயலாமை போராடி வலுப்பெற்றால் சைத்தியப்புருஷன் மனதில் எழும்.

பகவான் - நஷ்டத்தைப் புத்தி கொள்முதல் செய்யும் என்பதுண்டு. உடலிலும், வாழ்விலும் உள்ள பிணக்கை இயலாமை என்கிறோம். ஒத்துழைக்க வேண்டியவர் பிணக்கால் போராடுகிறார்கள். *போராட்டம் இயலாமையை நீக்கி பலம் தருகிறது.* போராடுவது உடல் அல்லது உணர்வு. சைத்தியப்புருஷன் இவற்றுள் புதைந்திருக்கிறான். தங்கம் கனிப்பொருளில் புதைந்திருப்பதைப்போல் சைத்தியப் புருஷன் உடலில் புதைந்துள்ளான். போராட்டம் நிலையை உடலிலிருந்து மனத்திற்கு உயர்த்துகிறது. புதைந்துள்ள சைத்தியப் புருஷன் வெளிவருகிறான்.

பக்தன் - கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும் என்ற வழக்கு இவ்வுண்மையைக் கூறுகிறது. நம்பர் 42 ஜடம் சச்சிதானந்தம்.

பகவான் - இறைவன் உலகமானான் என்ற தத்துவத்தை சச்சிதானந்தம் ஜடமாயிற்று என்று கூறுகிறோம். சத்து, சித்து, ஆனந்தம், சத்தியஜீவியம் ஆகிய 4உம் ஜடம், சைத்தியப் புருஷன், வாழ்வு, மனமாகத் தலை கீழே மாறின என்பது ஓர் அத்தியாயம்.





பக்தன் - ஏன், எப்படி எனக் கூறினால் உதவும்.

பகவான் - சிருஷ்டிக்குரிய 8 நிலைகள் இவை. மேலுள்ள 4உம் மாறி கீழுள்ள 4ஆக மாறின. இது சிருஷ்டி. பரிணாமத்தால் இவை மீண்டும் மாறும் என்பது தத்துவம். தலைகீழே மாறுவது (self-absorption) தன்னுள்ளே தான் மறைவது.

பக்தன் - **Self-absorption**யை விளக்க வேண்டும்.

பகவான் - Concentration நிஷ்டை என்பதும், self-absorption என்பதும் ஒரே வகையானவை. *நாம் ஒரு வேலை செய்யும்பொழுது நம்மை மறந்து வேலையில் ஈடுபடுவது self-absorption தன்னுள் தான் மறைவது.*

பக்தன் - புரிகிறது. மேலும் விளக்கம் தேவை.

பகவான் - சிருஷ்டியை ஆண்டவன் தன்னிச்சையாகச் செய்தான். இதை self-conception என்றோம். பல காரியங்களை ஒரு காரியமாக எடுத்துக் கொள்வது self-limitation, எடுத்துக் கொண்டதில் முழு ஈடுபாடு கொள்வது self-absorption.

பக்தன் - ஞானம், அஞ்ஞானமாக மாறுவது இப்படித்தானா?

பகவான் - ஆமாம், முதலில் தலைகீழே மாறி முடிவில் முழு ஈடுபாடு கொள்வது.

பக்தன் - சிருஷ்டியில் இது எப்படி, எங்கே ஏற்படுகிறது?

பகவான் - சத்திய ஜீவியம் இரண்டாகப் பிரிந்து மனம் ஏற்பட்ட பொழுது spiritual force தலை கீழே மாறி material force ஆகிறது. இதைச் செய்வது மனம்.

பக்தன் - தலை கீழே மாற்றுவது மனம்.

பகவான் - சத்தியஜீவியம் இரண்டாகப் பிரியும்பொழுது காலம், காலத்தைக் கடந்தது எனப் பிரிகிறது.

பக்தன் - *காலத்தைக் கடந்த நிலை தலைகீழாகக் காலமாக மாறுகிறது எனக் கூறலாமா?*

பகவான் - கூறலாம்.

பக்தன் - உதாரணத்தின் மூலம் கூறுங்கள்.

பகவான் - நாடு செழிப்பாக முன்னேற சர்க்கார் திட்டம் போட்டால், அதை நாம், நம் இலாபத்திற்காக எடுத்துக் கொள்கிறோம்.

பக்தன் - இங்குப் பொதுநலமான திட்டம் சுயநலமாக மாறுகிறது.

பகவான் - சுயநலமாக உற்பத்தியான பொருள் மார்க்கட்டில் வந்தால் பரநலமாகப் பயன்படுகின்றன. பரநலம் சுயநலமாவது சிருஷ்டி. சுயநலம் பரநலமாவது பரிணாமம். சுயநலம் அதிகப் பலன் பெற உலகை மறந்து உட்சோதியில் கலப்பது **self-absorption.** *சிருஷ்டியின் தத்துவம் புரிந்தபின் நம் வாழ்வைப் பரிசீலனை செய்தால்,* இரண்டும் ஒன்று எனப் புரியும்.

பக்தன் - எனக்குப் புரியாததால், உங்களை எடுத்து விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பகவான் - நாம் செய்ய விரும்பும் எந்தக் காரியமும் - வீடு கட்ட - நாமே எடுத்த முடிவு **self-conception.** வீடு முடியும்வரை நாம் நம் கவனத்தை வீடு கட்டுவதில் மட்டும் செலவிடுகிறோம். இது **self-limitation.** வீடு எழும்பொழுது நாம் அவ் வேலையில் உலகை மறந்து விடுவது **self-absorption.** *இது போலவே நாம் எந்த வேலையையும் செய்கிறோம். நம் வேலைக்கு நாம் ஆண்டவன்.*

பக்தன் - இது புரிகிறது.

பகவான் - தத்துவத்தைப் புரியும்படிச் சொல்லலாம்.

பக்தன் - *நடைமுறையில் பலிப்பது நம் சுபாவம்* **personality***யைப் பொருத்தது.*

பகவான் - சுபாவம் வேறுபடுகிறது என்றால் ஒரு காரியம் என வரும் பொழுது அந்த வேறுபாடு தெரியும், தெரியாமலிருக்காது.

பக்தன் - **Association**இல் செக்ரடரி எலக்ஷன் என்றவுடன் யார் மனம் என்ன நினைக்கிறது எனத் தெளிவாகத் தெரியும்.

பகவான் - வாழ்நாள் முடிவில் அன்றிருந்த சிறு வித்தியாசம் உச்சிக்கும், அடிமட்டத்திற்கும் உள்ளதாக முடியும்.





பக்தன் - ஒருவனுக்கு நிற்கத் தோன்றாது. அனைவரும் சேர்ந்து அவனை நிறுத்துவர். அடுத்தவன் நிற்கப் பிரியப்பட்டு, பிரியத்தை அடக்கிக் கொள்வான்.

பகவான் - *சிறுதுளி பெருவெள்ளம்.* இது எதிரான பக்கங்களில் உள்ளது. இதை நடைமுறையில் காண்பது யோகம் பலிப்பதாகும்.

பக்தன் - 43ஆம் நம்பர் மனம் ஆன்மாவைப் புலன் வழி அறிவது ஜடம்.

பகவான் - சிருஷ்டியின் நிலைகளை மீண்டும் ஒரு முறை கூறுவோம்.

1. முழுமுதற் கடவுள் - பிரம்மம் - அனாதி - அனந்தம் **The Absolute.**
2. சிருஷ்டிக்க விரும்புகிறது.

*ஆனந்தம் தேடுகிறது.*

கண்டுபிடிப்பது ஆனந்தம்.

தானே மறைந்து கண்டுபிடிப்பது பெரிய ஆனந்தம்.

மறைந்ததை மறந்தால் கண்டுபிடிக்க முடியாது.

முடியாதது முடிவது பேரானந்தம்.

மறந்ததை நினைவுபடுத்துவது அருள்.

ஆட்டம் இரு கட்சியுள்ளது.

பிரம்மம் இரு கட்சியாகப் பிரிந்து ஆட்டம் ஆடுகிறது.

*ஒருவரே இரு கட்சியாகப் பிரிந்து ஆடுவது அற்புதம்.*

பிரம்மம் மறைய இடமில்லை.

எனவே தன்னுள்ளே தான் மறைகிறது.

மறைந்தது பிரம்மம், மறந்தது பிரம்மம்.

மறைந்த பிரம்மம் தன்னை மறந்தது சிருஷ்டியின் சிறப்பு.

தான் தன்னை மறந்ததை தானே நினைவு படுத்துவது அருள், ஆண்டவன் செயல்.

நினைவு எழுவது கண்டுபிடிப்பது.

அதுவே சிருஷ்டியின் ஆனந்தம் தருவது.

இது சச்சிதானந்த ஆனந்தத்தை விடப் பெரியது.

இந்த ஆனந்தம் மேலுலகுக்குரியது. நம் உலகில் இது மின்னல்போல் தோன்றி மறையும்.

நிலையற்ற ஆனந்தம் நிலை பெறுவது ஜடத்தால், ஜடத்தில் வெளிப்படுவதால் அது நிலைபெறுகிறது.

ஆதியான பிரம்மம் அசைவற்றது.

அது காலத்தில் அஞ்ஞான இருளாகவும், காலத்தைக் கடந்து அசைவற்ற ஜோதியாகவுமிருக்கும்.

அசைவில் ஜோதியாகப் பிரம்மமிருப்பது பரிணாமம்.

இந்த ஆனந்தம் ரிஷிகட்கும், இறைவனுக்கும் இல்லாத ஆனந்தம்.

இது பிரம்மானந்தம், பிரம்ம ஞானம் பெற்று, பிரம்மார்ப்பணத்தால் பிரம்மம் வாழ்வில் வெளிப்படுவது. பிரம்ம ஜனனம் என்பது ஸ்ரீ அரவிந்தம்.

3. சிருஷ்டியின் முதல் நிலை

   சத் - அசத்

4. சத் என்பது ஜீவனாகி சத் புருஷனாகிறது.

   இதற்கு 5 அல்லது 6 மாற்றங்கள், வெளிப்பாடுகள், **extensions** உண்டு.

- சத் - சித் - ஆனந்தம் என்பது ஒன்று.
- சத் என்ற அகம் சத்தியம் என்ற புறமாவது இரண்டு.

* இவற்றிடையே எழுவது ஆன்மா.
* ஆன்மா என்பது **substance** பொருள்.
* உலகனைத்தும் அதனால் ஆனது.
* ஒன்றான சத் பலவான ஜீவாத்மாக்களாக மாறுவது பிரபஞ்சம் சிருஷ்டியாவது.





* காலமும், இடமும் 4ஆம் மாற்றம்.
* சத்புருஷன் மூன்றாகப் பிரிகின்றது.

  ஆத்மா - புருஷா - ஈஸ்வரா.

  ஆத்மாவைப் பிரம்மம் எனவும் கூறுவோம்.

  இப்பிரம்மம் க்ஷர, அக்ஷரப் பிரம்மமாகப் பிரிகிறது.

  க்ஷரப்பிரம்மம் என்பது உலகம்.

- சத், சித், ஆனந்தம் என்ற அகநிலை,

  சத்தியம், ஞானம், ஆனந்தம் என்ற புறநிலையாவது சத்திய ஜீவியம் எனப்படும்.

5. சத்திய ஜீவியம் இரண்டாகப் பிரிகிறது.

   ஒன்று காலத்தைக் கடந்தது, அடுத்தது காலத்திற்குரியது.

6. இவற்றிடையே மனம் ஏற்படுகிறது. மனம் சத்திய ஜீவியத்திலிருந்து பிரிந்த பகுதி. சத்திய ஜீவியத்திற்குள்ள முழுமை, மனத்திற்கில்லை. சத்திய ஜீவியம் உலகை முழுமையாகக் - முழுமையான பிரம்ம வெளிப்பாடாகக் காணும் - காணும். மனம் ஒரே சமயத்தில் சத்திய ஜீவியம் போல் இருபுறங்களையும் காண முடியாது. ஆனால் மாறி மாறிக் காணவல்லது. மேல்புறம் சத்திய ஜீவியத்தையும், கீழ்ப்புறம் பிரபஞ்சத்தையும் மனம், தான் விரும்பியபொழுது காணக் கூடியது.

   *மனம் தன் பிறப்பை மறந்து மேல்புறம் காண மறுத்ததால் அஞ்ஞானம் ஏற்பட்டது.*

7. மனத்தின் இரு பகுதிகள், ஞானம் - உறுதி (**will**).

8. ஞானம் உறுதிமேல் செயல்படுகிறது. அதனால் ஓரளவு ஞானம் அழிகிறது. சக்தி பிறக்கிறது. அது வாழ்வு எனப்படும்.

9. ஞானம் சக்திமீது செயல்படும்பொழுது தன்னை இழக்க ஆரம்பித்தது முழுவதும் தன்னை இழந்தால் சக்தி, சலனமற்ற ஜடமாகிறது.

ஜடம் உற்பத்தியாவதை மற்றொரு வகையாகவும் கூறலாம்.

சத் ———— சித்

சத்திய ஜீவியம் (காலத்தைக் கடந்தது)

*ஆன்மா* ⟵ *மனம்*

சத்திய ஜீவியம் (காலத்திற்குரியது)

*சத்தியம்*

- மனம் ஆன்மாவைக் காண்கிறது. மனம் புலன் வழி ஆன்மாவைக் காண்கிறது. ஆன்மா மனத்திற்கு ஜடமாகக் காட்சியளிக்கிறது.
- மனம் புலன்வழி ஆன்மாவைக் காணும்பொழுது மனத்தின் பார்வைக்கு ஆன்மா ஜடமாகக் காட்சியளிக்கிறது.

பக்தன் - சிரமமாக இருந்தாலும், சிக்கல் அவிழ்ந்து சிருஷ்டி புரிவது போலிருக்கிறது. இதை வாழ்வில் பொருத்திக் கூற முடியுமா?

பகவான் - நூலின் எல்லாக் கருத்துகளையும் அறிந்தபின் அப்படிக் கூறினால் புரியும். இப்பொழுது சுருக்கமாகக் கூறினால் சில சமயம் புரியும். உணர்ச்சிமயமான மனிதன் செயலாற்ற முற்பட்டால் ஆன்மா மனம் வழி செயலில் வெளிப்படும். மனிதன் மனத்தை மையமாகக் கொண்டால் உலகத்திற்குரிய பலனும், மனத்திலிருந்து ஆன்மாவுக்குப் போய் ஆன்மாவை மையமாகக் கொண்டு செயல்பட்டால், ஆண்டவனுக்குரிய பலனும் வரும்.

பக்தன் - வளரும் ஆன்மா எங்குள்ளது?

பகவான் - மேலுள்ள படத்தில் மனத்தினுள் உள்ள ஆன்மா வளரும் ஆன்மாவாகும்.

வளரும் ஆன்மா செயல்படுவது marvel, அற்புதம், பிரம்ம ஜனனம்.

பக்தன் - நெம்பர் 44 அஞ்ஞானம், தமஸ், பிரிவினை ஜடத்திற்குத் தடை.





பகவான் - ஜடம் முதலில் அஞ்ஞானத்தால் சூழப்படுகிறது. ஞானம் தலை கீழேமாறி அஞ்ஞானமாவது ஜடத்தில் பூர்த்தியாகிறது. அதனால் அஞ்ஞானம் ஜடம் மீண்டும் சத்தாகத் தடையாகவுள்ளது. சக்தி முழுவதும் சலனத்தை இழப்பதால் ஜடம் ஏற்படுவதால், ஜடத்தில் தமஸ் - மந்தம் - உள்ளது. சத்தியஜீவியம் இரண்டாகப் பிரிந்து மனம் ஏற்படுகிறது. அம்மனம் ஜடத்தை உற்பத்தி செய்வதால் ஜடம் பிரிந்து நிற்கிறது. அது பிரிவினை. *அஞ்ஞானம், தமஸ், பிரிவினை ஆகிய மூன்றும் விலகினால் ஜடம் சத்தாக மாறும்.*

1. அஞ்ஞானம் ஏழு வகைகளானது. ஏழும் அகல வேண்டும்.
2. மந்தம் என்பது ஜடத்திற்குரியது. மந்தம் விலகினால் ஜடம் வாழ்வாகும். மனத்தின் வேகம் மனோவேகம். அது வாழ்வின் வேகத்தைவிட அதிகம். மௌனம் மனோ வேகத்தைக் கடந்தது. மேலே போகப் போக சத்திய ஜீவியத்தில் வேகம் ஒளியின் வேகத்தைவிட அதிகம். அந்நிலையில் தமஸுக்கு வழியில்லை.
3. பிரிவினை - ஒன்று பலவாகப் பிரிந்தது. பல ஒன்றாகப் பிரிவினையை இழந்து மாறுதல் அவசியம். சத்திற்குரியது ஐக்கியம். சித்திற்குரியது ஒருமை. சத்திய ஜீவியத்திற்குரியது சுமுகம். மனத்திற்குரியது விட்டுக் கொடுப்பது. வாழ்வுக்குரியது பிணக்கு. ஜடத்திற்குரியது முரண்பாடான பிரிவினை. பிரிவினை படிப்படியாக உயர்ந்து ஐக்கியத்தை அடைய வேண்டும்.

பக்தன் - நெம்பர் 45 சத்திய ஜீவியம் சிருஷ்டிப்பது என்பது பிரம்மம் சிருஷ்டிப்பதாகும்.

பகவான் - பிரம்ம சிருஷ்டி பிரபஞ்ச சிருஷ்டி என்ற அத்தியாயத்தில் உலகை மனம் சிருஷ்டிக்கவில்லை சத்தியஜீவியம் சிருஷ்டித்தது என்றோம். சத்தியஜீவியம் என்பது சச்சிதானந்தம் என்ற அகத்தின் புறமாதலால், அதை சச்சிதானந்தம் சிருஷ்டித்தது என்று கூறலாம். பிரம்மத்தின்

முதல் நிலை சச்சிதானந்தம் என்பதால், அதையே பிரம்மம் சிருஷ்டித்தது எனவும் கூறலாம்.

பக்தன் - முனிசிபாலிட்டியும், மாநில சர்க்காரும் செய்வனவற்றை மத்திய சர்க்கார் செய்வதாகக் கூறுவது போலாகும்.

பகவான் - யார் செய்தாலும், முடிவாக அது மக்கள் பணம் என்பதால் சமூகம் தனக்குத் தானே செய்து கொள்வதாகக் கருதலாம்.

பக்தன் - உடல் செய்வதை மனம் செய்வது என்று சொல்வதைப் போலவா?

பகவான் - ஆமாம்.

பக்தன் - நம்பர் 46 பிரம்மம் முழுமையானது. மனம் அதைப் பகுதியாகக் காண்கிறது.

யானையைக் குருடர்கள் கண்ட உதாரணம் நூலில் வருகிறது. இன்னொரு உதாரணம் கூறுங்கள்.

பகவான் - சர்க்கார் என்பது முழுமையானது. தாலுக்காபீஸில் வேலை செய்பவனுக்கு அவனுடைய இலாக்காவே அனைத்து சர்க்காருமாகும். மற்ற இலாக்காக்கள் மனதில் படாது.

பக்தன் - நம்பர் 47 ஜீவாத்மாவே பரமாத்மா. இதை நான் பல்வேறு வழிகளிலும் அறிவேன். என்றாலும் மேலும் ஒரு முறை கேட்கப் பிரியப்படுகிறேன். எனக்குத் தெரிந்தது,

- நாம் அகந்தையை ஜீவாத்மா என நினைக்கிறோம்.
- அகந்தை அஞ்ஞானத்தில் ஜீவாத்மா, ஞானத்திலன்று.
- அகந்தை பிரிந்து நிற்பது, ஒருமையோ, ஐக்கியமோ உடையதன்று.
- அஞ்ஞானம் கரைந்தால் அகந்தை கரையும்.
- அகந்தை மேல்மனத்திற்குரியது.
- மேல்மனம் பகுதி.
- அடிமனம் முழுமையானது.
- அகந்தை அடிமனத்திலில்லை.
- மேல்மனத்தில் அகந்தை, உள்மனத்தில் புருஷனாகி, அடிமனத்தில் சைத்தியப் புருஷனாகிறது.





- காலத்தைக் கடந்து, பிரபஞ்சத்தை அறிந்தால் அகந்தை கரையும்.
- அகந்தை கரைந்தால் புருஷன் வெளிவருவான்.
- இது உலகத்து ஜீவன்.
- இவன் உலகத்து அனுபவத்தை அகத்தில் காணலாம்.
- அகத்தில் அவ்வனுபவத்தின் ஜீவன், ஜீவாத்மா. அவனை உற்று நோக்கினால் பரமாத்மா எனத் தெரியும்.

பகவான் - அதற்கு மேல் சொல்ல எதுவுமில்லை.

பக்தன் - ரிஷிகள் கண்டது, காணாதது எவை?

பகவான் - மனம் பரமாத்மாவை நிஷ்டையிலும், ஜீவாத்மாவை தியானத்திலும் காண்கிறது. அவை வேறாகத் தெரிகின்றன. சத்திய ஜீவியம் விழிப்பில் இரண்டையும் ஒன்றாகக் காண்கிறது. சத்திய ஜீவியம் ரிஷிகட்கில்லாததால் அவர்கள் முழுமையைக் காணவில்லை.

பக்தன் - இந்த அத்தியாயத்தில் பிரம்மமே உலகம், முரண்பாடு முடிவற்றதன்று, காலம் சிருஷ்டிகர்த்தா இல்லை என்று வருவதற்குக் காரணம் என்ன?

பகவான் - பிரம்மமே சிருஷ்டி என்பதும், பரமாத்மாவே ஜீவாத்மா என்பதும் ஒன்றே. *முரண்பாடு முனைப்பின் தோற்றம், ஆதியின் அம்சமில்லை என்பதன் அடிப்படையில் பிரம்மம் சத், அசத்தாயிற்று.* காலம் சிருஷ்டிக்கப்பட்டது என்றால் காலம் சிருஷ்டிக்கவில்லை என்பது தெளிவு.

பக்தன் - மேலும் அறிய வேண்டியவை இங்குண்டா?

பகவான் - இம்மூன்றும் முழுமையை உணர்த்துபவை. முழுமை மனதில் படும்வரை இவை தெளிவு தாரா. நாம் உயிரோடிருக்கிறோம் என்ற முழுமையை உணர்வது போல் நாம் வேறெதையும் உணர்வதில்லை.

பக்தன் - 48ஆம் நெம்பர் **negative** என்றொன்றில்லை.

பகவான் - அடிப்படையில் இது நமக்குப் புதியது. எதிரி, வேண்டாதது, உதவாது, ஆகாது, negative என்பதே நம் வாழ்வுக்கு

அடிப்படை. அவையில்லை என்றால் பரீட்சையில்லாத பள்ளிக்கூடம் போலிருக்கும். ஊரில் திருடனில்லை என்பதை நம்ப முடியாது. வதந்தி என்றொன்றில்லை. ஆண், பெண் என்ற வேறுபாடில்லை என்பவை நம் கற்பனைக்கு எட்டாதவை. *உண்மை வேறு. நம் உடலில் வேண்டாதது என்பதுண்டா?* அதேபோல் வாழ்விலும் விலக்கப்படுவது, **negative** இல்லை என்றால் நம்ப முடியவில்லை. வழக்கு எனில் ஒருவர் ஜெயித்தால், அடுத்தவர் தோற்க வேண்டும். இந்த கோர்ட்டில் எந்த வழக்கிலும் தோல்வியில்லை என்பது சிந்தனைக்குப் புலப்படாதது எனினும், அதுவே உண்மை. புரிந்து கொள்வது சுலபம். ஏற்பது சிரமம். மேலும்,

- வலியை அனுபவிக்காமல் ஆனந்தத்தின் முழுமையை அறிய முடியாது.
- இரண்டாகப் பிரிவது மீண்டும் மூன்றாம் நிலையில் கூடுகிறது என்பதையும் உலகம் கருதுவதில்லை. அந்நிலையில் உயர்வு, பூரணம் பெறுகிறது.

பக்தன் - உதாரணத்தின் மூலம் விளக்க முடியுமா?

பகவான் - மனிதன் வலியை வலியாக அனுபவித்தால் வலியும், ஆனந்தமும் பகுதியாகவே நிற்கின்றன. முழுமை எழுவதில்லை. வலியை ஆனந்தத்தின் மறு உருவம் எனக் கருதி ஏற்றால், வெகு சீக்கிரம் வலி ஆனந்தமாக மாறும். வலி அவனைப் பொருத்தவரை அழியும். இல்லையேல் ஆயுள் முழுவதும் வலி இருந்தபடியிருக்கும்.

பக்தன் - வேலை கற்க ஓர்க் ஷாப்புக்குப் போகிறவன் அதைத் தலைவிதியே என ஏற்றால் அவன் கடைசிவரை வேலையைக் கற்க மாட்டான். கூலியாகவே இருப்பான். *இந்த வேலை நான் முதலாளியாவதற்குப் பயிற்சி என ஏற்றால் கொஞ்ச நாளில் முதலாளியாகி விடுகிறான்.*

பகவான் - உதாரணம் பொருத்தமானது. வாழ்வில் வலியுள்ளவற்றை நாம் "இது ஆனந்தத்தின் வாயில்" என்று ஏற்றால் வலி நம் வாழ்வை விட்டுப் போகும். ஆரம்பத்திலேயே அந்த





ஞானம் முழுமையானால், வலி ஆனந்தமாக உடனே மாறுவதைக் காணலாம்.

பக்தன் - நெம்பர் 49. மனம் இல்லாததை நினைக்க முடியாது.

பகவான் - எதிரேயுள்ளதைப் பார்க்கிறோம். நேற்று பார்த்ததை இன்று நினைக்கிறோம். பார்க்காததை எப்படி நினைவு படுத்துவது? கற்பனை என்பது சூட்சும உலகில் உள்ளதைக் 'காண்பது.' இன்று நடப்பவை ஏற்கனவே சூட்சும உலகில் உருவானவை. இனி வரப்போகும் நிகழ்ச்சிகள் இன்று சூட்சுமத்திலிருப்பதைக் கற்பனை செய்கிறோம். நேற்றோ, நாளையோ, இன்றோ இல்லாததைப் பார்க்கும் திறன் மனத்திற்கு இல்லை. பள்ளிக்கூட அட்டண்டென்ஸில் வகுப்பில் உள்ள பிள்ளைகள் பெயர் இருக்கும். வகுப்பில் இல்லாத பிள்ளைகள் பெயர் இருக்காது.

பக்தன் - மொழியில் சொல் அப்படித்தான். உள்ள நடைமுறைக்குச் சொல்லிருக்கும். தீட்டு, எச்சில் என்பவை ஆங்கிலேயருக்கில்லை. அதனால் ஆங்கிலத்தில் அதற்குச் சொல்லில்லை. மேஜை, நாற்காலி, கோட்டு என்பவை நம் நாட்டிலில்லை. அதனால் தமிழில் அதற்குரிய சொற்களில்லை. *உள்ள பொருள்களுக்கே சொல்லிருப்பதைப்போல், மனம் இல்லாததை நினைக்க முடியாது* என்பதை மாயை இல்லை என நூல் கூறுகின்றது.

பகவான் - ஆமாம்.

**The Life Divine**இல் இரண்டாம் புத்தகத்தில் 5,6 அத்தியாயங்கள் மாயை பற்றியவை. இங்கு முக்கியமாகக் கூறப்படுபவை,

- ஜடமனம் நாத்திகம் பேசும். பிராணனும், பிராணனுக்குரிய மனமும் மாயையை நாடுகின்றன. *சிந்திக்கும் மனம் பிரம்மத்தை நோக்கிச் செல்லும்.*
- மாயை என்பது இல்லை என்பது தத்துவம். இருக்கிறது என்பது நம் கொள்கை.
- கனவையும், ஆவியையும் மாயாவாதிகள் உதாரணமாகக்

கூறுகிறார்கள். கனவை அடிமனம் உண்மை என அறியும். ஆவி உலகம் உள்ளதைப் பிரதிபலிக்கிறது.

- இரு தத்துவங்கள் இருக்கலாம்.
  1. சித் மாயையைச் சிருஷ்டிப்பதால், உலகம் மாயையாகிறது.
  2. மனம் அஞ்ஞானத்தின் கருவி, அதனால் அஞ்ஞானத்தைக் கைவிட்டு, பிரம்மத்துடன் சேர முடியும்.
- பார்ப்பவன், பார்வை, பார்க்கும் பொருள் இவற்றுள் எதையும் இல்லை எனலாம்.
- நம் முன் அழியாத சத்தியமும், மாயையான உலகமும் உள்ளன.
- பிரம்மத்தின் நான்கு நிலைகள்.
  1. அக்ஷரப்பிரம்மம் என்பதே பிரம்மம்.
  2. சர்வம் பிரம்மம்.
  3. உள்ளனவெல்லாம் அக்ஷரப்பிரம்மம்.
  4. அது மற்றவற்றை பிரம்மத்தின் 4 நிலைகளில் காண்கிறது.
- சங்கரர் கூறுவது அன்றிருந்த சிக்கலை உடைக்கிறது. ஆனால் அவரிடம் முழுப் பதிலில்லை.
- *முழுமையான ஆத்மானுபவம் தர்க்கவாதங்களைத் தகர்த்தெறியும்.*
- நாம் புதிர் என்பது மாயையில்லை, அஞ்ஞானம்.

பக்தன் - பழமொழி, திருக்குறள், வழக்கு, வாய்வாக்கு என்பவற்றுள் அன்னை கோட்பாடுகளில் பல வருகின்றன. சில நேரடியாகப் புரிகின்றன. மற்றவை புரியவில்லை.

பகவான் - ஸ்ரீ அரவிந்தம் கூறுவது முழுவதும் புதியது என்றாலும், இதன் வித்துகள் மரபில் உண்டு. விதியை மதியால் வெல்லலாம் என்பது அது போலொன்று. மதி என்பது மனம். ஸ்ரீ அரவிந்தம் மதியைக் கூறவில்லை. வளரும் ஆன்மாவைக் கூறுகிறது.

பக்தன் - "நமக்குச் செய்ய மாட்டார், வேண்டியவர்க்குச் செய்வார்" என்ற சொல் வழங்குகிறது.

பகவான் - பாரபட்சம், சுயநலம், ஊழல், அநீதி ஆகியவற்றை இப்படிக் கூறுவர். இதையே அன்னையிடம் நமக்கு நடக்காது என்பர். *எனக்கு வேண்டாம் என்பதை நமக்கு நடக்காது என்பார்.* ஒரு முதலாளியைப் பற்றி இப்படிக் கருதுபவர், இதை மாற்றி, "எனக்கு அன்னை மீது நம்பிக்கையிருந்தால் நடக்கும்" என்றால் நிலைமை மாறும்.

பக்தன் - நான் கேட்பது வேறு. ''இவன் மனதிலுள்ள அநீதியை நியாயப்படுத்த இப்படிப் பேசுகிறான்'' என்று நான் நினைக்கிறேன்.

பகவான் - தன் குறையைப் பிறர்மீது ஏற்றிப் பேசும் வழக்கம் இது. மேலும் தன் குறையை மீறி அனைவரும் தமக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற விருப்பம் இப்படிக் குறையாக எழுகிறது. "நான் பெற்றனவெல்லாம் உங்களால்தான். நான் நன்றியுள்ளவன்" என்று கூறுபவர் நல்லவர். அவருக்கு என்ன தெரியவில்லை, நன்றியறிதல் பலனுக்கு என்பது சுயநலம். பலனில்லை எனில் நல்லுணர் வில்லையா? பழக்கம் பலனுக்கு எனப் பேசுவது ஆதாய மனப்பான்மை என்று அறிய முடியாதவர்.

பக்தன் - கேட்டது கேட்டபடி பலிக்கிறது. சக்திவாய்ந்த தெய்வம் என்பவர் ஒருவர்.

பகவான் - என்னை எது வேண்டுமானாலும் கேட்கலாம் என்ற அன்னை, எதுவும் கேட்காத மனப்பான்மை நல்லது என்று கூறியிருக்கிறார். *பலனுக்காகப் பிரார்த்திப்பது முதல் நிலை பக்தி.*

பக்தன் - கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும் என்பது முரண்பாடு உடன்பாடாவது என்று கொள்ளலாமா?

பகவான் - அவ்வுண்மையைக் கண்டவர் கூறியது இது.

பக்தன் - ஆவாதவன்தான் ஆபத்திற்குதவுவான் என்பது ஒரு சொல்.

பகவான் - இதுவும் அது போன்றதே. முரண்பாட்டிலுள்ள உடன்பாட்டை எடுத்துக் காட்டுகிறது. Mayor of Casterbridge என்ற நாவலில் எளியவன் மேயராகி, மீண்டும் எளிமையாகி, யார் கண்ணிலும் படாமல் சாகிறான். அவன் மேயராக இருந்தபொழுது வேலைக்கு நேரம் கழித்து வரும் கூலிக்காரன் வீட்டிற்குப் போய் அவன் அரை நிர்வாணமாக நிற்பதுடன் தெருவுக்கு இழுத்து வருகிறான். மேயருடைய மேனேஜர் அவனுடைய அவமானத்தைத் தடுக்கிறான். *மேயர் மரணப் படுக்கையிலிருக்கும்பொழுது அன்று அவமானப் பட்டவன் மட்டும் உடனிருந்து உதவுகிறான்.* அவமானப்பட்டவன் பழிவாங்குவான். அது மேல்மனம். அடிமனம் அன்றைய அவமானத்தை அருளாகக் கருதுவதால், இன்று சேவை செய்ய முன்வருகிறது.

பக்தன் - எழுத்தாளர்கட்கு அடிமனத்தின் உண்மை தெரியுமா?

பகவான் - அவர்கட்கு வாழ்வின் இரகஸ்யங்கள் தெரியும். அவை யோகத்தின் அடிப்படை.

பக்தன் - வழக்கில்,

பணம் என்றால் எதற்கும் கட்டுப்படாது.

ஆண்பிள்ளை எப்படி வேண்டுமானாலும் இருப்பான்.

கேட்காத கடன் வாராது.

அதிகாரம் இருக்கிறது என்றால் அடங்க வேண்டும்,

என்பதை ஸ்ரீ அரவிந்தம் மூலம் விளக்க முடியுமா?

பகவான் - *ஸ்ரீ அரவிந்தம் இதற்கு எதிரானது.*

பணம் மனத்திற்குக் கட்டுப்படும்.

ஆண்பிள்ளையின் கட்டுப்பாட்டிற்குப் பலன் அதிகம்.

கேட்காவிட்டாலும் கடன் தானே வருவதுண்டு.

அதிகாரம் இருந்தால் பிறர்க்கு அடங்க வேண்டும்.





பக்தன் - இதெல்லாம் இலட்சியமா? நடைமுறையா?

பகவான் - இலட்சிய நடைமுறை.

பக்தன் - இப்படி நடக்க வேண்டும் என்று கூறுகிறீர்களா? நடக்கும் என்று கூறுகிறீர்களா?

பகவான் - *இவையெல்லாம் அன்பர் அனுபவம்.* இலட்சியமாக மேற்கொண்டால், அன்னை அதிகமாகச் செயல்படுவார்.

பக்தன் - *வழக்கு என்பதை விளக்க வேண்டும்.*

பகவான் - உலகில் 100 ஆண்டிற்குப்பின் வருவது, 1000 ஆண்டிற்குப் பின் வரப் போவது முன்கூட்டித் தெரியும். வாழ்க்கை கோடிகாட்டும். அது போலுள்ளவை நீங்கள் கேட்பது. அவற்றுள் தவறானவை - கடன் கேட்காமல் வாராது - என்பவற்றிற்கு ஸ்ரீ அரவிந்தம் நேர் எதிரானது. அதிகாரம் அடக்குவது, அடங்குவது திருவுருமாற்றம். இக் கண்ணோட்டத்தில் வழக்கையும், ஸ்ரீ அரவிந்தத்தையும் ஒப்பிடுவது நல்ல முயற்சி.

பக்தன் - நெம்பர் 50 பாம்பும், ஆவியும் உள்ளன.

பகவான் - மாயாவாதிகள் பழுதைப் பாம்பு என நினைப்பது மாயை என்றனர். ஆவி உருவத்தை வாழ்க்கை மாயை என்பதற்கு உதாரணமாகக் கூறுகின்றனர். பழுது உள்ளது, பாம்பு உள்ளது. மாயை என்பது இல்லாததை நினைப்பது. இவையிரண்டும் உள்ளது. ஆவி என்பது ஜட உலகுக்குரியதல்லாவிடினும், சூட்சும உலகுக்குரியது. இவை மூன்றும் உள்ளவை என்பதால் மாயாவாத உதாரணங்கள் சரியில்லை.

பக்தன் - சங்கரர், புத்தர்களை வெல்ல மாயாவாதம் பயன்பட்டது. *உலகம் மாயை என்பதை இன்று வெளிநாடுகளிலோ, இந்தியாவிலோ பேச முடியாது.* நெம்பர் 51 சுய ஜீவியம் அஞ்ஞானத்தில் சுய அனுபவம் பெறுவது அகந்தை.

பகவான் - ஜீவியம் என்பது சத்திய ஜீவியத்திற்கு மேலே உள்ளது. சுயஜீவியம் எனில் ஜீவியம் தன் ஆதியான பிரம்மத்தை அனுபவிப்பது. பிரம்மம் ஜீவியத்தில் தன்னை அனுபவிப்பது

அகம், மேல் உலகம். *பிரம்மம் ஜீவியத்தில் புறத்தை அனுபவிப்பது வாழ்வு.* புறம் அஞ்ஞானம், அகம் ஞானம். அஞ்ஞானத்தில் ஜீவியம் தன்னை அனுபவிப்பது அகந்தை.

பக்தன் - உதாரணமில்லாமல் புரியாது.

பகவான் - குடும்பத்தலைவர் கட்சியிலிருந்தால், கட்சியின் இலட்சியத்திற்காகக் குடும்பத்தை நடத்தினால் குடும்பம் கட்சிக்குச் சேவை செய்யும். கட்சித்தலைவர் குடும்பத்தில் கட்சியின் பேரால் தன் சௌகரியத்தை நாடுவது சுயநலம்.

பக்தன் - இரண்டாவது புரிகிறது.

பகவான் - கட்சிக்காகக் குடும்பம், குடும்பத்திற்காகக் கட்சி என்பவை எதிரெதிரான இரு நிலைகள்.

பக்தன் - அது புரியும்.

பகவான் - இருப்பது குடும்பம், பேசுவது கட்சி, நினைப்பது தன்னை, என்றால் மனிதன் சுயநலத்திற்காகக் கட்சியின் பேரால் குடும்பத்தைத் தனக்கு மட்டும் சேவை செய்யச் சொல்கிறான்.

பக்தன் - நடைமுறை புரிகிறது. தத்துவம் எப்படி?

பகவான் - தத்துவமும், நடைமுறையும் புரிவதே சரி. பிரம்மம் அஞ்ஞானத்தில் வந்து சுயமாக உணரும்பொழுது அஞ்ஞானம் அனுபவத்தை அகந்தையாக்கும்.

பக்தன் - பிரம்மம், ஆத்மா, அகந்தை என்ற 3 நிலைகளில் அகந்தை உற்பத்தியான வழி இதுவா?

பகவான் - ஆமாம்.

பக்தன் - 53, ஆன்மாவையும், இயற்கையையும் மேலும் கீழும் அறிவது பூரண ஞானம்.

பகவான் - மேலும் என்பது மேல்மனம். கீழ் என்பது அடிமனம். மேல் மனத்திலுள்ளது இயற்கை. அடிமனத்திலுள்ளது ஆன்மா. வாழ்வில் இயற்கையையும், தவத்தில் ஆன்மாவையும் அறிகிறோம். தவசி அறியும் ஆன்மா வளராத ஆன்மா, ஜீவாத்மா எனப்படும். அதுவும் உள் மனத்திலுள்ளது.





முழுமை என்பது ஆன்மாவும், இயற்கையும் சேர்ந்தது. அதையறிய மேல் மனத்தில் ஆன்மாவையும், அடிமனத்தில் இயற்கையையும் அறிய வேண்டும்.

பக்தன் - புரிகிறது. மேலும் ஓர் உதாரணம் கூற முடியுமா?

பகவான் - கல்லூரி மாணவனுக்கு வாழ்க்கை தெரியாது. படிக்காமல் வாழ்வை வாழ்பவனுக்குப் படிப்பால் உலகை அறியும் திறனிருக்காது. *அதிகம் படித்தவன் வாழ்வில் படிப்பின் பயன் வெளிப்பட வாழ்ந்தால், இரண்டையும் சேர்ந்த முழுமையை அறிவான்.*

பக்தன் - சற்றுத் தெளிவு ஏற்படுகிறது. முழுமை என்னவென்று மனத்தைத் தொடவில்லை. 54 ஐக்கியம், ஞானம், அடிமன அறிவு, அகந்தையின் அறிவு என நால்வகை ஞானம் உண்டு.

பகவான் - வாழ்வில் பல பருவங்கள் உள்ளன. ஊர் என்பதும் பல நிலைகளில் உள்ளது. எதற்கும் பல உருவங்கள் உள்ளது போல ஞானத்திற்கும் 4 அறிவு உண்டு.

1. இறைவனுடன் இரண்டறக் கலப்பது - ஐக்கியம்.
2. அகந்தை அஞ்ஞானத்தால் மேல்மனத்தால் புலன் வழி உலகை அறிவது கடைசி கட்டமான சிற்றறிவு.
3. அடிமனம் அறிவு அஞ்ஞானமானாலும், பிரபஞ்சம் வரை அகன்ற அறிவு.
4. ரிஷியைக் கடந்த யோகி தெய்வ நிலைக்கு முன் புலன் உதவியின்றி நேரடியாக உலகை அறிவது ஞானம்.

பக்தன் - தவிர்க்க முடியாத திருவுரு மாற்றம் பெற சரணாகதியே முக்கியம். இவையிரண்டும் நானறிவேன். இருப்பினும் மேலும் கேட்கப் பிரியப்படுகிறேன்.

பகவான் - கடைசி அத்தியாயத்தின் (56ஆம் அத்தியாயம்) சுருக்கம் இவை. மனிதன் தன்னைப் பகுதியான மனம் என நினைப்பதை மாற்றி முழுமையான சத்திய ஜீவியமாகக் காண்பது யோகம் சித்திப்பது. இரட்டைகளாலான - நல்லது,

கெட்டது; சத், அசத் - சிருஷ்டி பகுதி. *முழுமையானது பிரம்மம்.* கெட்டது நல்லதாக மாறுவது திருவுருமாற்றம். இத்திருவுருமாற்றத்தால் பகுதி, முழுமையாகிறது. கெட்டது நல்லதானால், இனி கெட்டது இருக்காது. எல்லாம் நல்லதாகி விடும். அது முழுமை. மனிதன் பிரம்மமாகத் திருவுருமாற்றம் ஏன் தவிர்க்கப்பட முடியாதது எனில் பகுதி மூலம் சிருஷ்டி ஏற்பட்டது. மீண்டும் முழுமை பெற பகுதிகள் சேர வேண்டும். எதிரானவை சேர்வது திருவுருமாற்றம். அதனால் அது அவசியம்.

பக்தன் - சரணாகதி எப்படி இதைச் சாதிக்கிறது?

பகவான் - வலியவனுக்கு எளியவன் அடங்குவது சரணம். சரணாகதி அதுவன்று. நாம் எதன் பகுதியென நம்மை அறிகிறோமோ, அதுவாக நாம் மாறப் பிரியப்பட்டு அதன் சட்டங்களை நாம் ஏற்பது சரணாகதி.

பக்தன் - நாம் கல்லூரிக்குப் போகும்பொழுது பட்டம் எடுக்க விரும்புகிறோம். எடுத்தவுடன் கல்லூரியை விட்டு வெளிவருகிறோம். கடை, கட்சி, ஆபீஸ், கம்பனி ஆகியவற்றை நாம் நாடும்பொழுது ஒரு காரியத்திற்காக நாம் அதை நாடுகிறோம். அது முடிந்தவுடன் நாம் வெளியே வருகிறோம்.

பகவான் - வாழ்வில் நாம் எதையும் முழுமையாகக் கருதி அதனுடன் ஐக்கியமடைய முயல்வதில்லை. தபஸ்வி இறைவனோடு இரண்டறக் கலக்க முயல்கிறார்.

பக்தன் - இரண்டறக் கலப்பதும், திருவுருமாற்றமும் வேறுபடுமா?

பகவான் - சர்க்கரை நீரில் கரைந்து இரண்டறக் கலக்கிறது. அது திருவுருமாறுவதாகாது.

பக்தன் - வாழ்வில் திருவுருமாற்றத்திற்கு உதாரணமில்லையா?

பகவான் - முழுமையான உதாரணமில்லை. கணவன் மனைவி, நண்பர்கள், உடன்பிறந்தவர்கள், பெற்றோர் பிள்ளைகள் உறவில் அப்படி திருவுருமாறலாம். குருவும் சிஷ்யனும் அந்நிலைக்குரியவர்கள். அவை முழுமையான திருவுரு மாற்றங்களாக முடியாது.





பக்தன் - சரணாகதியை நாம் எவ்வளவு அறிந்தாலும் மனம் குறையாக இருக்கிறது.

பகவான் - பிரம்மம் சிருஷ்டியானது தலைகீழே மாறி சிருஷ்டி பிரம்மமாகும் முறை சரணாகதி. *தன் ஆதியை சிருஷ்டி மீண்டும் அடையப் பயன்படுத்தும் முறை சரணாகதி.*

பக்தன் - சரணாகதியின் முக்கியத்துவத்தை மனம் அறியவில்லை.

பகவான் - படிப்பு கல்வி தரும். கல்வி பகுதி. ஆர்வம் உற்சாகம் தரும். அதுவும் பகுதி. திறமையும் பகுதி. படிப்பு, ஆர்வம், திறமை மூன்றும் சேர்ந்து பெறும் முறை இருக்கிறதா? இருந்தால் அதுவும் முழுமையாகாது. ஏனெனில் ஆன்மா விட்டுப் போகும். அதுவும் சேர்ந்தாலும் முழுமை பெற முடியாது. வளரும் ஆன்மா விட்டுப் போகும். வளரும் ஆன்மாவுக்கு அதுவரை முழுமையுண்டு என்றாலும், ஜீவன் முழுவதையும் தழுவ வளரும் ஆன்மா முழுமை பெற வேண்டும்.

பக்தன் - முழுமை என்பதில் அத்தனை அம்சங்களுண்டா?

பகவான் - அம்சங்கள் சேர்ந்த முழுமை முழுமையாகாது.

பக்தன் - எப்படி?

பகவான் - வீட்டிலுள்ள அத்தனைப் பொருள்களும், மனிதர்களும் சேர்ந்து குடும்பமாகாது. ஒரு மெஷினின் அத்தனைப் பாகங்களும் கூடையில் எடுத்தால் அது மெஷினாகாது. பகுதிகளின் தொகுப்பு உருவம் பெறாது. சரணாகதி நாம் (பகுதி) முழுமை பெறும் மார்க்கம்.

பக்தன் - பகுதி முழுமை பெறுதல் பெரிய விஷயம். அதையே மனம் சத்தியஜீவியமாவது எனக் கூறலாமா?

பகவான் - கூறலாம். மனிதன் இறைவனாகும் முறை சரணாகதி.

பக்தன் - உடலின் இருளை பரமனின் ஜோதியே மாற்ற முடியும் என்பது No. 68.

பகவான் - இருள் உடலில் அடர்ந்துள்ளது. அதைக் கடந்த நிலை ஜடத்தின் இருள். உடலின் இருள் ஜடத்தின் இருளும் ஆகும்.

பக்தன் - மனத்தின் இருளைக் கல்வியால் போக்கலாம் என்பது போன்ற கூற்றா இது?

பகவான் - அறிவு மன இருளை விலக்கும். அனுபவம் உணர்ச்சியை ஒளி மயமாக்கும். உடல் எதற்கும் அசையாது. அதன் இருளைப் போக்கும் சக்தி உலகிலில்லை. அது இறைவன் ஒளி இறங்கி வந்தாலன்றி அசையாது.

பக்தன் - புரிகிறது. ஓர் உதாரணம் உதவும்.

பகவான் - கலவரங்களைப் போலீஸ் அடக்கும். பெரிய கலவரங்களை இராணுவம் அடக்கும். புரட்சியை இராணுவமும் அடக்க முடியாது. புரட்சித் தலைவனுக்கு அது அடங்கும்.

பக்தன் - 67ஆம் நம்பர் திருவுருமாற்றத்தின் நிலைகள் மூன்று.

பகவான் - சைத்தியத் திருவுருமாற்றம், ஆன்மீகத் திருவுருமாற்றம், சத்தியஜீவியத் திருவுருமாற்றம் ஆகிய மூன்று.

பக்தன் - நாமுள்ள நிலையிலிருந்து ஆரம்பித்துச் சொல்ல வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

பகவான் - நாமுள்ள நிலை மேல்மனம். எதைச் செய்ய வேண்டும் என்று சொல்லலாம். எதைச் செய்யக் கூடாது என்பதே முக்கியம்.

பக்தன் - அது அவசியம்.

பகவான் - மேல்மனத்தில் மனிதன் காலத்திற்கும், மனத்திற்கும், அகந்தைக்கும் கட்டுப்பட்டுச் சிறியவனாக இருக்கிறான்.

பக்தன் - அடிமனம் போக என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது?

பகவான் -

1. சிந்திக்காவிட்டால் மனத்தைக் கடக்கலாம்.
2. கடந்ததை, வருவதை நினைக்காவிட்டால் காலத்தைக் கடக்கலாம்.
3. சுயநலமான தற்பெருமையில்லாவிட்டால் அகந்தையைக் கடக்கலாம்.

பக்தன் - இவற்றைச் செய்தால் அடிமனம் போக முடியுமா?





பகவான் - இவை மேல்மனத்தைக் கடக்கும் தகுதி தரும்.

பக்தன் - உள்மனத்தைக் கடந்து தானே அடிமனம் போக வேண்டும்?

பகவான் - தியானம் உள்மனத்திற்கும், சமர்ப்பணம் அடிமனத்திற்கும் அழைத்துச் செல்லும்.

பக்தன் - சைத்தியத் திருவுருமாற அடிமனம் போக வேண்டுமன்றோ?

பகவான் - சமர்ப்பணம் அடிமனத்தில் சைத்தியப் புருஷனை அடையச் செய்யும்.

பக்தன் - அது சைத்தியத் திருவுருமாற்றம்.

பகவான் - அது கல்லூரியில் சேர்வது போன்றது. சைத்தியத் திருவுருமாற்றம் பட்டம் பெறுவது போன்றது.

பக்தன் - மேலும் என்ன செய்ய வேண்டும்?

பகவான் - சைத்தியப் புருஷனை எட்டித் தொட்ட பின், எண்ணம், உணர்வு, செயல் ஆகியவை பூரணமாகச் சமர்ப்பண மானால் சைத்தியத் திருவுருமாற்றம் வரும்.

பக்தன் - இது சுருக்கமா?

பகவான் - ஆமாம். விளக்கமாகக் கூற வேண்டுமானால், இது மனத்தில் ஆரம்பிக்கும். எண்ணம் பூரணமாகச் சமர்ப்பணமானால், **mental psychic** மனத்தில் சைத்தியத் திருவுருமாற்றம் ஏற்படும்.

பக்தன் - அதுபோல் உணர்விலும், உடலிலும் ஏற்பட வேண்டுமா?

பகவான் - ஆம், அங்கு என்ன விசேஷம் என்றால் மனத்தில் ஏற்பட்ட சைத்தியத் திருவுருமாற்றம், உணர்வுக்குப் போகும்பொழுது, கூடவே அது முனிவர் மனத்திற்கு உயரும்.

பக்தன் - முனிவர் மனம் ஆன்மீக மனமாயிற்றே.

பகவான் - அதுவே விசேஷம். மனம் உடலை நோக்கிப் போகும்பொழுது ஆன்மீகத் திருவுருமாற்றம் முனிவர் மனத்தில் ஏற்படும்.

பக்தன் - முனிவர், ரிஷி, யோகி, தெய்வ நிலைகட்குரிய சைத்தியப்

புருஷன் எழுவது, ஆன்மீகத் திருவுருமாற்றம் என்று கொள்ள வேண்டுமா?

பகவான் - ஆம். தெய்வீக மனத்தை இம்மாற்றம் கடப்பது சத்திய ஜீவியத் திருவுருமாற்றம்.

பக்தன் - மேலே அது நடக்கும்பொழுது கீழே உடலிலிருந்து சைத்தியப் புருஷன் வெளிவருவானல்லவா?

பகவான் - மேலே சத்திய ஜீவியத்தையடைவதும், உடலைக் கீழே தொடுவதும் ஒரே சமயத்தில் நடக்கும்.

பக்தன் - இவை மூன்று திருவுருமாற்றங்களுக்குரிய சுருக்கம். 67. பிரம்மம் நம்முள் ஜனித்த பின் பிறருள் ஜனிக்க உதவுவது சேவை.

பகவான் - பிரம்மம் நம்முள் ஜனிப்பது என்பது 3 திருவுரு மாற்றங்களும் நம்முள் முடிவது.

பக்தன் - அதன் அடையாளங்களில் சில......

பகவான் - மேல்மனம் அடிமனமாவது

புலன் உதவியின்றி மனம் செயல்படுவது

இதுவரை எரிச்சல் உண்டுபண்ணிய மனிதர் சந்தோஷம் தருவது

அளவு கடந்த சக்தி உள்ளிருந்து எழுவது

வாழ்வு முழுவதும் கண்ணெதிரில் தோன்றுவது

பூர்வ ஜென்ம நினைவு

ஆயுள் நீள்வது.

பக்தன் - பிறருக்குத் தருவது என்றால்?

பகவான் - *நாம் பெறுவது முதல், தர முடிவது அடுத்தது, தருவது முடிவானது.*

பக்தன் - பெற்றால் தர முடியாதா?

பகவான் - பெற்றது பூரணம் பெற்றால் தர முடியும்.

பக்தன் - முடிந்தாலும், தருவதற்கு நிபந்தனையுண்டா?

பகவான் - கேட்டால் தரலாம்.





பக்தன் - கேட்காமல் தரக் கூடாதா?

பகவான் - ஆத்மத் தகுதியிருந்தால் மறுத்தாலும் தரலாம்.

பக்தன் - சாதாரணமாகத் தரும் நிலைகள் எவை?

பகவான் - நமக்குத் தகுதியிருந்தால் பெறுபவர் நம்மை நாடி வருவார்.

பக்தன் - வேறு என்ன நிபந்தனைகள் உண்டு?

பகவான் - ஒரு வகையாகப் பார்த்தால் நிபந்தனைகள் ஏராளம். அடுத்த நோக்கில் எந்த நிபந்தனையுமில்லை.

பக்தன் - 65ஆம் நம்பரில் ஆன்மா வளரும்பொழுது உடலும் வளர்ந்தால் உடலை புனர் ஜன்மத்தால் மாற்ற வேண்டாம் என்பதும், நம்பர் 67.உம் ஒன்றுதானே.

பகவான் - விஷயம் ஒன்றே. அங்குச் சேவை மூலமும், இங்கு புனர் ஜென்மம் மூலமும் கூறுகிறோம்.

பக்தன் - 64. கர்மம் சக்திக்கு, ஜீவனுக்கில்லை.

பகவான் - ஜீவனிலிருந்து ஜீவியமும், ஜீவியத்திலிருந்து சக்தியும் பிரிகின்றன.

- சக்தியைப் பிரிக்கலாம்.
- ஜீவனைப் பிரிக்க முடியாது.

பக்தன் - வீட்டைப் பிரிக்கலாம், குடும்பத்தைப் பிரிக்க முடியாது என்பது போலவா?

பகவான் - ஆம். Traffic rules நமக்கு. முதல்வருக்கும், கவர்னருக்குமில்லை.

பக்தன் - ஆபீசருக்கு லீவுண்டு. மந்திரிக்கு லீவு என்பதில்லை. காரணம் காரியமானால் கர்மம் உண்டு, இல்லை என்றால் கர்மமில்லை என்பது சட்டமா?

பகவான் - கர்மம் காலத்திற்குரியது. ஜீவன் காலத்தைக் கடந்தது. அதனால் கர்மம் ஜீவனைப் பாதிக்காது.

பக்தன் - உதாரணம்

பகவான் - வக்கீலுக்கும், கட்சிக்காரனுக்கும் வெற்றி தோல்வியுண்டு. ஜட்ஜுக்கு இல்லை. துறவிக்கு வேந்தன் துரும்பு.

பக்தன் - 55 முதல் 61 முடிய மேல்மனம், ஏழு வகை அஞ்ஞானங்கள், தீமை, இரண்டையும் உட்கொண்ட பிரம்மம், கடந்ததை விலக்காத வாழ்வு, பாதாளம் ஆகியவற்றைப் பற்றியவை.

பகவான் - இதுவரை மனிதன் வாழ்ந்த வாழ்வு வேட்டையைப் பெரியதாக்கிய வாழ்வாகும். வருவதைக் கடந்ததுடன் ஒப்பிட முடியாது.

பக்தன் - ஆசாரத்தை அனாசாரமாக அறிய அறிவிருந்தும் மனிதன் அதைப் பெரிதாகக் கருதுகிறான்.

பகவான் - அனாசாரம் வசதியானால் அதை ஏற்றுப் போற்றுவான்.

பக்தன் - கிராப்பு, காபி, பஸ், ஹோட்டல், **dye**, சென்ட், சுரிதார், பைப் வாட்டர், **modern medicine, loud speaker** போன்ற அனாசாரங்களைக் கைவிட்டு, ஒருவர் ஆசாரம் பேசினால், பேசுவது சரியாகும், ஏற்க முடியாது. தமக்குச் சௌகரியமான அனாசாரங்களை ஏற்றுக் கொண்டு ஆசாரம் பேசுவது சரியில்லை. மேற்சொன்ன பெரிய விஷயங்களை மனம் அறிய அந்த அளவாவது உண்மை வேண்டும்.

பகவான் - ஆசாரமும் பிரச்சினையில்லை, அனாசாரமும் பிரச்சினையில்லை. பிரச்சினை மனத்தின் உண்மையில் இருக்கிறது. நாம் கூறும் உண்மை மேல்மனத்திற்குரியது. உண்மை அடிமனத்திற்குரியது. அடிமனம் அறியாமை மனம் என்றாலும் அது பரமாத்மாவுடன் தொடர்புள்ளது என்பதால் அடிமனத்தில் பரமாத்மாவும் உண்டு.

பக்தன் - அடிமனத்தில் இந்த இருநிலைகள் உண்டென்பதை நான் இதுவரை கருதவில்லை.

பகவான் - மேற் சொன்ன எல்லாக் கருத்துகளும் முக்கியமானவை. அவை விளங்க அடிமனத்தை அறிவது முக்கியம்.

1. அறியாமை என்பது அறிவிலிருந்து எழுவது என்பதால் அறிவைக் கடந்தது என்ற பொருளில் அறிவைவிட உயர்ந்தது.
2. பரந்த அடிமனத்தில் ஞானம் பூர்த்தியாகாது என்பது போல் அறியாமையும் பூர்த்தியாகாது. அதனால் குறுகிய மேல் மனத்தை ஏற்படுத்தி அங்கு அறியாமையைப் பூர்த்தி செய்கிறது.
3. அடிமனத்தில் பாதாளமும், பரமாத்மாவும் சந்திப்பதால் பரமாத்மாவால் பாதாளத்தை ஒளிமயமாக்குவது நம் கடன்.
4. பரமாத்மாவையும், ஜீவாத்மாவையும் உட்கொண்ட பிரம்மமே முழுமை என்பது மரபிலில்லாதது. அதை சத்திய ஜீவியம் காணும் மனம் காணாது.
5. பிரபஞ்ச அஞ்ஞானம் அழிய அகந்தை அழிய வேண்டும். அதன் மூலம் ஆதியின் அஞ்ஞானமும் அழியும்பொழுது பரமாத்மாவையும், ஜீவாத்மாவையும் உட்கொண்ட பிரம்மம் சித்திக்கும்.
6. அகந்தை அழிந்தவுடன் தீமை அழிகிறது. *அகந்தையே தீமையைக் காண்கிறது. தீமை சிருஷ்டிக்கப்பட வில்லை.*
7. வாழ்வு பூரணம் பெற எதையும் விலக்கக் கூடாது. கடந்ததையும் (transcendent) விலக்கக் கூடாது.

பக்தன் - இத்துடன் தத்துவங்கள் முடிந்தாலும், நூலிலுள்ள இதர 1000 சிறு கருத்துகளையும் இதேபோல் விளக்கிக் கூறவேண்டும்.

பகவான் - கூறலாம், கேட்பது பயன் தரும். பயனடைய இதுவே போதும். அதையும் கேட்டுச் செயலால் பயன்பட முயன்றால் வாழ்வு யோக வாழ்வாகும்.

⌘ ⌘ ⌘

# இரண்டு புத்தகங்கள் மூன்று பாகங்கள் 56 அத்தியாயங்கள்

1. முதல் எட்டு அத்தியாயங்கள் மனிதனுள் உள்ள முரண்பாடுகள்; ஜடம், ஆன்மாவுக்குள்ள முரண்பாடு; பாதாளம், பரமாத்மாவுக் குள்ள முரண்பாடு; பிரபஞ்சம், ஜீவாத்மாவுக்குள்ள முரண்பாடு; முரண்பாட்டின் ஆரம்பமான அகந்தை; அறிவுக்கும் புலனுக்கும் உள்ள முரண்பாடு பற்றியவை, நூலுக்கு முன்னுரையாக அமைந்துள்ளது.

2. அடுத்த நான்கு அத்தியாயங்கள் சத் பிரம்மம், சித் - சக்தி, ஆனந்தமும், அதன் சிக்கல் அவிழுவதுமானவை.

3. சிருஷ்டியை 5 அத்தியாயங்களில் மாயை, சத்திய ஜீவியம், மனம் எனப் பிரித்து விளக்குகிறார்.

4. வாழ்வு, மரணம், வாழ்வின் சிக்கல், வாழ்வின் பரிணாமம் அடுத்த 4 அத்தியாயங்கள்.

5. *ஸ்ரீ அரவிந்தத்திற்கேயுரிய சைத்தியப் புருஷன் அடுத்த ஓர் அத்தியாயம்.*

6. மனம் புலன் வழி ஆன்மாவைக் கண்டு ஜடத்தை சிருஷ்டித்ததும், அஞ்ஞானம், தமோ குணம், பிரிவினையால் ஜடம் கட்டுண்டதும் அடுத்த இரு அத்தியாயங்கள்.

7. சத், சித், ஆனந்தம், சத்திய ஜீவியம் தலை கீழே மாறி ஜடம், சைத்தியப் புருஷன், வாழ்வு, மனமானதும், பரிணாமமும் அடுத்த இரு அத்தியாயங்கள்





8. 28ஆம் அத்தியாயம் முனி, ரிஷி, யோகி, தெய்வநிலைகளைப் பரிணாமத்தால் எட்ட ஸ்ரீ அரவிந்தர் கண்ட ஆன்மீகப் பாதையை விவரிப்பது.

⌘ ⌘ ⌘

9. இரண்டாம் புத்தகத்தில் முதல் அத்தியாயம் பிரம்ம சிருஷ்டி, பிரபஞ்ச சிருஷ்டி, இரண்டாம் அத்தியாயம் பிரம்மத்தின் முழுமையை, பிரம்மம், புருஷா, ஈஸ்வரா மூலமும், மூன்றாம் அத்தியாயத்தில் பரமாத்மா, ஜீவாத்மா, அகந்தை மூலமும், நான்காம் அத்தியாயத்தில் **positive, negative** என்ற இரட்டைகள் மூலமும் கூறுகிறார்.

10. ஐந்து, ஆறாம் அத்தியாயங்கள் மாயை என்பது இல்லாதது இல்லை, அஞ்ஞானமே எனக் கூறுகின்றன.

11. ஏழு, எட்டு அத்தியாயங்கள் அஞ்ஞானத்தில் ஆத்மா சுய - அனுபவம் பெற்று அகந்தை ஆகிறது என்பதை ஞாபகம் மூலமாகக் கூறுகிறார்.

12. நூலின் மையமான அஞ்ஞானம் - ஞானம் என்பது அடுத்த அத்தியாயம். பத்தாம் அத்தியாயம் ஞானத்தின் 4 வடிவங்கள்.

13. பதினொன்று, பன்னிரண்டு அத்தியாயங்கள் அஞ்ஞானத்தின் வகைகள், ஆரம்பம். பதின்மூன்று அஞ்ஞானம் மேல்மனத்தில் முழுமை பெற்று ஞானத்தை விடப் பெரியதாவது.

14. தீமை - தீமை என்பது வேறுபாடு குதர்க்கமாக மாறுபாடான வரலாறு.

⌘ ⌘ ⌘

15. இரண்டாம் புத்தகத்தின் இரண்டாம் பகுதி பரிணாமம். இனி அஞ்ஞானமில்லை. பரமாத்மாவையும், ஜீவாத்மாவையும் உட்கொண்ட பிரம்மம் முதல் அத்தியாயம். அதை வெளிப்படுத்துவதே பூரண வாழ்வு என்பது இரண்டாம் அத்தியாயம்.

16. பாதாளமும், பரமாத்மாவும் மனிதனில் இணைவது 3ஆம் அத்தியாயம். சேர்ந்தவை உயர்வது 4ஆம் அத்தியாயம். 7 வகை அஞ்ஞானங்கள் 7 வகை ஞானங்களாவது 5ஆம் அத்தியாயம்.

17. 6, 7, 8 புனர் ஜென்மம்.

18. 9, 10 மனிதன் ஆன்மீக மனிதனாவது.

19. மூன்று திருவுருமாற்றம் மூலம் சத்தியஜீவியத்தை அடைந்து, சத்தியஜீவனாவது அடுத்த 11, 12, 13 அத்தியாயங்கள்.

20. 56ஆம் அத்தியாயம் இப்பகுதியில் 14ஆம் அத்தியாயம். இது நூலின் சுருக்கமான "தெய்வீக வாழ்வு."

⌘ ⌘ ⌘





# சிருஷ்டியும், பரிணாமமும் - பிரம்ம ஞானம் பிரம்மார்ப்பணத்தால், பிரம்ம ஜனனமாகிறது

காலத்தைக் கடந்த, அனாதியான, பிரம்மம் முழுமுதற் கடவுள். குணங்களைக் கடந்து நிர்க்குணீ எனவும், ரூபத்தைக் கடந்து அரூபி எனவும் நாம் அவனை அறிவோம். நாமறியும் பிரம்மம் சச்சிதானந்தம். நாம் மனத்தால் பிரம்மத்தை அறிய முயல்வதால், பிரம்மம் புலப்படாது. புலன்கட்குப் புலப்படாத பிரம்மம் மனத்திற்குச் சமாதியில் சச்சிதானந்தமாகப் புலப்படுகிறது. பிரம்மம் அதையும் கடந்தது. மனத்திற்குப் புலப்படாத பிரம்மம் சத்தியஜீவியத்திற்குப் புலப்படும். சத்தியஜீவியத்திற்குப் புலப்படும் பிரம்மம் முழுமையுடையது. பிரம்மத்திற்குத் தேவையெனயொன்றில்லை.

**ஆனந்தத்தை நாடி பிரம்மம்<br>உலகை சிருஷ்டித்தது.**

ஆனந்தம் கண்டுபிடிப்பதிலுள்ளது. பிரம்மம் அனைத்தையுமறியுமாதலால், எதைக் கண்டுபிடிக்கவும் பிரம்மம் முயலலாம். பிரம்மம் கண்டுபிடிக்கக் கூடியதொன்றில்லை. எனவே தான் மறைந்து, மறைந்த பின் தன்னைக் கண்டுபிடிக்க பிரம்மம் முடிவு செய்தது. எல்லாம் பிரம்மம் என்பதால், பிரம்மம் எங்கு போய் மறையும்? தன்னுள்ளே தான் மறைய பிரம்மம் முடிவு செய்தது. தன்னுள் மறைந்த பிரம்மம், முழுமையாக மறைந்தால், மறைந்தது மறந்து விடும். மறந்த பின் நினைவு கூர்வது தன்னைத் தான் காண்பது. அதுவே பிரம்மம் அனுபவிக்க முடிவு செய்த ஆனந்தம்.

முழுமையான பிரம்மம் தன்னுள் தான் மறைய இரு பகுதிகளாயிற்று. நாம் அவற்றை சத், அசத் என்று அறிவோம். சிருஷ்டி சத்திற்குரியது. பரிணாமத்தில் அசத் முழுமை பெறுகிறது. சத் 4, 5 வகைகளாகத் தன்னை வெளிப்படுத்தி சிருஷ்டியை சாதிக்கிறது. சத் சித் ஆனந்தமாக மாறுவதை நாம் சச்சிதானந்தம் என்கிறோம். சத் புருஷன் பிரம்மா, புருஷா, ஈஸ்வரா எனப் பிரிவது அடுத்த கட்டம். சத் என்ற அகம் சத்தியம் என்ற புறமாகி,

அதனிடையே ஆத்மாவை ஏற்படுத்துவது அடுத்தது. காலம், இடம் சத்புருஷனுடைய அகம், புறமாக வெளிப்படுகின்றன. சத், சித், ஆனந்தம் என்ற அகம் சத்தியம், ஞானம், அனந்தமென்ற புறமாவதால் அவை சேர்ந்து சத்தியஜீவியமாயின. சத் என்ற ஒன்று பலவான ஜீவாத்மாக்களானது பிரபஞ்சம் சிருஷ்டிக்கப்பட்ட வகை.

சத்தியஜீவியம் காலத்தைக் கடந்தது, காலத்திற்குட்பட்டது என இரண்டாகப் பிரிந்து இடையே மனம் அதன் உபகருவியாக ஏற்படுகிறது. சத்தியஜீவியத்திற்கு முழுமையுண்டு என்பதால் அது பிரம்மத்தையும், சிருஷ்டியையும், எதையும் முழுமையாகக் காணும். மனம் பிரிக்கும் கருவி. அதற்கு முழுமையில்லை. அதனால் ஓர் அம்சம், ஒரு பகுதியை மட்டும் ஒரு சமயம் காண முடியும். சத்தியஜீவியம்போல் முழுப் பார்வையுள்ளதன்று மனம். இருபிரிவுகட்கிடையே உற்பத்தியான மனம், மேற்பகுதியையும், கீழ்ப் பகுதியையும் மாறிமாறிப் பார்க்கும் திறனுடையது. இரண்டு பகுதிகளையும் ஒரே சமயத்தில் காண முடியாவிட்டாலும், மாறி மாறிப் பார்த்து முழுமையை முடிக்க முடியும்.

மனம் ஒரு பகுதியை மட்டும் காண முடிவு செய்தால், அடுத்த பகுதியைக் காண மறுத்தால், மறுப்பால் அஞ்ஞானம் எழுகிறது. மேற்பகுதியைக் காண முடிவு செய்த துறவி, வாழ்வைப் பார்க்க மறுக்கிறான். வாழ்வை ஏற்ற மனிதன் ஜோதியைக் காண மறுக்கிறான்.

மறுப்பு, அஞ்ஞானத்தின் ஆரம்பம்.

பிரம்மத்தின் முழுமையை அதனுடன் இரண்டறக் கலந்து பெறுவது பிரம்ம ஞானம். பிரம்மம் மறப்பது ஆதியின் அஞ்ஞானம். ஞானமான பிரம்மம் ஜடமான அஞ்ஞானமாக படிப்படியாக பிரம்மம், பிரபஞ்சம், உலகம், காலம், மற்ற லோகங்கள், ஜீவனின் மற்ற பகுதிகளை மறந்து எழுவகை அஞ்ஞானம் பெற்று முடிவில் ஜடமாகிறது. பரிமாணத்தால் இவ்வெழுவகை அஞ்ஞானங்கள், எழுவகை ஞானங்களாகும்.

மனம் தன் புலன் வழி ஆன்மாவைக் காண்பதால், ஆன்மா ஜடமாகக் காட்சியளிக்கிறது. மனத்தின் இருபகுதிகள் ஞானம், உறுதி. ஞானம் உறுதி மேல் செயல்படுவதால் சக்தி பிறந்து வாழ்வாகிறது. சக்தி சலனமிழந்து, ரூபம் பெற்று ஜடமாகிறது. ஜடத்துடன் சிருஷ்டி முடிகிறது.

உலகை சிருஷ்டித்தவர் பிரம்மா என்பது மரபு. பிரம்மா தெய்வலோகக் கடவுள். தெய்வலோகம் (overmind) மனத்தைச் சேர்ந்தது. பிரம்மா உலகை





சிருஷ்டித்தார் எனில் மனம் சிருஷ்டித்தது என்றாகும். மனம் பகுதியானது என்பதால் முழுமையான உலகை அதனால் சிருஷ்டிக்க முடியாது. சத்திய ஜீவியம் அடுத்தது. சச்சிதானந்த முழுமை ஐக்கியமானது என்பதால், உலகில் உள்ள ஏராளமான பொருள்களை ஐக்கியம் சிருஷ்டிக்க முடியாது. சத்திய ஜீவியம் முழுமையை இழக்காமல் பிரிந்து நிற்கும் பெருமையுடையது. அதனால் சத்திய ஜீவியம் உலகை சிருஷ்டித்தது என அறிகிறோம்.

முழுமையான பிரம்மத்தை மனம் ஆத்மா, புருஷா, ஈஸ்வரா எனப் பிரித்து 3 ஆகக் காண்கிறது. அவை மூன்றும் பிரம்மத்தின் அம்சங்கள். தனித்தனியானவையில்லை. பரமாத்மா, ஜீவாத்மா, அகந்தை என்ற மூன்று நிலைகளும் சத்திய ஜீவியம் பிரம்மத்தின் தோற்றங்களாக்குவதால், அவை மூன்றும் ஒன்றே, ஒரே பிரம்மமே. **Positive, negative** நல்லது கெட்டது என நாம் உலகைப் பிரிக்கிறோம். உலகம் என்பது ஒன்றே. நமக்கு இரு பிரிவுகளாகத் தோன்றுகிறது.

இறைவன் ஞானம். அஞ்ஞானமாக மாறி அவன் மறைய முயன்றபொழுது, அஞ்ஞானத்தைப் பூர்த்தி செய்ய, மேல்மனத்தில் அஞ்ஞானத்தை மனம், காலம், அகந்தையுள் பொருத்தினான். அஞ்ஞானம் பூர்த்தியாயிற்று. அது வக்ரமாகி தீமையாயிற்று. இறைவன் தீமையைப் படைக்கவில்லை.

ஜீவாத்மாவும், பரமாத்மாவும் பகுதிகள். அவற்றை தன்னுட் கொண்ட பிரம்மமே முழுமை. அம் முழுமையான பிரம்மத்தை வெளிப்படுத்தும் வாழ்வே முழுவாழ்வு. இம் முழுவாழ்விலும் பாதாளமும், பரமாத்மாவும் முழுவதும் இணைவதில்லை என்பதால், மனிதன் தன் ஆத்மாவில் அவற்றை இணைத்து, இணைத்ததை இறை நிலைக்கு உயர்த்தி, எழுவகை அஞ்ஞானங்களை, எழுவகை ஞானங்களாக மாற்றி, ஆன்மாவை விடுதலை செய்கிறான்.

விடுதலை பெற்ற ஆன்மா பரிணாம வளர்ச்சி பெற
பல ஆயிரம் பிறவிகள் தேவை.

பல பிறவிகளில் ஆன்மா பரிணாம வளர்ச்சி பெற்று மனிதன் பிறக்கிறான். இவனது ஆன்மா பெற்ற வளர்ச்சியை, வாழ்வும், மனமும், உடலும் பெறும் பொழுது, மனிதன் மறுபிறவி எடுக்க வேண்டியதில்லை. அப்படி ஆன்மீக மனிதன் எழுகிறான். இனி அவனுக்குத் திருவுருமாற்றமுண்டு. அது 3 நிலைகளில் சைத்தியத் திருவுருமாற்றம், ஆன்மீகத் திருவுருமாற்றம், சத்திய ஜீவியத் திருவுருமாற்றம். இவை முடிவு பெற உடலின் இருள் திருவுருமாற வேண்டும். அது பரமாத்மாவால் நடைபெற வேண்டும். அதுவும் முடிந்த பின்

சத்திய ஜீவன் பிறக்கிறான். அதனது பூவுலக வாழ்வு தெய்வீக வாழ்வெனப் படும்.

தான் மனமில்லை, சத்திய ஜீவியம் என அறிந்த மனிதன் முழுமையைப் பெற, அகந்தையை இழந்து, பிரபஞ்சம் எங்கும் பரவி, அகத்துள் நிலைபெற்று, பிரம்மத்தை முழுமையாக அறிந்து, ஜடத்தை ஆன்மாவால் ஆளும் திறமை பெற வேண்டும். இவை திருவுருமாற்றத்தால் நடக்கும். அதற்குச் சரணாகதி இன்றியமையாதது. அவ்வாழ்வு எளிமையாகவோ, ஆடம்பரமாகவோ இருக்கும். இது நூலின் கடைசி அத்தியாயம் நெம்பர் 56.

சச்சிதானந்தம் மாயையால் மனம், வாழ்வு, உடல் என்ற உலகை சிருஷ்டித்துப் பரிணாமத்தால் பிரம்மத்தை அடைய அது தேடும் மார்க்கம் முரண்பாடு. ஜடத்திற்கும் ஆன்மாவுக்கும் உள்ள முரண்பாடு, பிரபஞ்சத்திற்கும் ஜீவாத்மாவிற்கும் உள்ளது, பரமாத்மாவுக்கும் பாதாளத்திற்கும் உள்ளது, அறிவுக்கும் ஞானத்திற்கும் உள்ளது, உடலுக்கும் வாழ்வுக்கும் உள்ள முரண்பாடு, வாழ்வுக்கும் மனத்திற்கும் இடையேயுள்ள முரண்பாடு, மனத்திற்கும் சத்திய ஜீவியத்திற்கும் உள்ளது ஆகியவை உடன்பாடாக பரிணாமம் பயன்படுகிறது. நூலை, சச்சிதானந்தத்தில் ஆரம்பிக்கும் முன் இவ்வகை முரண்பாடுகளை 8 அத்தியாயங்களில் நூலுக்கு பகவான் முன்னுரையாகக் கூறுகிறார்.

⌘ ⌘ ⌘